Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1325)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 13 புதன்கிழமை (25.04.2012) பக்கங்கள் 20 ஓசை - 208




அதுக்கெல்லாம் திராணி வேண்டும்! (18)

தண்ணீரின்றி பெண் பலி



(16)



அயலவரை புறக்கணிக்க முடியாது (12)

இதயம் நோகலாமா?



(11)


6 மாதத்தில் தயாராகும்...



(09)


# இந்தியப் பிரதமருடன் சுஷ்மா பேச்சு

## இலங்கை தொடர்பாக மந்திராலோசனை





(புதுடில்லி)

இலங்கையின் பிந்திய அரசியல் நிலைவரம் தொடர்பாகவும் யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையின் வடபகுதியில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்தும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் குறித்தும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில்

(19) ஆம் பக்கம் பார்க்க

# கைதிகள் கைகலப்பு

## ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் ஒரு கைதி மற்றுமொரு கைதியைத் தாக்கிய சம்பவத்தில் படுகாயமடைந்த கைதி, சிறைச்சாலை அதிகாரிகளினால் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொட்டடியைச் சேர்ந்த 21 வயதுடைய குறித்த கைதி தலைப்பகுதியில் படுகாயமடைந்த நிலையிலேயே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து யாழ். சிறைச்சாலை அதிகாரிகளினால் யாழ். பொலிஸாரிடம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# சீரற்ற காலநிலை தொடர்ந்தும் நீடிக்கும்

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது வடபகுதியில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வன்னி மற்றும் யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் நேற்று கனமழை பெய்தது. தொடர்ந்தும் இக்காலநிலை நீடிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப் பகுதியில் நேற்று நண்பகல் 12.30 மணி தொடக்கம் பெய்த கனமழை காரணமாக அப்பகுதியில் மழை வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. இதனால்

(19) ஆம் பக்கம் பார்க்க

# தென்கொரியாவுடன் வலுவடையும் உறவு

## புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(செயுவெல்)


பாதுகாப்பு மற்றும் அரச நிர்வாக விடயங்களில் தகவல் தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்வது உட்பட 3 தனித்தனியான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இலங்கையும் தென்கொரியாவும் கைச்சாத்திட்டுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் தென்கொரிய ஜனாதிபதி லீ மயூங் பங் ஆகியோர் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான மேற்படி மூன்று புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளனர். தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கும், தென்



கொரியாவின் அரச நிர்வாக மற்றும் பாதுகாப்பு விவகார அமைச்சுக்கும் இடையிலான தகவல் தொழில்நுட்ப பரிமாற்றம்

(19) ஆம் பக்கம் பார்க்க



# இளைஞன் வெட்டிக்கொலை வடமராட்சியில் பயங்கரம்

(வடமராட்சி)

வடமராட்சியில் உள்ள வதிரிச் சந்தியில் இளைஞர் ஒருவர் நேற்று மாலை வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் வதிரிச் சந்தியிலிருந்து பழைய நீதிமன்றம் நோக்கி துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த சமயம், திடீரென மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தலையில் கட்டையால் அடித்துள்ளனர். கட்டையால் அடித்தவுடன் குறித்த இளைஞன் துவிச்சக்கரவண்டியை கீழே போட்டுவிட்டு தப்பியோடியபோதும், பின்னால் மோட்டார் சைக்கிளில் துரத்திச்சென்ற இனந்தெரியாத

(19) ஆம் பக்கம் பார்க்க

# அரசுடனான பேச்சு மத்தியஸ்தராக ஹக்கீம்

## கூட்டமைப்பு தயார்

(கொழும்பு)

அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடந்தால் அதன்போது மத்தியஸ்தராக செயற்படுவதற்கு ரவூப் ஹக்கீமை மத்தியஸ்தராக ஏற்றுக்கொள்ளத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமை மத்தியஸ்தராக ஏற்றுக் கொள்ளத் தயார் என கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை எதிர்காலத்தில் தொடர்வதற்கு ஹக்கீமை

(19) ஆம் பக்கம் பார்க்க

# அக்ஷய திருதியை களைகட்டியது யாழ்.நகரம்

(யாழ்ப்பாணம்)

அக்ஷய திருதியை முன்னிட்டு நேற்று யாழ். நகரில் உள்ள தங்க நகைக் கடைகளில் காலை 7.00 மணி தொடக்கம் இரவு 8.30 வரை மக்கள் ஆர்வத்துடன் தங்க ஆபரணங்களை கொள்வனவு செய்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

உலகின் வரட்சியை நீக்கி நல்ல விளைச்சலையும் ஐஸ்வர்யத்தையும் தருவதற்காக புனித கங்கை நதியானது சிவபெருமானின் ஆணைப்படி பூமிக்கு வந்து பசுமையும், ஐஸ்வர்யத்தையும் உண்டாக்கிய நாள் மற்றும் வேதவியாசகர் விநாயகப் பெருமானுடன் சேர்ந்து மகாபாரதத்தை எழுத ஆரம்பித்த தினம் மற்றும் கிருஷ்ணபிரான் பஞ்சபாண்டவர்களுக்கு என்றுமே அள்ள அள்ள குறையாத அக்ஷய பாத்திரத்தினை வழங்கிய நாளையே அக்ஷய திருதியையாக கொண்டாடப்படுகின்றது.

இந்த நாளில் ஐஸ்வர்யத்தின் உன்னத குறியீடான தங்கத்தினை வாங்குபவர்களுக்கு, ஐஸ்வர்யம் அதிகரித்துக் கொண்டே

(19) ஆம் பக்கம் பார்க்க

# எயிட்ஸ் நோய் 3000 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் 3000 இற்கும் அதிகமானோர். எச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் எச்.ஐ.வி. நோயாளர்கள் பட்டியலில் தினமும் ஒரு நோயாளி புதிதாக இணைவதாக வைத்தியப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபரங்கள் தொடர்பிலான அவதானிப்புகள் எயிட்ஸ் தடுப்பு பிரிவுத் தலைவர் வைத்தியர் நிமல் எதிரிசிங்கவால் இனங்காணப்பட்டதுடன், அண்மையில் எயிட்ஸ் தொடர்பில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் இத் தகவல் வெளியிடப்பட்டது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# தொடர்ந்தும் சரிகிறது ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்று வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

வரும் மே மாதம் தொடக்கம் இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்க்கான கொடுப்பனவுகளை அமெரிக்க டொலரில் வழங்குவதில்லை என இலங்கை மத்திய வங்கி முடிவு செய்துள்ளது. இதன்காரணமாக இலங்கை ரூபாவின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் நேற்றுக் காலை முதலீட்டாளர்கள் டொலரை வாங்குவதற்கு முண்டியடித்தனர். இதனால் நேற்றுமுன்தினம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் இலக்கியத்தில் கம்பராமாயணத்திற்கு தனியிடம்

## யாழ். நகரமேயர் கம்பன் விழாவில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் காப்பியங்களில் கம்பராமாயணத்திற்கு தனித்த இடமுண்டு. கம்பனின் தன்னலமற்ற, தன்னிகரற்ற படைப்பாகக் கம்பராமாயணம் விளங்குகின்றது. வால்மீகி ஆக்கிய வடமொழியின் மூலத்தின் சார்பினைக் கம்பராமாயணம் பெற்றிருந்தபோதும அது மொழிபெயர்ப்பாகவோ அலலது தழுவலாக மட்டும் அமையவில்லை. அதனைத் தாண்டி அது தனிப்பெரும் படைப்பாக மூலத்திலிருந்து செம்மைப்பட்டதாக, தமிழ், கலாசார சூழல் வாய்ந்ததாக, தமிழ் இலக்கிய நெறிப்பட்டதாகக் கம்பரால் படைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு நல்லூரில் இடம்பெற்ற கம்பன் விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும் போது,

கம்பனைப் பயிலும் போதெலலாம் அவன் கவிதைத்திறன் மட்டுமன்றி அவனுடைய அரசியல், சமூகக் கருத்துக்கள் என்னை வியப்பில் ஆழ்த்துவதுண்டு. அந்தக் கருத்துக்கள் அவன் கலை உணர்வுக்குள் கட்டுப்பட்டுக் கிடக்காமல் அவனுக்குப் பின்னால் எத்தனையோ நூற்றாண்டு காலம் கடந்து தோன்றிய புதிய முற்போக்குக் கருத்துக்களோடு ஒத்துக் காணப்படுவது என் வியப்பை அதிகரிக்கிறது. காலத்தால் அழிக்க முடியாத காவியமாகக் கற்போர் மனதினைக் கொள்ளை கொள்ளும் நல்ல இலக்கியமாகக் கம்பராமாயணம் திகழ்வதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கம்பனின் கற்பனை மனிதன் தெய்வமாகலாம் என்பதை அடிப்படையாகக் கொண்டது. இராமன் மனிதனாகவே வாழ்ந்து காண்பவர்கள் யாவருக்கும் தெயவமாகக் காட்சி தருகிறான். பெற்றோர், பெரியவர்கள், குருமார்கள் மீது இராமன் வைத்திருந்த மரியாதை இன்று தேவைப்படுகின்றது. தேடுகிறோம் கிடைக்கவில்லை. நல்ல கல்வியும் நல்லவர்கள் ஆசியும் தேடிப் பெறப்படல் வேண்டும்.

உடன் பிறந்தவர்கள் மட்டும் சகோதரர்கள் அல்ல, உண்மை அன்பினால் சகோதரத்துவம் வளரும். இந்த அடிப்படையில்



இராம காவியம் சடாயு, சபரி போன்ற பாத்திரங்களையும் காப்பிய நாயகன், வேடன் குகனையும் குரங்கினத் தலைவன் சுக்கீரிவனையும், அரக்கன் விபிஷனையும் உறவுகள் ஆக்கிய பண்பை வேறு எந்த இலக்கியத்திலும் காணமுடியாது.

ஒரு நல்லரசில் என்னென்ன இருக்கவேண்டும் என்று பிற்காலத்து அரசியல் தத்துவஞானியர் எடுத்துரைத்தாரோ அவற்றையெல்லாம் தன் இலட்சிய அரசு பற்றிய கற்பனையில் கம்பன் அமைத்துக் காட்டுகின்றான். அவனது கற்பனை ஈழத்தில் மக்கள் ஐக்கியம் மிளிர உதவும் காலம் விரைந்து வருவதற்கு உந்துசக்தியாக அமையட்டும். பேச்சு சுதந்திரம் இழக்கப்பட்டு நல்லூரில் கேட்ட இலக்கிய ஒலி மறைந்துபோன காலம் மாறி, மீணடும் கம்பனின் தமிழோசையை நல்லூரில் கேட்பதற்குக் காலம் ஏற்படுத்தித் தந்த மாற்றத்தை நல்ல முறையில் பயன்படுத்துவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய கட்டடம் திறப்பு


காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவிற்கான கட்டடம் ஒன்றினை காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த வினாசித்தம்பி செல்லம்மா ஞாபகார்த்தமாக 13 இலட்சம் ரூபா செலவில் அவர்களின் மகன் நாகேந்திரனினால அமைககப்பட்ட கட்டடத்தை அவ் வைத்தியசாலை வைத்திய அதிகாரியும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரனும் இணைந்து திரைநீக்கம் செய்தனர். (50)

# ஆட்பதிவில் விதி மீறியவர்களுக்கு சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

2013 ஆம் ஆண்டு முதல் பதிவு சட்டத்தினை மீறி 3 இடங்களில் வாக்காளர் பட்டியலில் பதிவுகளை மேற்கொள்பவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார். வாக்காளர் தான் விரும்பிய ஒரு இடத்தில் வாக்காளர் பட்டியல் பதிவு செய்யப்பட்டு மீண்டும் வேறு இடத்திற்குச் சென்று அங்கு பதிவு மேற்கொள்ளும் வாக்காளரை பதிவுச் சட்டத்தினை மீறிய குற்றத்திற்காக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும். குறைந்த பட்ச தண்டனையாக 500 தண்டமும், அத்துடன் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்குவதற்குத் தேர்தல் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. (எஸ்)

# குடைசாய்ந்தது பேருந்து பயணிகள் நால்வர் காயம்



வவுனியா பறண்நட்டகல் பிரதேசத்தில் பேருந்து குடைசாந்ததில் நான்கு பேர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மொனராகலையில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற பேருந்தே வவுனியா பறண்நட்டகல் பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் விபத்துக்குள்ளாகியது.

அதிவேகமாக பயணித்த பேருந்தே கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (125)

# கல்லாறு குளம் புனரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பம்




கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லாறு குளத்தினைப் புனரமைக்கும் பணி நேற்று ஆரம்பமானது இதற்காக முப்பத்து மூன்று இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 224 குடும்பங்களை கொண்ட கல்லாறு கிராமத்திற்கான குடி நீர் மற்றும் ஏனைய நீர் தேவைகளை நிவர்த்தி செய்யும் முகமாக நீரினை தேக்கி வைப்பதற்கு ஏற்ற வகையில் இக்குளம் புனரமைக்கப்படவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை ஒன்றிணைத்து 2005 ஆண்டின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்ட இக்கிராம மக்கள் அன்று தொடக்கம் நீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். அப்பகுதியில் இயல்பாகவே நிலத்தடி நீர் இல்லாததன் காரணமாக குறித்த குளத்தினை புனரமைத்துத் தருமாறு தாம் அன்று தொடக்கம் கோரிக்கை விடுத்து வந்ததாகவும் இன்று அது சாத்தியப்பட்டிருப்பதாகவும். அப்பகுதி கமக்கார அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்புனரமைப்புப் பணியின ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார், கண்டாவளைப் பிரதேச செயலர் முகுந்தன், கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் தயாரூபன், அப்பகுதி கிராமசேவையாளர் சந்திரன் ஆகியோரும் மற்றும் கமக்கார அமைப்பின் தலைவர் செயலாளர் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## புத்தாண்டு விழா

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் ஏறபாடு செய்யப்பட்ட புத்தாண்டு விழா நாளை காலை 7.00 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும பிரதி அமைச்சர் துமிந்த திஸாநாயக்கா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## கஞ்சா வியாபாரம் சுன்னாகத்தில் அமோகம்

சுன்னாகம் பஸ்நிலையப் பகுதியில் கஞ்சாவுடன் நடமாடிய 2 நபர்களைச் சுன்னாகம் பொலிஸார கையும் மெய்யுமாக மடக்கிப் பிடித்துள்ளனர். இப்பகுதியில் இவர்களை நீண்டநாட்களாக அவதானித்த பொலிஸார் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மேற்படி நபர்களைக் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் சுன்னாகம் பஸ்நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டனர்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித் தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1350)





# புகைப்படக் கண்காட்சியும் போட்டியும்

'நல்லிணக்கமும் சமாதானமும்' என்னும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்கள் தனியாகவும், ஏனையோருக்கும் இரு வகையில் போட்டி நடத்தப்படவுள்ளது.

புகைப்படங்கள் 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

புகைப்படத்தின் Soft Copy (CD/Flash) சமர்ப்பிக்கப்படவேண்டும்.

ஒருவர் ஆகக் கூடியது 5 புகைப்படங்கள் வரையிலும் அனுப்ப முடியும்.

29.04.2012ஆம் திகதிக்கு முன்னர் புகைப்படங்களின் Soft Copy (CD/Flash) யாவும் 'இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மின் அஞ்சல் ஊடாக அனுப்ப விரும்புவர்கள், comvofm2011@gmail.com என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.

தொனிப்பொருளுக்கு அமைவாக எடுக்கப்படும் செய்திப்படங்களில் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படுபவை கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன் போட்டியின் இரு பிரிவுகளிலும்

முதலிடத்துக்கு 10,000/=,

இரண்டாம் இடத்துக்கு 7,000/=,

மூன்றாம் இடத்துக்கு 5,000/=

அத்துடன் 10 புகைப்படங்களுக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.

**சுதந்திர ஊடகக் குரல்**

இல.347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்



விளம்பர அனுசரணை:

**நியூ மெடி கெயார்**

32, கச்சாய் றோட், சாவகச்சேரி
கிளை : கைதடி

(C/1451)

எவராவது தான் தன்னுடைய வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால் அவர்கள் தாம் தம் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று பொருள்.

- ஐன்ஸ்டீன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வாழ்க்கை பறிக்கும் வசனவீரர்கள்!

ஜெயலலிதா, கருணாநிதி ஒருபுறமிருக்க, தமிழ்நாட்டில் குட்டிக் குட்டி தமிழ்த் தீவிரவாத அரசியல் செய்துகொண்டிருப்பவர்களின் அலப்பரை பெரிய அலப்பறையாயிருக்கு. கவுண்டமணி சொல்வது போல, இவங்க லொள்ளுத் தாங்கவே முடியலப்பா என்றுதான் வேதனையோடு அலுத்துக் கொள்ளும்படியாக இருக்கிறது.

இலங்கைக்கு வந்து திரும்பிய இந்திய நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றிருந்த மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் டி.கே.ரங்கராஜன், ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு கௌரவமான அரசியல் தீர்வையே இலங்கைத் தமிழ்மக்கள் விரும்புகிறார்கள் என்று கூறியிருப்பது உண்மைக்குப் புறம்பான மோசடிப் பேச்சு என்று சீறியிருக்கிறார் 'விஜயலட்சுமி' புகழ் சீமான்.

சென்னையில் ரங்கராஜன் வெளியிட்டதாக வந்திருக்கும் செய்தி இதுதான்:

"ஒன்றுபட்ட இலங்கைக்குள் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டுமென்றே தமிழ்த் தலைவர்கள் விரும்புகிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட இலங்கையின் அனைத்து அரசியல் தலைவர்களும் ஒன்றுபட்ட இலங்கை என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள். அவர்கள் ஈழம் பற்றிப் பேசவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுத் திட்டம் வழங்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார். நான் ஓர் இலங்கையன், இலங்கையனாகவே சாக விரும்புகின்றேன் எனவும் சம்பந்தன் கூறினார்". இதுதான் ரங்கராஜன் குறிப்பிட்டிருப்பது.

இதற்கு மேலாக, இங்குள்ள அரசியல் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளவே மாட்டோம் என்று அடம் பிடிப்பவர்களின் அரசியல் ஆவலாதிகள் தெரிந்ததுதான். என்றாலும், அதன் மூலம் இங்குள்ள தமிழ் மக்களைத் தங்கள் பேச்சுக்களினாலேயே வறுத்தெடுக்க அவர்கள் போடும் ஆர்ப்பாட்ட வேஷங்கள்தான் நம் மக்களுக்கு எரிச்சலூட்டும் அளவுக்குச் சென்று கொண்டிருக்கிறது.

"இலங்கையில் சிங்கள பௌத்த அரசுகளின் கொடூரமான ஒடுக்குமுறையால் கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு மேல் அடிமை நிலையில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் தாங்கள் சுதந்திரமாக வாழ ஒரே வழி தனிநாடுதான் என்பதை 38 ஆண்டுகளுக்கு முன்னாலேயே, 1974 வட்டுக்கோட்டை மாநாட்டில் தீர்மானித்து விட்டார்கள். சிங்கள அரசு அதிகாரத்தை ஒரு போதும் பகிராது, தனிஈழம் தவிர வேறெதற்கும் தமிழ்மக்கள் தயாரில்லை" கொந்தளித்திருக்கிறார் சீமான்.

ஈழத்தமிழர்களை மறுபடியும் மறுபடியும் கொலைக்களத்திற்கு அனுப்பியே தீருவேன் என்று எங்கெங்கேயோ இருந்துகொண்டு எப்போதும் சிலர் மூச்சுப் பிடித்து இவ்வாறு முழங்கிக் கொண்டிருப்பது என்ன வகையான தமிழ் நாகரீகம் அல்லது வீரம் என்று தெரியவில்லை.

38 அல்ல அதற்கும் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே அண்ணாத்துரை, கருணாநிதி உள்ளிட்ட திராவிடக் கழகத்தினர் தனித் தமிழ்நாடுதான் தேவை என்று போராடினார்களே, அதைக் கேட்டும் இப்போது தமிழ்வீரம் மிக்க சீமான்கள் பேசலாமே! ஏன் பேசுவதில்லை.

உடனே கருணாநிதி போல சமத்காரமாக, இந்திய அரசு தமிழ்நாட்டுத் தமிழர்களைக் கொல்லவில்லையே என்று நழுவல் மகா திலகங்களாகி விடுவீர்கள். உண்மையான தமிழ் ரோசக்காரர்களாக இருந்தால் நீங்களும் உங்கள் இராணுவத்தினரைக் கொலை செய்து குண்டுகள் வைத்துப் பார்க்க வேண்டும். அதன்பிறகு உங்கள் மழுப்பல் பதிலின் மகா மோசடி புரியும்.

ஐயன்மீர்! தயைகூர்ந்து உங்கள் தமிழ்ரோசத் தற்திருப்திகளை எங்கள் மக்களின் இயல்பான வாழ்வைக் கொல்ல ஏவி விடாதீர்கள்!

– ஆசிரியர்

# வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடு சென்றுள்ளதன் காரணமாக ஓய்வூதியம் பெறாதுள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுக்க சமூக காப்புறுதிச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாடு சென்ற இலங்கையர்களுக்கான இத்திட்டத்தை செயற்படுத்தவென தூதரகம், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதிநிதிகளின் சங்கம், சேவை புரிவோர் சங்கம் உள்ளிட்டவைகளின் உதவிகள் பெறப்படவுள்ளன.

குவைத் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கான வேலைத் திட்டம் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமூக காப்புறுதிச் சபையின் பதில் தலைவர் மொன்டெகு சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் வெளிநாடு சென்றுள்ள அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## கடல் அட்டை பிடித்தவர் செலுத்தினார் அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனலைதீவுப்பகுதியில் அனுமதியின்றி கடல் அட்டை, சங்கு பிடித்த கடற்றொழிலாளர் ஒருவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 500 ரூபா தண்டம் விதித்துள்ளது.

அனலைதீவு கடற்பரப்பில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் அனுமதியின்றி கடல் அட்டை, சங்கு பிடித்த கடற்றொழிலாளர் ஒருவர் கடற்படையினரால் நேற்று முன்தினம் பிடிக்கப்பட்டு யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். இவரை யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று பாரப்படுத்தியது.

இவர் மீதான வழக்கு ஒன்றினையும் தாக்கல் செய்திருந்தது.இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஊர்காவற்றுறை நீதி மன்றம் குற்றவாளிக்கு 3500 ரூபா தண்டம் விதித்துள்ளதுடன் கைப்பற்றப்பட்ட சங்கு, அட்டை என்பவற்றை ஏலத்தில் விற்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(பா)

## இடி விழுந்து மரம் முறிவு; பாடசாலைக் கட்டடம் சேதம்

(வவுனியா)

வவுனியா - நொச்சுமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடி விழுந்ததன் காரணத்தால் பாடசாலைக்கு அருகில் இருந்த மரம் முறிந்து விழுந்து பாடசாலை கட்டடத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடியுடன் கூடிய மழை பெய்து வந்த நிலையில் மாலை 4.00 மணியளவில் நொச்சுமோட்டை அ.த.க. பாடசாலையின் அருகில் இருந்த மரம் திடீரென்று முறிந்து பாடசாலைக் கடடடத்தினை சேதப்படுத்தும் வகையில முறிந்து வீழ்ந்துள்ளது.

மழையின் பின்னர் ஊர் மக்கள் சென்று பார்த்தபோது இடி தாக்கியதிலேயே இம் மரம் முறிந்துள்ளமை கண்டறியப்பட்டது.

இதனை அடுத்து அயலவர்கள் ஒன்று திரண்டு முறிந்த மரத்தினை அகற்றி பாடசாலைச் செயற்பாட்டுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

(125)

## வசந்தபுரம் மக்களுக்கு வீடுகள் கையளிப்பு

(சுன்னாகம்)

மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கான வீட்டு வசதிகள் மற்றும் வாழ்வாதார உதவிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் நோர்வே அரசாங்கம் யு.என்.டி.பி நிறுவனம் ஊடான நிதியுதவியுடன் இளவாலை வடமேற்கு வசந்தபுரம் பகுதியில் மீள் குடியேறிய மக்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகள், பொதுக் கட்டடங்கள் என்பன கையளிக்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வசந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வ.மோகநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் கில்டே கரல்ஸ்ரட் அம்மையார், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், தெல்லிப்பளைப் பிரதேச செயலர் மற்றும் யு.என்.டி.பி உயரதிகாரிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் 50 வீடுகள், கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம், முன்பள்ளிப் பாடசாலை மண்டபம், கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையம், அரைக்கும் ஆலை என்பன மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன. (120)

## தம்புள்ளையில் முஸ்லிம் ஆக்கிரமிப்பு; கண்டு பிடித்தது ஹெல உறுமய

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக அரசாங்கத்திற்கு உள்ளேயே சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

30 வருட யுத்தத்தில் இருந்து நாடு மீட்கப்பட்டு சுதந்திரம் கிட்டியபோதும், அது தொடர்பில் பொது மக்கள் பேதமின்றி மகிழ்ச்சியடைந்த போதும் சர்வதேசச் சூழ்ச்சியால் இலங்கை வலைக்குள் சிக்கி இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சக்திகள் நாட்டுக்கு எதிராகச் செயற்படும் வேளையில் அதற்கு சமமான சூழ்ச்சி அரசாங்கத்துக்குள்ளும் மேற்கொள்ளப்படுவதாக ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து ஜனாதிபதி விழிப்புடன் இருக்க வேண்டும் என கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

தம்புள்ளை புனித பூமியில் முஸ்லிம் பள்ளிவாசல் அமைப்பது அதன் ஊடாக சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கு இடையில் பேதம் ஏற்படுத்துவது அரசாங்கத்தின் உள்சூழ்ச்சியின் புதிய வடிவம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தம்புள்ளை சம்பவத்தின் மூலம், அங்கு முஸ்லிம் ஆக்கிரமிப்பு ஏற்பட்டுள்ளமை தெளிவாகத தெரிவதாகவும் இதற்கு அரசாங்க தரப்பில் உள்ள சிலரும் ஆதரவு அளித்துள்ளதாகவும் அப்படியானவர்களுக்கு தராதரம் பாராமல் தண்டனை வழங்க வேண்டும் எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## வெற்றுப் பரல்களை அகற்றுமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் மரக்கறி எண்ணெய் வெற்றுப்பிளாஸ்ரிக் பரல்கள் தேங்கிக்காணப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

மதிய உணவுச் சமயலுக்காக வழங்கப்படும் எண்ணெயின் வெற்றுப் பரல்களே இவ்வாறு பாடசாலைகளில் சமயலறைகளில் தேங்கிக் கிடப்பதால கரப்பான் பூச்சி, பல்லி என்பன பெருகி அசுத்தத்தை ஏற்படுத்துவதாக பாடசாலைச்சமூகத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

உரிய வகையில் வெற்றுப் பரல்களை அகற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்துச் செயற்படவேண்டும் என பாடசாலை சமூகத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (11)

## வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடைச் சிகிச்சை

(முழங்காவில்)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் விசேட சிகிச்சை முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

நாளை மறுதினம் சமகாலத்தில் மூன்று இடங்களில் இச்சிகிச்சை முகாம்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

வேரவில் வைத்தியசாலையிலும், முழங்காவில் வைத்தியசாலையிலும், ஜெயபுரம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் மேற்படி விசேட மருத்துவ முகாம் நாளை மறுதினம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை இச் சிகிச்சை நடத்தப்படவுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு சிகிச்சை மேற்கொள்ளும்படி பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (149)

# பாடசாலை செல்லும் வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா-தாலிக்குளம் பாடசாலை வீதி நீண்ட நாட்களாகத் திருத்தம் செய்யப்படாது காணப்படுவதனால் அப்பகுதி மக்கள் தாம் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அப்பகுதி மக்கள், வவுனியா- சாளம்பைக்குளத்தில் இருந்து பாடசாலை செல்லும் வீதி திருத்தம் செய்யப்படாத நிலையில் காணப்படுவதாகவும், இது தொடர்பில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினரிடம் முறையிட்ட போதிலும் எதுவித பயனும் ஏற்படவில்லையென்றும் மக்கள் அதிகம் பயன்படுத்தப்படாத வீதிகள் திருத்தம் செய்யப்படும் அதேவேளை, மக்களுக்கு பயனுள்ள வீதியைத் திருத்தம் செய்யவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை, இவ்வீதியில் சுமார் 500 மீற்றர் வரையில் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ள போதிலும் அதனைத் திருத்தம் செய்து தருமாறு தாம் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் பலனில்லை எனவும் தெரிவித்தனர்.(125)

# நூல் வெளியீட்டு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை நடத்தும் அமரசிங்கம் கேதீஸ்வரனின் திட்டமிடல் மூலதத்துவங்கள் நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பி.ப.3 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், இளைப்பாறிய வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் இ.நந்தகுமாரன் வழங்கவுள்ளதுடன், நூலின் முதற்பிரதியை கிளிநொச்சி வலய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி ந.சுதாகரன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை முதலீட்டாளர்களுடனான கலந்தரையாடலும் முன்னேற்ற மீளாய்வும் எதிர்வரும் 30ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளதால் முதலீட்டாளர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# தறிக்கப்பட்ட மரங்கள் அப்புறப்படுத்தவில்லை

(புதுக்குடியிருப்பு)

மின்சார விநியோகத்திற்காக வீதிகளில் இடையூறாக வளர்ந்து நின்ற மரங்கள் தறித்து வீழ்த்தப்பட்ட நிலையில், சில இடங்களில் அந்த மரங்கள் அப்புறப்படுத்தப்படாமல் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் உடையார்கட்டுக்கும் தேராவிலுக்கும் இடைப்பட்ட மூங்கிலாற்றுப் பாலமருகில் வளர்ந்து நின்ற மரங்கள் தறிக்கப்பட்டு, பாலத்தின் மதகுகள் அருகோடு விழுந்து கிடப்பதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு விழுந்து கிடக்கும் மரங்களினால் மழை காலங்களில் ஆற்று நீர் மதகினூடாகப் பாய்ந்தோட முடியாத நிலை ஏற்படுவதோடு, குறித்த பாலத்தினூடாக அதிகளவு நீர் வெளியேறுவதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (138)

# அடிப்படைத் தேவைகளின்றி வாழும் நமணங்குளம் பகுதி கிராம மக்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நமணங்குளம் கிராம அலுவலர் பிரிவில் யுனிட் ஒன்றில் வாழும் குடும்பங்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் வாழும் மக்கள் கடந்த யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து பல்வேறு கஷ்டங்களை அனுபவித்த நிலையில், தற்போது மீள்குடியேறி வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

15 குடும்பங்களே இப்பகுதியில் வாழ்ந்து வரும் நிலையில், வீட்டுத்திட்ட வசதிகள், மின் இணைப்பு, மலசலகூட வசதிகள், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளின்றி ஓலைக் குடிசையின் கீழ் தாம் வாழ்ந்து வருவதாக இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, வாழ்வாதார ரீதியாகத் தொழில் .வாய்ப்புக்கள் இன்றி கிடைத்த வேலையைச் செய்ய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கும் இவர்கள், இதனால் பொருளாதார ரீதியில் கஷ்டங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

மின்சார வசதி இல்லாமையால் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் வெகுவாகப் பாதிப்படைந்து செல்வதாகவும், கல்வி நிலை பின்னடைவாக இருப்பதாகவும் அவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் அரசாங்கத்தாலும், நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், உள்ளூரில் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்தி குறித்து உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (143)

# யாழ். நகரில் திருட்டு; சந்தேக நபருக்குப் பிணை

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் யாழ். நீதவானால் நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சங்கானையைச் சேர்ந்த குணசேகரன் குணாகரன் என்னும் நபர் வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களை வெட்டிக் காயப்படுத்தியதோடு, கொள்ளையடித்ததாகவும் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் குற்றஞ்சாட்டப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்

எட்டு மாதங்களுக்குப் பிறகு கடந்த ஐப்பசி மாதம் 10ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் மா.கணேசராசா இவரை 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், ஒரு இலட்சம் ரூபாவுக்கான இரண்டு ஆட்பிணையிலும் செல்வதற்கு உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு நபர் எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (137,எஸ்)

# கசிப்பு வைத்திருந்த நபருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம்

(கிளிநொச்சி)


கிளிநொச்சி - இராமநாதபுரம் கட்டைக்காடு பகுதியில் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் கிளிநொச்சி நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் 2 போத்தல் கசிப்பை தன்வசம் வைத்திருந்த நபரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி பெ.சிவகுமார் இந்நபருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், அபராதத்தை கட்டத் தவறின், 3 மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்

(கே)

# வலி. தெற்கு பிரதேச சபை மலரை வெளியிட ஏற்பாடு



(வலிகாமம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் அப்பிரதேச சபை தொடர்பான நூல் ஒன்றை உருவாக்குவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று சுன்னாகம் பிரதேச பொது நூலக மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

ஊரையும் நாட்டையும் பெருமைப்படுத்தும் கலைஞர்கள், விவசாயப் பெருமக்கள், வர்த்தக முன்னோடிகள், கைவினைக் கலைஞர்கள், தொழில்சார் திறனாளர்கள் எனப்பலரையும் உள்ளடக்கிய பிரதேசமாக காணப்படுவதில், இத்தகையவர்கள் வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள் எனப்பலரையும் உள்ளடக்கிய தான மலரை வெளியிடும் முக மாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், கல்வியலாளர்கள் உட்பட பொதுமக்கள் கழகங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இவர்கள் நூலுக்கான ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்ததுடன் குழுவொன்றையும் அமைத்துள்ளார்கள். இதனைவிட பிரதேசமட்டத்தில் மேலும் ஒரு குழுவை உப அலுவலக ரீதியாக உருவாக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# புதுக்குடியிருப்புப் பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணி

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது.

குறித்த பிரிவில் இதுவரை மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாத பிரதேசங்களில் குறிப்பாக வெற்றுக் காணிகளில் எவ்.எஸ்.டி.நிறுவனத்தினால் இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இப்பிரதேசத்தில் மக்களை மீள்குடியேற்றம் செய்யும் பொருட்டே இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், இவை முற்றாகப் பூர்த்தியடைந்த பின்னர் மக்கள் விரைவில் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என இந்நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (கே)




இணுவில் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புத்தாண்டு விழா நேற்றுமுன்தினம் இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் உரையாற்றுவதையும், மாணவிகளின் வில்லுப்பாட்டு நிகழ்வையும், கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# திருநெல்வேலி பிரதேச மக்களின் தேவைகள் விரைவில் தீர்க்கப்படும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பிரதேசத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படுவதுடன் பின் தங்கிய நிலையிலுள்ள மக்களின் வாழ்வாதாரம் தொடர்பாகவும் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச சபை அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவருமான அ.ரவீந்திர தாஸன தெரிவித்தார்.



திருநெல்வேலி சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி அண்மையில் நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்;

இப்பிரதேசத்தில் வாழும் மக்களில் குறிப்பாக வாழ்வாதார ரீதியில் பின்தங்கி வாழும் மக்களின் தேவைகளை இனம் கண்டு அவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்த வகையில் இம்மக்களுக்கான வீட்டுத்திட்டம், மலசல கூடம், விவசாயம், மின்னிணைப்பு, சுயதொழில் வாய்ப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகளுடன் பிரதேசத்தின் வீதிப்புனரமைப்பு, வடிகால்கள் திருத்தம் போன்ற அபிவிருத்தித்திட்டங்கள் பிரதேச சபை, பிரதேச செயலகமூடாக உடனடியாக மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், சமுர்த்தி அலுவலக பிரதேச அதிகாரி தி.சந்திரகாசன், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருட்டு முயற்சி முறியடிப்பு; பெண்கள் இருவர் கைது

(வடமராட்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற 751 இலக்க தனியார் பேருந்தில் பயணம் செய்த பெண்ணின் பணத்தைக் களவாட முற்பட்ட 2 பெண்கள் பருத்தித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. குறித்த பேருந்தில் 90 ஆயிரம் ரூபாவுடன் ஏறிய வியாபாரிமூலையைச் சேர்ந்த பெண்மணி சன நெருக்கம் காரணமாக அவரது கைப்பை நழுவியதை அடுத்து அவர் தனது கைப்பையை இழுத்துப் பார்த்தபோது பை திறக்கப்பட்டு பணம் களவாடப்பட்டது தெரியவந்தது.

இதனை அடுத்து அப்பெண் சத்தம்போட்டு பேருந்தை பொலிஸ நிலையத்திற்கு விடுமாறு தெரிவித்தை அடுத்து பேருந்து பொலிஸ் நிலையத்தை சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் பின்னர் பேருந்தில் பயணிகள் இறங்கும் முன்னர் அங்கு பணம் சிதறிக காணப்பட்டதை அடுத்து பருத்தித்துறைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இரண்டு பெண்களைக் கைதுசெய்ததுடன் மொத்தப் பணமும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்களான இருவரும் புத்தளத்தைச் சேர்ந்த தாயும் மகளும் எனத் தெரியவருகின்றது. (116)

# காவலரண் அகற்றல்

(குருநகர்)

யாழ்.முற்றவெளியில் புல்லுக்குளம் சந்தியில் கடந்தசில வருடங்களாக அமைந்திருந்த இராணுவக்காவலரண் முற்றாக அகற்றப்பட்டுள்ளது.

இக்காவலரண் ஆரம்ப காலங்களில் இல்லாமல் இடைப்பட்ட 2005ஆம் ஆண்டளவில் சிறியளவில் நிறுவப்பட்டு பின்பாக பாரிய அளவில் விஷ்தரிக்கப்பட்டது.

முனியப்பர் கோவிலிலும், துரையப்பா விளையாட்டரங்குச சந்தியில் ஒரு பெண் உட்பட 5 பேர் நத்தார தின முன்னிரவு சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே புல்லுக்குளம் சந்தியில் காவலரண் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது. (68)

## முரசின் இன்றைய பலன்

(25.04.2012 –புதன்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை 13 ஆம் திகதி. சதுர்த்தி முன்னிரவு 8.44 வரை.
நட்சத்திரம் ரோகிணி காலை 8.07 வரை. சித்தயோகம். சதுர்த்தி விரதம்.
இராகுகாலம் 11.59 - 1.29 வரை. சுபநேரம் 4.29 - 5.59 வரை.
எமகண்டம் 7.29 - 8.59 வரை. குளிகைகாலம் 10.29 - 11.59 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வாகனஙங்களால் சுகம், உறவினர் சகாயம், பணமுடை, ஏமாற்றங்கள் அதிகரிப்பு. |
| ரிஷபம் | மனநிறைவு, பொன்பொருள் சேரும், காரியானுகூலம், பட்ட துன்பங்கள் அகலும். |
| மிதுனம் | மனதில் கவலை, சோதனை நாள், முன்னெச்சரிக்கை வேண்டும், சாதனை புரிவீர். |
| கடகம் | இலாபதினம், முயற்சிகளில் வெற்றி, அன்னியர்களால் சங்கடம், நண்பர்கள் உதவி. |
| சிம்மம் | ஈவுஇரக்கம் காட்டல், பாராட்டு கிடைக்கும், கால்நடைகளால் சுகம், ஸ்திரிகளால் தொல்லை. |
| கன்னி | வாழ்க்கையில்வெற்றி, எதிர்பாராத பணவரவுகள், புதிய முதலீடுகள், உதவி செய்வதில் கவனம். |
| துலாம் | உணவில் கட்டுப்பாடு, துணிச்சலான செயற்பாடு, வியாபாரத்தில்விறுவிறுப்பு, தொழிலில்முன்னேற்றம். |
| விருச்சிகம் | கூட்டு முயற்சி, சௌகரியக்குறைவு, பந்தயங்களில் வெற்றி, தனிமை நன்று. |
| தனுசு | பொன்பொருள் சேரும், திருமணவாய்ப்புகள், ஆசிரியர்கள் பாராட்டு, புத்திரால் மகிழ்ச்சி. |
| மகரம் | மனச்சோர்வு, குடும்பத்தில் ஒற்றுமை, பிணை தவிர்க்கவும், அதிகாரிகளுடன் கவனம். |
| கும்பம் | சிறு பயணம், வழக்கில் வெற்றி, திருமணம் கைகூடும், சரளமான பணவரவு. |
| மீனம் | தெய்வ பக்தி, குடும்பத்தில் சுபகாரியம், தொழிலில் போட்டி, முதலீடுகளைத் தவிர்க்கவும். |

# வவுனியா - தாலிக்குளத்தில் இலவச மருத்துவ முகாம்

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையின் ஏற்பாட்டில் தாலிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மருத்துவ முகாமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பன்தங்கிய கிராமமான இங்கு நிரந்தர அங்கவீனர்களின் தொகை அதிகமாகவுள்ளதால் அவர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு வருவதில் உள்ள சிரமத்தினை கருத்தில் கொண்டு இம் முகாமினை ஏறபாடு செய்ததாக வைத்தியகலாநிதி உமாகாந் தெரிவித்தார்.

அப்பகுதி வவுனியா பொது வைத்தியசாலை அத்தியட்சகர் சத்தியமூர்த்தி மற்றும் கிராம சேவகர் கோணேஸ்வரலிங்கம் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இம் முகாமில் நூற்றுக்கணக்கான கிராமமக்களும் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர்.

இம்முகாமில் குழந்தைப் பேற்று வைத்திய நிபுணர்கள், மனநல மருத்துவர்கள், பொது வைத்திய நிபுணர்கள் உட்பட தாதிய நிபுணர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது சிகிச்சை அளிக்க முடியாதவர்களை இனங்கண்டு வவுனியா பொது வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று.சிகிச்சை வழங்கவும் ஏற்பாடு செய்யப பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுகின்றது. (125)

# வீதியோரங்களை செப்பனிடும் பணி


(குருநகர்)

யாழ்.சின்னக்கடை மற்றும் ஆறாம் குறுக்கு வீதிகளில் வீதியோரங்கள் செப்பனிடும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. வீதியோர உடைவுகள சமநிலைப்படுத்த குறுணிக்கருங்கற்கள் நிலத்துள் இட்டு நசுக்கிகளால் ஓரங்கள் சீராக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.நகரின் சகல வீதிகளும் 'காப்பெற்' வீதிகளாக்கப்பட இருப்பதனை அடுத்து வீதியோரங்களை முன்னதாக செப்பனிடப்படும் வேலைகள் நடைபெறுவதாக அறியப்படுகின்றது.

இதேவேளை யாழ்.முதலாம் குறுக்கு வீதி 'காப்பெற்' வீதியாகமாறிய பின்னும் இன்னமும் ஓரங்கள் செப்பனிடப்படாமல் இருந்து வருவதால் அப்பகுதியில் வாகனங்கள் விலகிச் செல்கையில் விபதது்க்கு உள்ளாகும் அபாய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (68)

## பரமர் சங்கமம்



"வாடிக்கையாளர்களை முன்னால் வைத்துக் கொண்டே கொள்ளை அடிக்கின்ற பல வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தில் என்றில்லை எங்குமே இருக்கலாம். அதற்குத் தடை உண்டு; நடைமுறைப்படுத்தத்தான் முடிவதில்லை. அந்த வகையில் இதுவரையில் நகைக்கடைக்கார்களைத்தான் ஒட்டு மொத்த பகல் கொள்ளைக்காரர்களாக நினைத்திருந்தேன். எல்லாரும் நிறையில் தரத்தில் ஏமாற்றி வியாபாரம் செய்வதில் புதுமையில்லை.

அவையெல்லாம் பெருந்தொகை பணத்தைக் கொள்ளை அடிக்க முயன்றதாக இருப்பதனால் பெரிதாகப் படுவதில்லை. இந்த நகைக் கடைக்காரர்களோ தவிச்ச முயல் அடிப்பதில் பெரும் முதலைகள் என்றுதான் கூறவேண்டும்.

அவர்களிடம் நகை எடுக்கப் போனால் புதிதாகச் செய்த நகைகளையா காண்பிக்கின்றார்கள்? ஏற்கனவே போட்டுக் கழிச்ச நகைகளை வாங்கி மெருகுபடுத்தி வைத்து கூலி, சேதாரம் என்றெல்லாம் கணக்கிட்டுக் கறந்து விடுவார்கள்.

நாங்கள் நகைகளை விற்கப்போனால் கரட் குறைவு, பொடி விணக்கணம், செய்கூலி, கற்கள் நிறை தள்ளி இப்படி பல காரணங்களைக்கூறி ஆயிரக்கணக்கான பெறுமதியைக் கழித்துத்தான் தருவார்கள்.

இதற்கிடையில் நிறையில் வேறு வெட்டு. ஒரு மஞ்சாடி வெட்டினாலும் இண்டைக்கு பவுண் விற்கிற விலையில ஆயிரக் கணக்கில் கொள்ளை அடிக்கப்படுகிறது. ஒருதடவை எனக்கு சந்தேகம் வந்து இன்னொரு கடையில் நிறுத்துப் பார்க்க ஒரு மஞ்சாடிக்கு மேல குறைஞ்சுது.

திரும்பப்போய் கேட்டபோது நிறுத்துப்பாத்திட்டு அதுக்குரிய பணத்தை நகைக்கடைக்காரன் தந்தான். இல்லையெண்டால் ஆருக்கு நட்டம்?

உப்புடித்தான் இன்னெரு வர்த்தகர் கூட்டமும் யாழ்ப்பாணத்தில மக்களைப் பகல் கொள்ளை அடிச்சு வருகின்றது. இப்பொழுதெல்லாம் சனம் சாப்பிடாட்டிலும் டீசன்ரான தோற்றத்துடன் காட்சி அளிக்கவே முன்னுரிமை கொடுத்து வருகிறது. அதனால் அத்தகைய வர்த்தகர்களின் காட்டில் செம மழைதான்.

மூக்குக் கண்ணாடி, பல் கட்டல், மிதப்புப் பல்களுக்குக் கிளிப் அணிதல் தொழிலில் ஈடுபட்டுள்ள வர்த்தகர் இன்றைக்கு நேற்றல்ல பன்னெடுங்காலமாக யாழ்ப்பாண மக்களைக் கொள்ளை அடிச்சுச் சம்பாதித்து வந்தது இப்பொழுது அம்பலமாகி வருகிறது.

சமீபகாலங்களில் வேறிடங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்த மேற்படி வர்த்தகர்களின் நடவடிக்கைகளால் முன்னைய கொள்ளையடி வர்த்தகர்களின் பொய் முகங்கள் கிழிக்கப்பட்டு வருகிறது.

ஏறத்தாழ ஆயிரத்து எழுநூறு, எண்ணூறு பெறுமதியான மூக்குக் கண்ணாடிகளை நாலாயிரம், நாலாயிரத்து ஐந்நூறு, ஐந்தாயிரம் ரூபாவுக்கு வித்துப் பணம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்புடி இன்னும் என்ன என்ன கொள்ளைகள் நடந்து கொண்டிருக்குதோ ஆரறிவார்? அதனால் தானே இண்டைக்கு யாழ்ப்பாணம வர்த்தக மையமாக மாறிக்கொண்டு வருகுது. சொல்லுங்க பாப்பம்?

## உணவுப் பொருட்கள் விநியோகம்

(பருத்தித்துறை)

உலக ஜக்கிய உணவுத்திட்டத்தினால் சகல பாடசாலைகளுக்கும் மதிய உணவுக்கான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. 2ஆம் தவணைக்காக முதலாம் கட்டமாக ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் 35 நாட்களுக்குரிய உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

பருத்துத்துறை கோட்டக் கல்விப் பாடசாலைகளுக்கென மொத்தமாக 20 ஆயிரத்து 725 கிலோ அரிசி, 5ஆயிரத்து 975 கிலோ பருப்பு, 632 லீற்றர் தேங்காய் எண்ணெய் ஆகியன வழங்கப்பட்டுள்ளதாக உலக உணவுத்திட்ட யாழ் மாவட்ட பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது (109)

# பங்களாதேஷ், பாகிஸ்தான் விளையாட்டு உறவுகள் பாதிப்பு

(கராச்சி)

பங்களாதேஷ் கிரிக்கெட் மற்றும் கால்பந்து அணிகள் பாகிஸ்தான் செல்லாததை அடுத்து, இரு நாட்டு விளையாட்டு உறவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2009, மார்ச் மாதம் பாகிஸ்தானின் லாகூரில், இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள், தீவிரவாதிகளால் தாக்கப்பட்டனர். இதன் பின், எந்த அணியும் அங்கு செல்ல மறுத்தது. இந்நிலையில் வரும் 29, 30ஆம் திகதிகளில் தலா ஒரு ஒருநாள் மற்றும் ருவென்ரி 20 போட்டியில் பங்கேற்க, பங்களாதேஷ் அணி பாகிஸ்தான் செல்ல இருந்தது. இதற்கு பங்களாதேஷ் உயர் நீதிமன்றம் தடை விதித்தது. இதையடுத்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை, மீண்டும் பாகிஸ்தானில் கொண்டுவரும் முயற்சிக்கு பலத்த அடி விழுந்தது.

இதனிடையே பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அதிகாரபூர்வ இணையதளத்தில், இதன் தலைவர் முஸ்தபா கமால் வெளியிட்டுள்ள செய்தியில், தென்னாபிரிக்க அணி எங்களுடன் வரும் மே மாதம் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்று விரும்புகிறோம். தொடரை இங்கு அல்லது தென்னாபிரிக்க மண்ணில் நடத்தலாம் என கேட்டுக் கொண்டிருந்தார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் இச்செயல், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகளிடம் உச்சகட்ட வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து பி.சி.பி. அதிகாரி ஒருவர் கூறுகையில், வரும் செப்ரெம்பர் மாதம் வரையில் பங்களாதேஷ் அணி, எவ்வித சர்வதேச போட்டிகளிலும் பங்கேற்காது. இந்நிலையில் வலுவான பாகிஸ்தான் அணிக்கு எதிராக விளையாடக் கிடைத்த வாய்ப்பை அவர்கள் புறக்கணித்துள்ளனர் என்றார். இதையடுத்து பி.சி.பி.யின் உயர்மட்டக்குழு வெகுவிரைவில் கூடுகிறது. இதில் பங்களாதேஷத்துடனான எதிர்கால கிரிக்கெட் உறவு குறித்து, முடிவெடுக்கப்படும் என்று தெரிகிறது. இதனிடையே, லாகூரில் நடக்கவுள்ள ஆசிய கோப்பைக்கான கால்பந்து தொடருக்கு, பங்களாஷே ஜமால் கால்பந்து கிளப் அணி செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் கால்பந்து கூட்டமைப்பின் (பி.எப்.எப்.) தலைவர் லோதி கூறுகையில், பாதுகாப்பு குறித்து நாங்கள் எவ்வளவோ உறுதி அளித்தும், பங்களாதேஷ் அணி தொடரில் இருந்து விலகியது பெரும் ஏமாற்றமாக உள்ளது. இந்த அணியை தடை செய்ய வேண்டும் என ஆசிய கால்பந்து சபையிடம் (ஏ.எப்.சி.) கேட்டுக்கொண்டுள்ளோம் என்றார்.

சர்வதேச கிரிக்கெட் சபை துணைத்தலைவர் பதவிக்கு, பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் முஸ்தபா கமலை ஆதரிப்பதாக, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.) கூறியதாம். இதனால், தங்கள் அணியை பாகிஸ்தான் அனுப்ப. முஸ்தபா முடிவு செய்ததாக செய்திகள் வெளியாகின.இதுகுறித்து அவர் கூறுகையில், இது மிகவும் தவறான செய்தி. பாகிஸ்தான் ஆதரவுடன் மட்டும் இப்பதவியை நான் பெற்றுவிட முடியாது. ஏனெனில், ஓட்டுரிமை பெற்ற 10 நாடுகளில் குறைந்த 7 நாடுகள் ஆதரவு இதற்குத் தேவை. தவிர, பாகிஸ்தானில் சர்வதேசகிரிக்கெட் திரும்ப நான் விரும்பவில்லை என்பதும் தவறு. இவ்விடயத்தில் எனது நேர்மை குறித்து சந்தேகிக்க வேண்டாம் என்றார்.




## துடுப்பாட்ட வீரர்கள் சரியாக ஆடவில்லை

துடுப்பாட்ட வீரர்கள் எவரும் சரியாக ஆடாதமையே தமதுஅணியின் தோல்விக்கு முக்கிய காரணம் என டெக்கான் சார்ஜர்ஸ் அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

நாங்கள் சிறப்பான தொடக்கத்தைக் கண்டோம். எங்களுக்கு கிடைத்த நல்ல அடித்தளத்தைச்சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நாங்கள் 150 ஓட்டங்கள் வரை எடுத்திருக்க வேண்டும். ஆனால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின்களத் தடுப்புஅபாரமாக இருந்தது. எங்களது பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. கடைசிக் கட்டத்தில் துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட சொதப்பல் தோல்விக்கு காரணமாகியது.

ஐந்தாவது ஐ.பி.எல். தொடரில் இதுவரை வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ள முடியாமற்போனது ஏமாற்றமே. இருப்பினும் அடுத்து வரும் போட்டிகளை எமக்கு சாதகமாக்கிக் கொள்ள முயற்சிப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வெற்றி குறித்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கப்டன் கவுதம் கம்பீர் கூறுகையில், இந்த ஆடுகளத்தில் ஓட்டங்கள் சேர்ப்பது கடினமாக இருந்தது. டெக்கான் அணி வீரர்கள் சிறப்பாகப்பந்து வீசி கடும் நெருக்கடி அளித்தனர். மனோஜ்திவாரி சூழ்நிலைக்கு ஏற்ப சிறப்பாக செயற்பட்டு அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார் என்று தெரிவித்தார்.



## வெற்றி பெற்றது றோயல் சலஞ்சர்ஸ்

(ஜெய்ப்பூர்)

இந்தியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரின் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 46 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நேற்று முன்தினம் ஜெய்பூரில்நடைபெற்ற இந்தப் போட்டியில், முதலில் துடுப்பெடுத் தாடிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர்களில் மூன்று விக்கட்களை இழந்து 189 ஓட்டங் களைப் பெற்றது. இதில் டில்சான், டிவில்லியர்ஸ் அரைச்சதம் அடித்தனர்.

பதிலுக்கு 190ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

இந்தப் போட்டியில் வெற்றிக்கு வித்திட்ட பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் டிவில்லியர்ஸ் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால், டிவில்லியர்ஸ் இவ்விருதை நான்கு விக்கெட் வீழ்த்திய சக வீரர் அப்பண்ணாவிற்கு வழங்கி மிகுந்த பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்.

பின்னர் இது குறித்து குறிப்பிட்ட வில்லியர்ஸ்,இந்த ஆட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது. எனது துடுப்பாட்டம் அதிரடியாக அமைந்தது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. எனக்கு ஆட்டநாயகன் விருது கிடைத்திருக்கிறது.

ஆனால் 4 விக்கெட் கைப்பற்றிய அப்பண்ணாதான் ஆட்டநாயகன். அவர் 4 விக்கெட் கைப்பற்றாவிட்டால் வெற்றி பெற்றிருக்கமுடியாது.

அவருக்குத்தான் ஆட்டநாயகன் விருது கொடுத்திருக்க வேண்டும். அவருடன் இணைந்து ஆட்டநாயகன் விருதைப் பகிர்ந்து கொள்கிறேன். அணி வீரர்கள் அனைவரும்இணைந்துதான் இந்த வெற்றியைப் பெற்றோம் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, வெற்றி குறித்து கப்டன் விட்டோரி குறிப்பிடுகையில், ஹட்ரிக் வெற்றிப் பெற்றது மகிழ்ச்சி. அடுத்து வரும் போட்டிகளில் தொடர்ந்து வெற்றியைப் பதிவாக்கி முதல் நான்கு அணிகளுள் ஒரு அணியாகத் தெரிவாக வேண்டும் என்பதே எமது தற்போதைய இலக்கு. ஹோலி சிறப்பான வீரர். அடுத்து வரும் போட்டிகளில் அவரின் வான வேடிக்கையைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்றார்.

## பந்து வீச்சே காரணம்

(ஜெய்ப்பூர்)

எமது அணியின் தோல்விக்குப் பந்து வீச்சே காரணம் என ராஜஸ்தான் றோயல் அணிக் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்தார்.

கடைசி 5 ஓவரில் 80 ஓட்டங்கள் கொடுத்துவிட்டோம். இது ஆட்டத்தின் போக்கை மாற்றியது. டில்சானும், டிவில்லியர்சும் சிறப்பாக ஆடினர்.

எங்களது பந்துவீச்சு மிகவும் கவலை அளிக்கும் வகையில் உள்ளது. இருப்பினும் ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டிகளில் எந்தவொரு பந்து வீச்சாளரும் எல்லாப் போட்டிகளிலும் ஒரே மாதிரியாகப் பந்து வீச முடியாது.

பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தக் கூடிய ஆட்டம் எனில் அது ருவென்ரி 20 ஆகத்தான் இருக்க முடியும். அதற்காக அவர்கள் அதிலிருந்து விடுபட்டு ஓரளவேனும் சிறப்பாகப் பந்து வீச முற்பட வேண்டும் . பெங்களூர் அணி வீரர் அப்பண்ணா சிறப்பாக பந்து வீசினார் என்றார்.



சச்சின் டெண்டுல்கரின் பிறந்த நாளை முன்னிட்டு ராஜஸ்தான் மாநிலம் பிகானீரில் நேற்று அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர் சிறார்கள். நேற்று சச்சின் தனது 39ஆவது வயதை நிறைவு செய்து 40ஆவது வயதில் காலடி வைப்பது குறிப்பிடத்தக்கது.

## சிறந்த மேடை ஐ.பி.எல்.

(டில்லி)

இளம் வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்த சிறந்த மேடையாக ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் அமைவதாக என இலங்கை அணியின் கப்டன் மஹேலஜெயவர்த்தன தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; ஐ.பி.எல்.போட்டிகளில் சாதித்த பின்னரே அவுஸ்ரேலிய அணியில் வோனர் இடம்பிடித்தார். இதேபோன்று ரவீந்திர ஜடோ வும் ஐ.பி.எல். ஊடாகவே தனது திறமைகளை வெளிக்காட்டி இந்திய அணியில் இடம்பிடித்தார். இதனை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.



## டெஸ்ட் அணியில் தொடர்ந்தும் இடம்

(ரோஸியவ்)

டெஸ்ட் அணியில் பொண்டிங்குக்கு இடம் உண்டு என அவுஸ்ரேலிய அணியின் கப்டன் மைக்கல் கிளார்க் கூறியுள்ளார்.

பொண்டிங் குறித்து அவர் மேலும் கூறியது; மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பொண்டிங் சிறப்பாகவே விளையாடி வருகிறார்.

நவம்பர் மாதத்தில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக அவுஸ்ரேலியா டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க உள்ளது. இப்போட்டிக்கு பல மாதங்கள் இருக்கின்றன என்றாலும், தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பொண்டிங் விளையாடுவார் என்பதை இப்போதே உறுதி செய்கிறேன். பொண்டிங்கைப் போன்று அனுபவ வீரர்கள் எப்பொழுதும் அணியில் இருக்கவேண்டும். அவரின் ஆட்டத்திறன் குறைந்ததாக எனக்குத் தெரியவில்லை. அவர் ஒரு சம்பியன் வீரர். அவர் எடுக்கும் முடிவு அணிக்கும், அவுஸ்ரேலியாவுக்கும் எப்பொழுதுமே நன்மை பயக்கும் என்று நான் நம்புகின்றேன். அவர் அணியில் விளையாடுவதை சக வீரர்களும் விரும்புகின்றனர். அது எல்லோருக்கும் கிடைக்காத விடயம். அவருக்கான காலம் வரும் போது அவரே விலகிக் கொள்வார் எனவும் தெரிவித்தார்.

கிளார்க் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணித் தேர்வுக் குழுவில் ஒருவராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## திணறுகிறது அவுஸ்ரேலியா

(டொமினிகா)

சில்லிங்போட்டின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது அவுஸ்ரேலிய அணி திணறி வருகின்றது.

மேற்கிந்தியத்தீவு, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் கடைசிப் போட்டி டொமினிகாவில் நடைபெற்று வருகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய அவ் அணி ஒரு ஓட்டத்தைப் பெற்றவேளை முதலாவது விக்கெட்டை இழந்து தடுமாறியது. தொடர்ந்து இணைந்த வட்சன், வோனர் இணை மிகச் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றது. இருப்பினும் அந்த இணையும் பிரிக்கப்பட்டது. இறுதியில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை அவுஸ்ரேலிய அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் வோனர் 50, வட்சன் 41, பொண்டிங் 23, கிளார்க் 24 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். சிறப்பான முறையில் பந்து வீசிய சில்லிங்போட் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்ரேலிய அணி 1-0 என்ற நிலையில் முன்னிலை வகிக்கின்றமை. குறிப்பிடத்தக்கது.

## நம்பமுடியாத வெற்றி

மான்டி கார்லோ மாஸ்டர் ரென்னிஸ் தொடரில் தொடர்ந்து எட்டு முறை சம்பியன் பட்டம் வென்றது நம்ப முடியாததொரு அனுபவம் என ஸ்பெயினின் நடால் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,வெற்றி,தோல்வி என்பது சகஜம். இருப்பினும் அதில் நாம் எந்தளவு எதிர் வீரருக்கு நெருக்கடி கொடுக்கின்றோம் என்பது தான் முக்கியம். அந்த வகையில் ஜோகோவிச் மிகச் சிறந்த வீரர் என்பதில் ஐயமில்லை. அவருடன் விளையாடுவதன் மூலம் எமக்கும் சிறந்த அனுபவங்கள் கிடைக்கும்.

அடுத்து வரும் போட்டிகளிலும் கிண்ணம் வெல்ல வேண்டும் என்பதே எனது இலக்கு. இதற்கு உடற்தகுதியும் இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

# சுன்னாகம் பொலிஸார் நடத்திய புத்தாண்டுப் போட்டி முடிவுகள்





(யாழ்ப்பாணம்)

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சுன்னாகம் பொலிஸாரினால் நடத்தப்பட்ட பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

கிறிஸ் மரம் ஏறுதல் முதலாமிடம் ஆர். சிவானந்தன், இரண்டாமிடம் க. வசிகரன்.

தலையணைச் சண்டை முதலாமிடம் க. வசிகரன், இரண்டாமிடம் எஸ். சுந்தரலிங்கம்.

பணிஸ் சாப்பிடுதல் முதலாமிடம் அ. சுகந்தன், இரண்டாமிடம் பி. பிரசன்னா, மூன்றாமிடம் எஸ். சிந்துயா.

சாக்கோட்டம் முதலாமிடம் எஸ். மேகலக்சன், இரண்டாமிடம் அ. அருள்செல்வன், மூன்றாமிடம் எஸ். சுகந்தன்.

பலூன் ஊதி உடைத்தல் முதலாமிடம் கே. விதுர்சன், இரண்டாமிடம் க. இதயராஜ், மூன்றாமிடம் என். திலீபன்.

முட்டை எறிந்து பிடித்தல் முதலாமிடம் ஏ. வித்தியா, இரண்டாமிடம் எஸ். ஜெயசீலன்.

ஐஸ் கிறீம் குடித்தல் முதலாமிடம் எஸ். கஸ்தூரி, இரண்டாமிடம் கே. சிவனுஜா.

தேசிக்காய் ஓட்டம் முதலாமிடம் ப. பிரசாத், இரண்டாமிடம் ஆர். சங்கவி.

தண்ணீர் நிரப்புதல் முதலாமிடம் என். வினோஜா, இரண்டாமிடம் எஸ். செந்தூரன்.

ஊசி நூல் கோர்த்தல் முதலாமிடம் ஏ. நித்தியா, இரண்டாமிடம் ஜெயசீலன்.

தேய்காய் துருவுதல் முதலாமிடம் கே. சர்மிளா.

தென்னோலை பின்னுதல் முதலாமிடம் என். பாமினி.

நன்றாக அழுதல் முதலாமிடம் கே. கேசவன்.

நன்றாகச் சிரித்தல் எஸ். தமிழ்வானம். சங்கீதக் கதிரை முதலாமிடம் ச. சுபாஜினி.

யானைக்கு கண் வைத்தல் முதலாமிடம் வி. வினோஸ்.

கயிறு இழுத்தல்

ஆண்கள் பிரிவில் முதலாமிடம் ஏழாலை கண்ண கி விளையாட்டுக்கழகம், இரண்டாமிடம் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம்.

பெண்கள் பிரிவில் முதலாமிடம் கே. சர்மிலா அணி, இரண்டாமிடம் ஆர். நிசாந்தினி அணி.

தாச்சிப் போட்டி

ஆண்கள் பிரிவில் முதலாமிடம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம், இரண்டாமிடம் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம்.

கபடி ஆண்கள் பிரிவில் முதலாமிடம் இணுவில் இந்து விளையாட்டுக்கழகம்

கரப்பந்து ஆண்கள் பிரிவில் முதலாமிடம் நியூலேறியல் விளையாட்டுக்கழகம், இரண்டாமிடம் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம்.

பெண்கள் பிரிவில் முதலாமிடம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம், இரண்டாமிடம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம்.

மரதன் ஓட்டம்

ஆண்கள் பிரிவில் முதலாமிடம் ப. ஜயந்தன், இரண்டாமிடம் கே. சுஜிஸ்கர், மூன்றாமிடம் ரீ. கிருஸ்ணர், நான்காமிடம் எ. அருள்செல்வன், ஐந்தாமிடம் ஜெ. விஜயராஜ்.

பெண்கள் பிரிவில் முதலாமிடம் என். சுமதி, இரண்டாமிடம் வை. மக்கையற்கரசி, மூன்றாமிடம் எம். தாரணி, நான்காமிடம் எஸ். கஸ்தூரி, ஐந்தாமிடம் ஆர். அபர்னா. (148)

# முழங்காவிலிலும் புத்தாண்டு விளையாட்டு

(கிளிநொச்சி)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 651 ஆவது படையணியின் ஏற்பாட்டில் விளையாட்டு நிகழ்வுகள் கடந்த 22ஆம் திகதி முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த படையணியின் கட்டளை அதிகாரி தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் கிறிஸ்மரம் ஏறுதல், முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை உள்ளிட்ட பல பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை, ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது. இதில் ஆண்கள் பிரிவில் நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னி சென் மேரிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த யோகேஸ்வரன் இராஜேஸ்வரன், பெண்கள் பிரிவில் வெற்றிதாஸ் பிரியந்தின் ஆகியோர் முதலிடம் பெற்றனர்.

இவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் பரிசாக வழங்கப்பட்டது. இப்போட்டி நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர், கிராம அலுவலர், பொலிஸார், இராணுவத்தினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விளையாட்டுச் செய்திகள்

# சிறந்த வீரர்கள் கௌரவிப்பு

(சுன்னாகம்)

உடுவில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் சிறந்த வீரர்களாக ஐந்து பேர் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இதில் கௌரவிக்கப்பட்டோரின் விபரம் வருமாறு: சிறந்த தடகள வீராங்கனையாக ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தரணிகா, சிறந்த தடகள வீரராக நியூ வொறியஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜஸ்மினன், சுவட்டு நிகழ்ச்சியில் சிறந்த வீராங்கனையாக இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கஸ்தூரி, சிறந்த மைதான நிகழ்ச்சி வீராங்கனையாக ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தரணிகா, சிறந்த மைதான நிகழ்ச்சி வீரராக நியூ வொறியஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜய்மின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (93)

# முல்லை வலய மட்ட வலைப்பந்து சம்பியனானது விசுவமடு ம.வி.

(வற்றப்பளை)

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் விடுவமடு மகாவித்தியாலய அணி சம்பியனானது.

முல்லைத்தீவு வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடர் அண்மையில் வற்றப்பளை மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் விடுவமடு மகாவித்தியாலய அணியும், உடையார்கட்டு மகாவித்தியாலய அணியும் மோதின.

ஆரம்பம் முதலே விசுவமடு மகாவித்தியாலய அணி ஆதிக்கம் செலுத்தியது. இதில் முதல் பாதி ஆட்டத்தில் மிகவும் வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்திய விசுவமடு மகாவித்தியாலயம் 8:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சுதாகரித்துக் கொண்டு பழிதீர்க்கும் வகையில் உடையார்கட்டு மகாவித்தியாலயம் அணி ஆடும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் விசுவமடு மகாவித்தியாலய அணியின் ஆட்ட வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாது உடையார்கட்டு மகாவித்தியாலய அணி திணறியது. இரணடாவது பாதி ஆட்டத்தில் மேலும் 13 புள்ளிகளை விசுவமடு மகா வித்தியாலயம் பெற்றது. இறுதியில் 21-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்ற விசுவமடு ம.வி. அணி முல்லை வலய சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் செம்மலை மகாவித்தியாலய அணியும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணியும் மோதின.

இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி செம்மலை மகாவித்தியாலய அணி 28: 8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் முல்லை வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் உட்பட பாடசாலை சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், ரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.







**திருநெல்வேலி சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வண்ணார்பண்ணை வள்ளுவன் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கயிறு இழுத்தலையும், மா ஊதி காசு எடுக்கும் போட்டியையும், ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ. இரவீந்திரதாசன் வெற்றியீட்டிய வீரருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம்.** (26)



**ஜெயலலிதா இலங்கையின் இனப்பிரச்சினைக்கு எத்தகைய அரசியற் தீர்வை முன்மொழிகிறார்? அதைச் செயற்படுத்துவதற்காக அவர் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்? அதற்கான பொறிமுறைகளை அவர் எவ்வாறு உருவாக்குவார்? அதற்காக அவர் முழுமையான அளவில் விசுவாசமாக உழைக்கத் தயாரா? இதெற்கெல்லாம் அவரிடம் பதிலில்லை. இதற்கான பதிலையோ விளக்கத்தையோ தமிழ்ப் பொதுவெளியினர் எதிர்பார்ப்பதும் இல்லை. எழுகின்ற அலையில் சேர்ந்து முழங்கிக்கொள்வதே பெரும்பாலானவர்களின் கதியாக உள்ளது.**

- கிருஸ்ணமூர்த்தி அரவிந்தன்

# உணர்ச்சிகரமாய் முழங்கியபடி உதவிகள் செய்யாமல் நழுவுதல்!

**போகிற** போக்கைப் பார்த்தால் எதிர்காலத்தில் சுப்பிரமணியம் சுவாமி, சோ, ஹிந்து ராம் போன்றவர்கள் கூட தமிழ்த் தேசியவாதிகளாகக் கருதப்படக்கூடிய நிலை உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனென்றால் நீண்டகாலமாகவே விடுதலைப் புலிகளுக்கும் ஈழப் போராட்டத்துக்கும் எதிர்த்திசையில் நின்ற தமிழ்நாடு முதல்வர் செல்வி ஜெயலலிதா இன்றுஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினையில் முன்னணிப் போராளியாக பெரும்பாலான தமிழ் ஊடகங்களாற் கொண்டாடப்படுகிறார்.

நெடுமாறன், சீமான், திருமாவளவன், வைகோ, கொளத்தூர் மணி போன்ற நீண்டநாள் ஈழப் போராட்ட ஆதரவாளர்களையெல்லாம் பின்வரிசைக்குத் தள்ளி விட்டார் ஜெயலலிதா.

ஈழப் பிரச்சினையில் இன்று ஜெயலலிதா எடுத்து வரும் அதிரடி நடவடிக்கைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இவர்கள் மட்டுமல்ல தமிழகத்தின் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி கூடத் திணறிக் கொண்டிருக்கிறார்.

சற்று உன்னிப்பாக இதைப் பற்றிச் சொன்னால் ஈழ ஆதரவாளர்களையும் விட மத்திய அரசையும் விட ஜெயலலிதா குறிவைத்திருப்பது வழக்கம்போல அவர் எதிரியாகக் கருதும் கருணாநிதியையே.

ஆகவேதான் இலங்கையின் அரசியற் பிரச்சினைகளைக் குறித்து ஜெயலலிதா எடுக்கும் முடிவுகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் - தனித்துத் தீர்மானமெடுக்க முடியாமல் திரு. கருணாநிதி ஜெயலலிதாவின் அறிவிப்புகளுக்குப் பின்னே இழுபடுகிறார்.

மெய்யாகவே ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைப் பிரச்சினையிலும் அதற்கான போராட்டத்திலும்பொருத்தமான தீர்மானங்களை ஜெயலலிதாவும் எடுக்கவில்லை. கருணாநிதியும் எடுக்கவில்லை. அப்படி ஒருஎண்ணம் கூட இவர்கள் இருவரிடத்திலும் கிடையாது. அதற்கான உணர்வோ விருப்பமோ அவசியமோ கூட இருவருக்கும் இல்லை.

ஆனால் ஈழ அரசியற் பிரச்சினை இருவருக்கும் தேவைப்படுகிறது. ஒரு சுவைமாறாத பண்டமாக தமிழக மக்களுக்கும் அங்குள்ள ஊடகங்களுக்கும் ஈழப்பிரச்சினை இருக்கும் வரையில் ஜெயலலிதா, கருணாநிதி போன்றோருக்கு மட்டுமல்ல சுப்பிரமணியம் சுவாமி, சோ, திருமாவளவன், சீமான் தொடக்கம் குஷ்பு, ரீமாசென் வரை எல்லோருக்கும் அது தேவைப்படும். ஆகவே அவர்கள் அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினை அந்தளவுக்கு இன்று உலகம் முழுவதுக்கும் சுவையான ஒரு பண்டமாகியுள்ளது. அது இலங்கை அரசுக்கு மட்டுமன்றி தமிழ் - சிங்கள இனத்துவ அரசியலாளர்களுக்கு மட்டுமன்றி பிராந்திய நாடுகளுக்கு சர்வதேச சமூகத்துக்கு மனித உரிமைகள் அமைப்புகளுக்கு ஆய்வாளர்களுக்கு ஊடகங்களுக்கு எழுத்தாளர்களுக்கு எனப் பலருக்கும் அது பயன்படுகிறது.

"பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது" என்று ஊர்வழக்கிற் சொல்வார்கள். அதே போல இவர்களுக்கெல்லாம் இனப் பிரச்சினை விவகாரம் விளையாட்டுப் பொருளாக இலாபந்தரும் விசயமாக இருக்கிறது.

ஆனால் இனப்பிரச்சினை என்ற நெருப்பின் மத்தியில் வாழ்கின்ற (இலங்கை) மக்களுக்கு - குறிப்பாகத் தமிழர்களுக்கு இதெல்லாம் உயிரோடு விளையாடுவதைப்போலவே அமைகிறது.

காயங்களோடும் வலியோடும் உள்ள மக்களை இது மேலும் அவமானப்படுத்தும் சங்கதியாகும். அவர்களின் வலியை மேலும் அதிகரிப்பதாகவே அமையும்.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது புதிய ஒரு விசயமுமல்ல புதிய விவகாரமுமல்ல. இன்னும் அதைப்புதிதாக யாரும் ஆய்வு செய்யவேண்டிய தேவையுமில்லை. போரினாற் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை, அவர்களுக்கான தேவைகள்,அவர்களுடையவிருப்பங்கள், அவர்கள் எதிர்பார்க்கின்ற சங்கதிகள் கூடப் பகிரங்கமானவை.

இவற்றை அறிவதற்கு யாரும் புதிய பூதக்கண்ணாடிகளைத் தேட வேண்டியதில்லை. ஆனால் உலகம் இதையெல்லாம் விட்டுவிட்டு கண்ணாமூச்சியாடிக் கொண்டேயிருக்கிறது. இந்தக் கண்ணாமூச்சியாட்டத்தில் ஆளாளுக்கு தங்கள் பங்கு ஆட்டத்தை ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.

உன்னிப்பாக அவதானிக்கும் எவருக்கும் இந்தச் சங்கதிகள் எல்லாம் சினத்தையே ஏற்படுத்தும். அல்லது சிரிப்பையூட்டும். அதிலும் "இனத்தாலும் பண்பாட்டாலும் ஒன்று பட்டவர்கள்" "ரத்தத்தின் ரத்தங்கள்" "உடன் பிறப்புகள்" என்றெல்லாம் உணர்ச்சி பொங்கப் பேசும் தமிழகத்தினரின் இந்த மாதிரியான கீழ்த்தரமான அரசியல் அணுகுமுறைகள் வெட்கத்துக்குரியவை என்பது பொதுவான ஈழத்தமிழர்களின் கருத்தாகும்.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரையில் அவர் தன்னுடைய அதிரடித் தீர்மானங்களின் மூலமாகத் தன்னைச் சுற்றி ஒரு பிம்பத்தை ஏற்படுத்துவதில் வல்லவர். அதேபோல அவருடைய அதிரடி நடவடிக்கைகளே அவரைப் படு பாதாளத்திலும் தள்ளுவன.ஆனால் தன் முன்னே உள்ள நிலைமையைக் கையாள்வதில் அவர் வல்லவர் அசாத்தியமானவர் என்று சொல்லப்படுவதுண்டு.

இதை நிரூபிக்குமாற்போல இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தை இன்று அவர் கையாண்டு வருகிறார். சமநேரத்திலேயே அவர் மத்திய அரசுக்கும் தி.மு.க.வுக்கும் தனக்கு எதிரான சக்திகளுக்கும் சவாலை விடுமளவுக்கு இந்த விவகாரத்தைப் பயன்படுத்துகிறார.

இதன்மூலம் தமிழகத்தில் அவருக்கு ஏற்படுகின்ற நெருக்கடிகளைச் சமாளித்துக் கொள்ள அவரால் முடிகிறது. எந்த அளவுக்கு ஜெயலலிதா கொழும்புடன் பகைத்துக்கொள்கிறாரோ அந்த அளவுக்கு அவர் தமிழகத்திலும் ஈழ ஆதரவாளர்களாலும் தமிழ்த் தேசிய சக்திகளாலும் கொண்டாடப்படுகிறார். அப்படிக் கொண்டாடப்படுவதையே ஜெயலலிதாவும் விரும்புகிறார்.

இப்பொழுது கொழும்பு ஜெயலலிதாவைக் கடுமையாக விமர்சிக்கிறது. கொழும்புடன் பகைக்கும்போது அது தமிழர்களிடம் ஏகப்பெரும் மரியாதையை ஜெயலலிதாவுக்கு வழங்குகிறது. யார் கொழும்புடன் பகைக்கிறார்களோ அவர்கள் தமிழர்களின் கொண்டாட்டத்துக் குரியவர்களாகிறார்கள். எனவே கொழும்பைப் பற்றிக் கடுமையாக விமர்சிப்பதன் மூலம் தமிழர்களிடம் பேரபிமானத்துக்குரிய இடத்தை அவர் பெற்றுக் கொள்கிறார். இதன்மூலம் அவர் தமிழ்நாட்டின் ஏனைய உதவிகளைச் செய்யும் பொறுப்பிலிருந்தும் அதற்கான பொருளாதார இழப்பிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொண்டார்.

ஆனால் வெளிப்படையாகப் பார்க்கும் போது தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பது போலத் தோன்றும். அதே வேளை இழப்புகளோ பொறுப்புகளோ இல்லாத ஒரு நிலையையும் பெற்றுக் கொள்ளலாம். இதையே ஜெயலலிதா எதிர்பார்த்தார். அதுவே நடக்கும்போது அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியும்ஏகப்பட்ட நன்மையும் கிடைத்திருக்கிறது.

ஆனால் ஜெயலலிதா இலங்கையின் இனப்பிரச்சினைக்கு எத்தகைய அரசியற் தீர்வை முன்மொழிகிறார்? அதைச் செயற்படுத்துவதற்காக அவர் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்? அந்த நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கான பொறிமுறைகளை அவர் எவ்வாறு உருவாக்குவார்? அதற்காக அவர் முழுமையான அளவில் விசுவாசமாக உழைக்கத் தயாரா?

இதெற்கெல்லாம் அவரிடம் பதிலில்லை. இதற்கான பதிலையோ விளக்கத்தையோ தமிழ்ப் பொது வெளியினர் எதிர்பார்ப்பதும் இல்லை. பதிலாக எழுகின்ற அலையில் சேர்ந்து முழங்கிக்கொள்வதே பெரும்பாலானவர்களின் கதியாக உள்ளது.

வெளித்தோற்றத்துக்கு தமிழகக் கட்சிகளின் அல்லது தமிழக அரசின் இத்தகைய செயற்பாடுகள் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவானவை போலத் தெரியலாம். ஆனால் இவை எத்தகைய அடிப்படைகளையும் கொண்டிராதவை என்பதைக் கடந்த கால நிகழ்கால அவதானங்களைக் கொண்டே மதிப்பிட முடியும். எனினும் தமிழ் மனதுக்கு அதை ஏற்றுக்கொள்ளவும் நம்பவும் கடினமாகவே உள்ளது.

தமிழ் மனம் என்பது பெரும்பாலும் உணர்ச்சிகளால் கட்டமைக்கப்பட்டது.

> *கொழும்புடன் பகைக்கும்போது அது தமிழர்களிடம் ஏகப்பெரும் மரியாதையை ஜெயலலிதாவுக்கு வழங்குகிறது. யார் கொழும்புடன் பகைக்கிறார்களோ அவர்கள் தமிழர்களின் கொண்டாட்டத்துக்குரியவர்களாகிறார்கள். எனவே கொழும்பைப் பற்றிக் கடுமையாக விமர்சிப்பதன் மூலம் தமிழர்களிடம் பேரபிமானத்துக்குரிய இடத்தை அவர் பெற்றுக் கொள்கிறார். இதன் மூலம் அவர் ஏனைய உதவிகளைச் செய்ய வேண்டிய பொறுப்பிலிருந்தும் அதற்கான பொருளாதார இழப்பிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறார்.*

அதற்கு உணர்ச்சிகரமான விசயங்கள் எது நடந்தாலும் அதன்பால் அதுசுலபமாக ஈர்க்கப்பட்டுவிடும். இந்தஅடிப்படையைத் தமிழ் அரசியலாளர்கள் நன்றாகவே புரிந்து வைத்துள்ளனர்.

எனவே அதற்குத் தகுந்த மாதிரி அவர்கள் கவர்ச்சிகரமாக உணர்ச்சிகரமான விசயங்களை - இரத்தத்தில் தோய்த்த இறைச்சியாக - அடிக்கடி போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். புதிய இறைச்சிகளை மணந்தறியாத வரைக்கும் பழைய இறைச்சியே புதிய சரக்காக இருக்கும்.

ஆகவே தற்போது ஜெயலலிதா தமிழ்நாட்டுக்கு மட்டும் "அம்மா" என்ற அடையாளமாக அல்லாமல் மெல்ல மெல்ல ஈழத்தமிழர்களிடமும் அவர் "அம்மா" என்ற அபிமான அடையாளத்தைப் பெறக் கூடிய நிலையை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கிறார்.

ஜெயலலிதா எந்த அளவுக்கு இந்தக் கோணத்தில் - புனிதப் பாத்திரமேற்று விஸ்வரூபம் எடுக்கிறாரோ அந்த அளவுக்குக் கருணாநிதிசிறுத்து தமிழர்களுக்கு எதிரானவர் என்ற சிறுமைப்பாத்திரத்தை ஏற்கவேண்டும்.

இதுவே தமிழர்களின் அளவுகோலின் முறைமையாகும். இதை உருவாக்கியதில் கருணாநிதிக்கும் பங்குண்டு.

அவரவர் உருவாக்கிய வகைமைகளுக்குள் அவர்களே சிக்கிக்கொள்ளும் அரசியல் விதியிற்தான் இன்றைய தமிழர்களின் அரசியல் எதிர்காலமும் நிகழ்காலமும் சிக்கியிருக்கிறது. ஏன் அவர்களுடைய கடந்த காலமுந்தான்.

# பிரச்சினைக்கு தீர்வினை ஏற்படுத்த அரசிடம் முறையான திட்டம் இல்லை

## குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அரசாங்கத்திடம் முறையான வேலைத் திட்டமோ பொறிமுறையோ இல்லை என்பதனால் இந்திய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கு விஜயம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறான நிலையில் 13 பிளஸ் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாடு என்ன? அவற்றை ஏற்றுக்கொள்கிறதா? இல்லையா என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.


அரசாங்கத்திற்குள் இருப்பவர்களுக்கு பிரச்சினையை தீர்க்கவேண்டிய தேவையில்லை. அதனால் தான் அமைச்சுப் பதவிகளை கேட்டு நச்சரித்துக் கொண்டிருக்கின்றனர். அரசாங்கத திற்குள் இருக்கின்ற அதிகாரப் போட்டியினால் இனவாதம் தூண்டப்படுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, டி.யூ குணசேகர மற்றும திஸ்ஸ விதாரண போன்றவரகள் கூறுகின்றனர். எனினும் அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் சமபிக்க ரணவக்க போன்றவர்கள் அதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர்.

13 பிளஸ் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜிடம் உறுதியளித்திருக்கின்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த உறுதி மொழியை மறுதலித்துவிடுவாரோ என்ற அச்சம் எம்மிடத்தில் நிலவுகின்றது. அதேபோல பிரச்சினைகளுக்கு தர்வு காண்பதற்கு அரசாங்கத்திடம் முறையான பொறி முறையும் இல்லை.

தம்புள்ளையில் பள்ளிவால் மது நடத்தப்பட்ட தாக்குதல் இனவாதத்தைத் தூண்டும் வகையிலான சம்பவமாகும். ஐக்கிய தேசியக்கட்சிக்கு இன, மத, மொழி பேதங்களோ கிராமம் மற்றும் நகர பேதங்களோ இல்லை என்பதனால் தொழிலாளர் தினமான மே தினத்தை நாம் இம்முறை யாழப்பாணத்தில் நடத்துகின்றோம்.



அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கின்ற பாதை அபாயகரமானது. இந்த நிலைமை தொடருமாயின் பிரச்சினை அதிகரிக்கும். மகிந்த சிந்தனையின் பிரகாரம் பயணிக்குமாறு நாம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றோம். இந்திய எதிர்க்கட்சிகள் போல இலங்கையின் எதிர்க்கட்சிகள் ஐக்கியப்படுமாயின் பிரச்சினைக்கு என்றோ தீர்வை கண்டிருக்கலாம்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஈழத்தை கேட்கவில்லை. அக்கட்சியினால் தனியாக பயணிக்க முடியாது என்றும் எமக்குத் தெரியும். அதிகாரத்தை பகிர்ந்தளித்தால் அதனை சர்வதேசம் ஏற்கும். இலங்கை மக்களும் ஏற்றுகொள்வார்கள். ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழ் மக்களின் அடையாளத்திற்காக குரல் கொடுக்கின்றது என ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

# டெங்கு ஒழிப்பில் மாணவர்கள்



தற்போது நாடு முழுவதும் பெய்துவரும் மழையுடன் கூடிய காலநிலையினால் டெங்கு நுளம்புகள் பரவும் வாய்ப்புக்கள் காணப்படுவதால் சுகாதார அமைச்சு டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில், இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட சில அரச பாடசாலைகளிலும் இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரண்டு வாரகால பாடசாலை விடுமுறை முடிவடைந்து திறக்கப்பட்ட பாடசாலைகளில் டெங்கு நுளம்புகள் பரவுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படக்கூடும் என்பதால் பாடசாலைச் சுற்றாடலைச் சுத்தம் செய்யும் பணிகளில் மாணவர்கள் ஈடுபட்டனர்.

மலையகப் பகுதி பாடசாலைகளுக்கும் இந்த டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக பாடசாலைகளில் மாத்திரமன்றி அவரவர் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களை தொடர்ந்தும் பணித்து வருகிறது

# பள்ளிவாசலை அகற்ற முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு

(கொழும்பு)

தம்புள்ள ரங்கிரி விகாரை அமைந்துள்ள பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பள்ளி வாசலை, அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தி வேறு இடத்தில் நிர்மாணிப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இது சம்பந்தமாக பிரதமர் எடுத்துள்ள தீர்மானத்தை தாம் எதிர்ப்பதாகவும் இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்காக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் தமது கட்சி கலந்துகொள்ளவில்லை என ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரசின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரி வித்துள்ளார்.

அத்துடன் இது சம்பந்தமாக தம்புள்ள விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சு வார்த்தைக்கு தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் ஹசன் அலி குறிப்பிட்டுள் ளார்.

# தம்புள்ளை புனித பகுதியிலுள்ள சட்டவிரோத கட்டடங்கள் அகற்றல்

## ஆறு மாதத்தில் முடிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

தம்புள்ளை நகரில் உள்ள ரஜமஹா விகாரையின் புனிதப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தை வரும் 6 மாதங்களுக்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டுமென்று தம்புள்ளையில் நேற்று முன்தினம் நடந்த கூட்டமொன்றில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புதத சாசன அமைச்சின் ஏற்பாட்டில் அமைச்சின் செயலாளர், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் தம்புள்ளை ரஜமஹா விகா ரையின் தலைமை மதகுரு இனாமலுவே சுமங்கள தேரர் ஆகியோர் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.


இதனால் வரும் 6 மாதங்களுக்குள் புனித பிரதேசம் என்று கூறப்படும் பகுதியிலுள்ள சகல சட்ட விரோதமான கட்டடங்களும் அகற்றப்படும் என்று தீர்மானிக்கப்பட்டதாக இனாமலுவே சுமங்கள தேரர் பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

1982 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்ட புனிதப் பிரதேசத்தின் திட்ட வரைபடத்தில் முஸ்லிம் பள்ள்வாசலோ, இந்துக் கோவிலோ இருக்கவில்லை என்று கூறிய சுமங்கள தேரர், அந்த வழிபாட்டுத் தலங்களும் அகற்றப்படும் என்று தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 20 ஆமதிகதி, தான் தலைமை தாங்கி நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் போது வன்முறைத் தனமாக நடந்துகொண்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தவறானவை என்றும் அவர் கூறினார்.

ஊடகங்களே போலியான வீடியோ காட்சிகள் மூலம் திரிபுபடுத்தப்பட்ட செய்திகளை வெளியிட்டதாகவும் சுமங்கள தேரர் குற்றஞ்சாட்டினார்.

# அம்பாந்தோட்டை மூலம் வாகன விலை குறையும்



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் அடுத்த மாதம் தொடககம் வாகனங்கள் இறக்கப்படவுள்ளதால் எதிர்காலத்தில் வாகனங்களின் விலைகள் கணிசமாக குறையும் என துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் ரோஹித அபய குணவர்தன கூறினார்.

சர்வதேச கடற்பாதை அம்பாந்தோட்டையிலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. இதனால், கடற்பாதையிலிருந்து அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு பொருட்களை கொண்டுசெல்ல மூன்று மணித்தியாலங்கள் மட்டுமே எடுக்கும்.

ஆனால், சர்வதேச கடற்பாதையிலிருந்து கொழும்பு துறைமுகத்துக்கு சரக்குகளை கொண்டுசெல்ல ஒன்பது மணித்தியாலங்களுக்கு மேல் எடுக்கும். இதனால் கப்பல் கூலிகள் 60 சதவீதமளவில் குறைய வாகனங்களின் விலையும் குறையும் என பிரதி அமைச்சர் கூறினார்.

இதேசமயம், வாகனங்களின் விலைகள் 25 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கக்கூடும் என வாகன வர்த்தகர்கள் கூறியுள்ளனர். இவை வாகனம் காவுவதற்கான விசேட வாகனம் மூலம் உரிய இடத்துக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டும்.

எனவே, இதற்கான மேலதிக செலவினால் வாகனங்களில் விலைகள் அதிகரிக்கக்கூடும் என அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

# அம்பாந்தோட்டையை பயன்படுத்த ஆர்வம் காட்டாத நிறுவனங்கள்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமும் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றைப் பயன்படுத்த அனைத்துலக கப்பல் மற்றும் விமான நிறுவனங்கள் ஆர்வம் காடடவிலலையெனத தெரிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் திறந்து வைக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகளாகியுள்ள நிலையில் அங்கு குறிப்பிட்ட சில கப்பல்களே வந்துள்ளன.

துறைமுகத்தின் நுழைவாயிலில் காணப்பட்ட பாரிய கற்பாறைகளை அகற்ற பல மில்லியன் டொலரை அரசு செலவிட்டபோதும், இங்கு போதிய கபபல்கள் வராதது அரசாங் கத்தை ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது.

இந்தநிலையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு கப்பல்களை அனுப்புமாறு பங்களாதேஸுடன் அரசு பேச்சுகளை நடத்தியுள்ளது. வேறும் பல நாடுகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

அதேவேளை கொழும்புத் துறைமுகததின் ஊடாக இறக்கப்பட்டு வந்த மீளப புதுப்பிக்கப்பட்ட வாகனங்களை, அம்பாந்தோட்டை துறைமுகத்திலேயே இறக்கவேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனால் வாகன இறக்குமதியாளர்கள் விசனமடைந்துள்ளனர்.

அதேவேளை, அம்பாந்தோட்டையில் மத்தால என்ற இடத்தில் அமைக்கபபட்டு வரும் இரண்டாவது விமான நிலையம் இந்த ஆண்டு இறுதியில் திறக்கப்படவுள்ளது.

இதன் கட்டுமானப் பணிகள் 70 வீதம் முடிவடைந்துள்ளன.

இந்த ஆண்டு இறுதியில் திறக்கப்படவுள்ள இந்த விமான நிலையத்துக்கு சேவையை ஆரம்பிப்பதில் அனைத்துலக விமான நிறுவனங்கள் ஏதும் ஆர்வம் காட்டவில்லை.

ஆறு நிறுவனங்கள் சேவையை ஆரம்பிக்க முன்வந்துள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளபோதும், அது இன்னமும் உறுதியாகவில்லை.



யாழ். புல்லுக்குளத்திற்கு முன்பாக இருந்த இராணுவக் காவலரண் அகற்றப்பட்டுள்ளதனைக் காணலாம்.

# யுத்த மலர்கள்

- எஸ்.ராமகிருஷ்ணன் -

இதுவரை சீனாவில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களில் மிக அதிகமான பொருட்செலவாக 100 மில்லியன் முதலீட்டில் உருவாக் கப்பட்டுள்ள ஷாங் யுமுவின் (Zhang Yimou) புதிய படம் The Flowers of War.

ஷாங் யுமு சீனாவின் முக்கிய இயக்குனர். ஹொலிவுட் சினிமா இவரை அழைத்து பங்காற்றச் செய்தபோது ஷாங் யுமு உருவாக்கிய Hero மற்றும் House of Flying Daggers வரலாற்றைப் பின்புலமாக கொண்ட சாகசப்படங்களாக இருந்தன.

அதிலிருந்து விலகி Riding Alone for Thousands of Miles படத்தை மீண்டும் இயக்கிய போது ஷாங்கின் கவித்துவ சினிமாவின் அடுத்த நிலை உருவாகிவிட்டது போலிருந்தது. அந்தப் படம் சமகால உலகத்திரைப்படங்களில் முக்கியமான ஒன்று. இறந்து போன பையனின் இறுதி ஆசையை நிறைவேற்ற வயதான அப்பா அலைந்து திரிகிறார் என்பது முற்றிலும் புதியதொரு கதைக்களம்.

1937இல் சீனாவின் தென்பகுதி நகரமான நான்ஜிங்கை (Nanjing) ஜப்பானிய இராணுவம் எவ்வாறு ஆக்கிரமித்து அங்குள்ள இரண்டு இலட்சம் மக்களை கொன்று குவித்து இருபதாயிரம் பெண்களை வன் புணர்ச்சி செய்து படுகாயப்படுத்திக் கொன்றது என்ற துயர சம்பவத்தை விவரிக்கிறது, The Flowers of War.

சீனவரலாற்றில் அதிகம் பேசப்பட்ட இந்தச் சம்பவம் குறித்த படத்தை ஷாங் யுமு உருவாக்க முயன்ற போது ஒட்டுமொத்த சீனாவும் மிகுந்த அக்கறையோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது, டிசம்பர் 2011இல் படம் வெளியான போது அது வழக்கமான ஹொலிவுட் சினிமாவின் பாணியில் நான்ஜிங் படுகொலை-யை யுத்த சாகசப்படம் ஒன்றைப் போல உருவாக்கியிருக்கிறது என்ற கடுமையான விமர்சனம் எழுந்தது. ஜப்பானில் இப்படத்தை திரையிடக்கூடாது என்று கண்டனக்குரல்கள் எழுந்தன.



ஆனால் சீனாவில் இப்படம் வசூலில் பெரிய சாதனையை நிகழ்த்தியது.


நான்ஜிங் படுகொலை-யைப் பற்றி Geling Yan எழுதிய நாவலான Flowers of Nanjing ஐ ஷாங் யுமு படமாக்கியிருக்கிறார். படத்தின் மையம் நான்ஜிங் படு-கொலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சூழலில் அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் அடைக்கலமாகும் அமெரிக்கரான Christian Bale முக்கிய கதாபாத்திரம். அந்த தேவாலயத்தில் இளம்மாணவிகள் சிலர் முன்னதாகவே தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். தொடர்ந்த குண்டுமழையால் நகரின் புகழ்பெற்ற விபச்சார விடுதிகள் தாக்கப்படவே அங்குள்ள இளம்விலைமாதர்கள் தேவாலயத்தில் அடைக்கலமாகிறார்கள்.

ஒரு பக்கம் மாணவிகள் மறுபக்கம் விலைமாதர்கள், இரண்டுக்கும் நடுவில் பாதிரியார் வேஷமிட்ட ஜோன் மில்லர் என்ற கதாபாத்திரமான கிறிஸ்டியன் பேல், வெளியே ஜப்பானிய இராணுவத்தின் இடைவிடாத தாக்குதல். இந்த நெருக்கடியை ஒரு சட்டகமாகக் கொண்டு கதை விரிகிறது. அடைக்கலமாகியுள்ள பெண்களை நகரை விட்டு வெளியே அழைத்துச் சென்று காப்பாற்ற ஜோன் மில்லர் என்ன முயற்சிகளைச் செய்கிறார் என்று கதை நகருகிறது.

தேவாலயத்தினை சுற்றிவளைக்கும் ஜப்பானிய இராணுவத் தளபதி Hasegawa தான் தேவாலயத்தை ஒரு போதும் தாக்க மாட்டேன் என்று உறுதியளித்து அங்குள்ள இளம்மாணவிகளை கொண்டு ஜப்பானிய இராணுவத்தின் வெற்றிகீதத்தை சேர்ந்திசையாகப் பாடும்படி கட்டாயப்படுத்துகிறார். இதற்காக 13 மாணவிகள் இராணுவ முகாமிற்கு கொண்டு போகப்பட இருக்கிறார்கள். இதிலிருந்து எப்படித் தப்புகிறார்கள் என்பதே படத்தின் முடிவு.

Hotel Rwanda, Schindler's List இரண்டு படங்களையும் அதிகம் நினைவூட்டுகிறது ஷாங் யுமுவின் இப்படம். ஆனால் ஹோட்டல் ருவாண்டா தந்தது போன்ற அக நெகிழ்வை, அதிர்ச்சியை The Flowers of the War தரவில்லை, படுகொலைக் காட்சிகளை விரிவாகப் படமாக்கியுள்ள ஷாங் யுமு விலைமாதருக்கும் மாணவிகளுக்குமான விலகல் மற்றும் நெருக்கத்தை மேலோட்டமாகவே கடந்து போய்விடுகிறார். ஜோன் மில்லர் கதாபாத்திரம் ஷிண்ட்லரின் மறுபதிப்பு போலவே காணப்படுகிறது.

ஹொலிவுட்டின் யுத்தப் படங்களை விட சிறப்பாக ஜப்பானிய இராணுவத்தின் படுகொலை காட்சிகள் படமாக்கப்பட்டிருக்கின்றன. தேர்ந்த ஒளிப்பதிவும் அரங்க அமைப்பும்,




பேரழகியான விலைமாதாக நடித்துள்ள Ni Ni யின் வசீகர நடிப்பும் படத்தின் முக்கிய பலம். ஆனாலும் படம் முடியும் போது ஒரு துயரசம்பவத்தின் ஆழ்ந்த வலியை அது பார்வையாளனுக்கு ஏற்படுத்தவில்லை,

Not One Less படத்தின் எளிமையும் அழகும் போல ஒன்றை நூறு மில்லியன் செலவழித்தும் ஷாங் யுமு அடைய முடியவில்லை என்பதுதான் நிஜம்.

வணிக பிரம்மாண்டமில்லாத, எளிய கவித்துவமான படம் ஒன்றை ஷாங் யுமு மீண்டும் உருவாக்குவார் என்பதற்காக காத்திருக்க வேண்டியிருக்கிறது.

# புத்தக வரிசை பத்து

வலை உலகு பெரிதாகப் பெரிதாக, உலகெங்கும் மக்களின் குரல் முன்னெப்போதும் இல்லாத அளவு பொதுவில் கேட்கத் தொடங்கியிருக்கிறது. இன்னமும் வலை வெளி அனைத்து மக்களின் குரல் ஒலிக்கும் இடமாக ஆகவில்லை என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். எப்படியுமே எழுதத் தொடங்குபவர்கள், அல்லது துணிபவர்கள் எந்த ஜனத்திரளிலும் குறைவான எண்ணிக்கையானவர்களாகத்தான் இருப்பார்கள். கடிதம் எழுதவே நம்மில் பலர் யோசிப்பவர்கள்.

ஆனால் இப்போது பத்திரிகை அலுவலகத்தில் இருக்கும் பல ஊழியர்களோ, தொலைக்காட்சி / சினிமா/




வானொலி நிலையங்களில் உள்ள ஊழியர்களோ, பிரசுரங்களில் உள்ள பதிப் பாளர்களோ இடையில் இருந்து தொல்லை செய்யாத வெளி இது. அதே போல அரசியல் கட்சிகளின் அடுக்கு அமைப்புகளோ, பல தன்னார்வக் குழுக்களில் உள்ள பலவகை சமூகக் குழு அரசியலோ தடையாக இல்லாத வெளி இது.

அனேகமாக, வலையில் உலவத் தேவையான சில கருவிகள், வலைத் தளங்களுக்குப் போகத் தேவையான தொடர்பு வசதி, கொஞ்சம் மின்சக்தி இருந்தால் எவரும் கதை / கட்டுரை / நாடகம் / கவிதை எழுதுபவராகப் பொதுவில் உலவலாம். படமெடுப்பவராக, க்ரா∴பிக்ஸ் ஓவியராக, நடிகராக, ஏன் சினிமாப்படம் தயாரிப்பவராகக் கூட வெளிப்படலாம்.

இந்தவகைப் பரவலான வசதியை "ஜனநாயகப்படுத்தப்படும் பொது அரங்கு" என்று சமூகவியலாளர்கள் வருணிக்கிறார்கள். இது எந்தளவுக்கு ஜனநாயகத்தை வளர்க்கிறது என்பது சந்தேகத்துக்குரியது. பெரிய சக்திகளாக வளர பயங்கரவாதிகள், கெரில்லாப் படையி-னர், மதவெறி யர்கள், இனவெறியர்கள் போன்றாரும், பல நாடுகளின் உளவு அமைப்புகளும், அரசியல் சதிகாரர்களும், திருடர்கள், மோசடிக்காரர்கள், பாலுறவுகளில் வக்கிரத்தை நாடுபவர்கள், ஏமாற்றி அழிக்க நினைப்பவர்கள் என்று மனித குலத்துக்கு உரிய அனைத்து இருண்ட சக்திகளும் இதே பொதுவெளியில் உலவுகிறார்கள் என்பதைப் பார்க்க நம் மனிதகுலத்தால் எதையும் நல்லதாக விட்டு வைக்க முடியாது என்பது புலனாகிறது.

சற்றே விசித்திரமாக நல்ல விளைவுகளும் உண்டு. அதில் ஒன்று, பலவகைப் பட்டியல்கள் வலையில் எங்கும் கிட்டுவது. 10 சிறந்த புத்தகங்கள், 10 சிறந்த சினிமாக்கள், பாட்டுகள் என்று பலவகைப் பட்டியல்கள் வலையில் கிட்டுகின்றன. குறிப்பாக ஆங்கிலத்தில் இத்தகைய பட்டியல்கள் ஏராளம். இங்கு ஒரு தளம் பல எழுத்தாளர்களைக் கேட்டு அவர்களின் பத்து சிறந்த புத்தகங்களின் பட்டியலைத் தொடர்ந்து பதிப்பிக்கிறது.

பார்க்க : http://www.toptenbooks.net/

# பரவசமூட்டும் மீன்தொட்டி!

மொரோக்கோவில், கசபிளான்கா என்ற நகரில் உள்ள ஷொப்பிங் மாலில், அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட மீன் தொட்டி, ஆச்சரியத்தையும், பரவசத்தையும் ஏற்படுத்துகிறது. இந்த ஷொப்பிங் மாலுக்கு, தினமும் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் வந்து செல்கின்றனர். அவர்களை அதிசயிக்க வைக்கும் இதை, பிரமாண்டமான மீன் தொட்டி என கூறுவதை விட, நீர்வாழ் உயிரினங்களுக்கான ஒரு மினி அருங்காட்சியகம் என்றே







# அழுகையை தேற்றக் கூலி!

சீனாவில், இறந்தவர்களை அடக்கம் செய்யும் கல்லறைகளுக்கு, பெரும் மரியாதை தரப்படுகிறது. உடல்களை அடக்கம் செய்வதற்காக, கல்லறைக்கு வருவோர், துக்கம் தாளாமல் கதறி அழுவது, அனைத்து நாடுகளிலும் நடப்பது தான். ஆனால் சீன அரசு இதிலும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு கல்லறைக்கு வந்து, துக்கம் தாளாமல் கண்ணீர் வடிப்போரை, ஆறுதல் கூறி தேற்றுவதற்காகவே, ஒவ்வொரு கல்லறையிலும், பெண் ஊழியர்களை நியமிக்க முடிவு செய்துள்ளது சீன அரசு.

முதல் கட்டமாக, ஐந்து பெண்கள், நியமிக்கப்பட்டுள்ளனர். ஐந்து பேரும், 25 வயதுக்கு உட்பட்டவர்கள். பட்டப்படிப்பு முடித்தவர்கள். இவர்களுக்கு ஆண்டுக்கு, தலா இருபது இலட்சம் ரூபா சம்பளம் தரப்படுகிறது. இது தவிர, வசிப்பதற்கு ஆடம்பரமான ஒரு வீடு உள்ளிட்ட சில வசதிகள் இலவசம்.

கல்லறையில் வேலை செய்வது குறித்து, அந்த பெண்கள் கூறுகையில், "வேலை ஒன்றும் சிரமமில்லை. இந்த வேலையை மட்டமாக கருதவில்லை. ஆனாலும், இந்த வேலையில் சேருவது தான், பெரும் சிரமமாக இருந்தது. ஐந்து பணியிடங்களுக்கு, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்தனர். அவ்வளவு பேருடன் போட்டியிட்டுக் கிடைத்த வேலை இது...." என உற்சாகத்துடன் கூறுகின்றனர்.





ஜப்பான் தொழிற்சாலை ஒன்றின் அறையில், முதலாளியின் முகத்தை பெரிய றப்பர் பந்து மீது வரைந்து வைத்திருக்கின்றனர். முதலாளி மீது கோபம் ஏற்படும்போதெல்லாம் தொழிலாளர்கள், அந்த அறைக்கு வந்து, பந்து மீது வரையப்பட்டுள்ள முதலாளியின் முகத்தில், நாலைந்து குத்துகள் குத்தி, கோபத்தைத் தணித்துக் கொள்வார்களாம். இது, முதலாளியின் ஏற்பாடு. அங்கு, வேலை நன்றாக நடக்கிறதாம்!

## கோபம் தணிதல்!

# ஈ.வெ.ரா.வும், ராஜாஜியும்

ஈ.வெ.ரா.வும், ராஜாஜியும் அரசியல் களத்தில் கீரியும், பாம்பும் போல இருந்தனர். தொடக்க காலத்தில் இருவரும், அத்தியந்த நண்பர்களாக இருந்தனர்.

ராஜாஜிதான் என் குரு என்றும், ஈ.வெ.ரா. சொல்லியிருந்தார். அவர்களுக்குள் பிறகு ஏன் பிரிவு ஏற்பட்டது என்று, சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் ஈ.வெ.ரா. சொன்னார்:

அந்தக் காலத்தில் ஆச்சாரியாருக்கு, என்னை விட சிறந்த நண்பர் எவரும் இல்லை. இப்போது எங்களைப் போன்ற விரோதிகளும் இல்லை. ஆச்சாரியாரை நான் தெரிந்து வைத்திருப்பதைப் போல, வேறு யாரும் தெரிந்து வைத்திருக்க முடியாது.



எங்கள் பிளவுக்குள் எந்த ரகசியமும் இல்லை. "பளிச்"சென்று சொல்வதானால், என்றைக்கு ஆச்சாரியார், மனசாட்சியை. விட்டு, தன் மூளையை மட்டுமே மதிக்கத் தொடங்கினாரோ, அன்றே நான் அவரை விட்டு விலகிப் போனேன்!

## அத்தமொடு சித்திரை

சித்திரை மாதத்தில் குழந்தை பிறப்பதைப் பலரும் விரும்புவதில்லை. சோதிட காரணங்களும் நிறைய வைத்திருக்கிறார்கள். ஆனால் சித்திரை மாதத்தில் பிறந்த பலரும் உலகப் புகழ் பெற்றிருக்கிறார்கள்.

அவர்களில் சிலர்:
சாமுவேல் ஜோன்சன், விக்டோரியா மகாராணி, சார்லி சாப்ளின், ராணி எலிசபெத், மாவீரன் அலெக்சாண்டர், கார்ல் மார்க்ஸ், டார்வின், ஷேக்ஸ்பியர், லெனின், பாவேந்தர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.





## உள்ளே வெளியே

வீடுகளின் கதவுகள் உள்ளேயும், பொதுக் கட்டடங்களின் கதவுகள் ஏன் வெளியேயும் திறப்பவையாக உள்ளன தெரியுமா? தீயிலிருந்து பாதுகாக்கும் எச்சரிக்கையாகத்தான் பொதுக் கட்டடங்களின் கதவுகள் வெளியே திறப்பவையாக உள்ளன. தீ விபத்து போன்ற வேளைகளில் பலரும் கதவின் வழியாக வெளியேற வசதியாக கதவு வெளியே திறக்கும்படி அமைக்கப்படுகிறது. உட்புறம் திறப்பதாக இருந்தால் தப்பிக்கச் சிறிது நேரம் ஆகும்.

திருட்டை நினைத்து அச்சப்படும் நிறுவனங்களில் மட்டும் நம் வீட்டுக் கதவுகளைப் போல உட்புறம் திறப்பவையாக அமைக்கப்படுகின்றன. அந்த கதவுகளுக்கான "கீல்"கள் உட்புறமாக இருப்பதால் கொள்ளையர்கள் கதவைப் பெயர்த்து எடுத்துச் செல்ல முடியாது.

கூறலாம்.

30 அடி உயரம், 40 அடி அகலம் கொண்ட இந்த மீன் தொட்டி, அக்ரிலிக் எனப்படும் பிளாஸ்டிக் போன்ற ஒரு பொருளாலும், கண்ணாடியாலும் அமைக்கப்பட்டுள்ளது.

கண்ணைப் பறிக்கும் நிறங்களைக் கொண்ட 3,000க்கும் மேற்பட்ட அழகிய மீன்கள் விடப்பட்டுள்ளன. பாசி, செடி, கொடிகள் என கடலுக்கு அடியில் எப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமோ, அதேபோன்ற சூழ்நிலையை தொட்டிக்குள் உருவாக்கியுள்ளனர்.

தொட்டிக்குள் தினமும் பத்து இலட்சம் லீற்றர் தண்ணீர் விடப்படுகிறது. இந்த பிரமாண்ட மீன்தொட்டியின் மற்றொரு வியப்பு, அதற்குள் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடியிலான லிப்ட் தான். மீன் தொட்டியின் மையப் பகுதிக்குள் சென்று வரும் வகையில், இந்த லிப்ட் அமைக்கப்பட்டுள்ளது. மீன்கள் தொட்டிக்குள் நீந்திச் செல்வதை, மிக, மிக அருகில் சென்று பரவசத்துடன் பார்த்து ரசிக்கலாம். கூம்பு வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப் பெரிய மீன் தொட்டி என்ற பெருமையும் இதற்கு கிடைத்துள்ளது.



பிரமாண்ட மீன் தொட்டியை அமைத்துள்ள நிர்வாகிகளிடம் சாதனையின் பெருமிதத்தோடு, கலக்கமும் காணப்படுகிறது. காரணம், அப்பகுதியில் அடிக்கடி ஏற்படும் நிலநடுக்கங்கள். இந்தத் தொட்டி அமைக்கப்பட்ட பின், இதுவரை இரண்டு சிறிய நில நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றால், தொட்டிக்கு பாதிப்பு ஏற்படவில்லை ஆனாலும், கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டால், தொட்டி மட்டுமல்ல பார்வையாளர்கள் மனதும் சுக்கு நூறாகப் போய் விடும் என்ற பயம்தான்.

# இளஞ்சிறாரின் இதயம் நோகலாமா?

கண்ணீர் எப்போது வேண்டுமானாலும் கரைபுரண்டு ஓடலாம் என்ற நிலையில் பேச்சற்று, மிரட்சி, பயம், வேதனை என அத்தனை சோகத்தையும், வேதனையையும் தாங்கிக்கொண்டு நிற்கிறார்கள் இளஞ்சிறார் சிலர். உலகில் வாழ்வதற்கு தாங்கள் தகுதியற்றவர்களாகி விடுவோமோ என்பது போலிருக்கிறது அவர்களின் நிலை.

அதைவிடப் பயத்திலும், வேதனையிலும் அவர்கள் அருகே நிற்கிறார்கள் அவர்களின் பெற்றோர். ஊழலின் உச்சத்தைத் தொட்டவர்கள்கூட உற்சாகமாய் காட்சிகொடுக்கும் உலகில் இந்த இளம் மலர்களின் பெற்றோர் என்ன தவறு செய்துவிட்டார்கள், இப்படி நிற்கிறார்கள்?

குண்டூசி போட்டாலும் கேட்டாலும் நிசப்தம். அவர்களை விநோதப் பிராணிகளைப்போல பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அறுபதுக்கும் மேற்பட்டோர். பின்னர் அத்தனை பேரின் கண்களும் அங்கே அமர்ந்திருக்கும் மூன்று பேரைப் பார்க்கின்றன. அந்த மூன்று பேரும் "நீதிபதிகள்". அவர்கள் தங்களுக்குள் மிகவும் தீவிரமாகக் கலந்தாலோசிக்கிறார்கள். அதில் அப்படியென்ன சிதம்பர ரகசியம் இருக்கிறது எனத் தெரியவில்லை.

இதயங்களிலெல்லாம் திக் திக் ஓசையும், கடிகார முள்ளின் டிக் டிக் ஓசையும் மட்டுமே கேட்கிறது.

அது நீதிமன்றம் அல்ல. ஆனாலும் அங்கு வழங்கப்படப் போகும் தீர்ப்புக்காக அனைவரும் காத்திருக்கிறார்கள். "எலிமினேட்" ஆகப்போவது யார் என்பதுதான் அந்த இமாலயத் தீர்ப்பு.

அப்படி அந்த இளஞ்சிறார்கள் என்னதான் செய்துவிட்டார்கள்? வேறொன்றுமில்லை. பாடும் ஆசை அல்லது திறமை அல்லது பாட்டுக் கற்றுக்கொண்ட பாவம். இவைதான் காரணம்.

முகங்கள் மாறலாம், "நீதிபதிகள்" மாறலாம், அரங்கத்தின் அலங்காரம் மாறலாம். மற்றபடி அனைத்துத் தனியார் தொலைக்காட்சிகளிலும் ஏறக்குறைய இதேபோன்ற காட்சியை வாரத்தின் அத்தனை நாள்களிலும் காணலாம். நிகழ்ச்சிகள் பல நாமகரணங்களில் அழைக்கப்பட்டாலும் அடிப்படை ஒன்றுதான். அது இசை அல்லது நடனம்.

எத்தனை பெரிய திறமையிருந்தாலும் குடத்திலிட்ட விளக்கைப்போல வாழ்ந்து மறைந்தனர் அன்றைய கலைஞர்கள். இன்றைக்கு அப்படியில்லை. அறிவியலின் ஆட்சியில் நவீன கருவிகளின் கண்டுபிடிப்புகளால் திறமை எங்கே இருப்பதுபோலத் தெரிந்தாலும் வெளிச்சமிட்டுக்காட்ட வாய்ப்புகள் அதிகம்.

குறிப்பாக, பாடும் அல்லது ஆடும் திறமையுள்ள இளஞ்சிறார்களைக் கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகள் தனியார் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகிக் கொண்டேயிருக்கின்றன.

இது இளம் கலைஞர்கள் தங்கள் ஆற்றலை மேன்மேலும் மெருகேற்றிக் கொள்ள பேருதவி புரிகிறது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், உலகம் முழுவதும் பல இலட்சம் பேர் பார்த்துக் கொண்டிருக்கும் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்போரை மிகப்பெரிய மன உளைச்சலுக்கும், பதற்றத்துக்கும் உள்ளாக்குவது என்ன நியாயம்?



வெற்றிபெறுபவர் யார் என்பது நேயர்களுக்கு விரைவில் தெரியவந்தால் விறுவிறுப்பு குறைந்துவிடும் என நினைத்தோ என்னவோ "எலிமினேஷன்" என்ற



ஒற்றைச் சொல்லைக் கொண்டே நிகழ்ச்சிகளை ஏழெட்டு மாதங்களுக்கு மேல் ஓட்டுகின்றனர்.

சில நிகழ்ச்சிகளில் "எலிமினேட்" செய்யப்படுவதாக அறிவிக்கப்படும் குழந்தைகள் கண்ணீர்விட்டுக் கதறி அழும் காட்சி காணக்கொடுமை.

ஆனால், தொலைக்காட்சிகளோ அத்தகைய காட்சிகளைத் திரும்பத்திரும்பக் காட்டி பார்ப்போரிடம் பச்சாதாபத்தைத் தூண்டுகின்றன. விளைவு, இத்தகைய நிகழ்ச்சிகள், "அழுது தொலைக்க" வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தும் பல நெடுந்தொடர்களைப் பின்னுக்குத் தள்ளிவிடுகின்றன.

இதுபோன்ற நிகழ்ச்சிகளில் வெற்றி, தோல்வியை பொதுவாக அறிவிக்காமல் பின்தங்கியிருக்கும் குழந்தைகளை மேடைக்கு அழைத்து அவர்களைக் குற்றவாளிகளைப்போல கேள்விக்கணைகளால் துளைத்தெடுத்து மனதைத் துவளச்செய்யும் நடைமுறை கைவிடப்படவேண்டும்.

தோல்வியே வெற்றியின் படிக்கட்டு என்பதை எத்தனை தளிர் மனங்கள் தாங்கிக்கொள்ளும்?

பலரது முன்னிலையில் காயப்படும் அந்தப் பச்சிளம் குழந்தைகள் பின்னாளில் மனச்சிதைவு, மனஅழுத்தம் போன்றவற்றுக்கு உள்ளாகும் அபாயமும் உள்ளது என்பதை நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் மட்டுமல்ல, பெற்றோரும் எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்கேற்ப நிகழ்ச்சிகளில் மாற்றம் செய்ய தயாரிப்பாளர்கள் முன்வரலாமே!

- மா.ஆறுமுககண்ணன் -

# ஆண், பெண் சமநிலை ஆசியாவில் குறைவு

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளின் ஆண், பெண் சமநிலை மிகவும் குறைவாகக் காணப்படுவதாக, த ஏசிய சொசையிட்டி எனற சிங்கப்பூரில் இயங்கும் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை, பிலிப்பைன்ஸ், இந்தியா, மொங்கோலியா, பாகிஸ்தான், தென் கொரியா, அவுஸ்ரேலியா மற்றும் நியுசிலாந்து போன்ற நாடுகளில் இந்த நிலைமை காணப்படுவதாக அந்த அமைப்பின் அறிக்கை ஒனறில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தரவுகள் மற்றும் ஏனைய சுகாதார, கல்வி சார்ந்த தகவல்களின் அடிப்படையில், இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகளில் தொழில் செய்கின்ற பெண்களுக்கு, ஆணகளைக் காட்டிலும் குறைவான வேதனமே வழங்கப்படுகின்றன.

அத்துடன் அரசியல், பொருளாதார மற்றும் சுகாதாரத் துறைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் இந்த நாடுகளில் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்து காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிககப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த நிலைமை மாறாத பட்சத்தில், சனத்தொகையில் பெண்களின் அளவை அதிகமாக கொண்டுள்ள இந்த நாடுகள், பல்வேறு வாய்ப்பு களை இழக்க நேரிடும் எனவும், சில அடைவு மட்டங்களை அடைய முடியாது போகும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டபபட்டுள்ளது.

# விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

இரண்டு அமைச்சர்கள் மற்றும் 20 பிரதேச அரசியல்வாதிகளுக்கு எதிராக பொலிஸ் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


அமைச்சர், பிரதி அமைச்சர், மாகாணசபை தவிசாளர், பிரதே சபைத் தலைவர்கள் உள்ளிட்ட பலருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பம் முதல் இதுவரையில் குறித்த அரசியலவாதிகளுக்கு எதிராக இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொலை, பாலியல் வன்முறை, கொள்ளை, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், கப்பம் கோரல், இலஞ்ச ஊழல் மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட் டுள்ளன.

அரசியல் தலையீடுகளின்றி விசாரணைகளை முன்னெடுக்க முயற்சி எடுதது வருவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# உலக மயமாக்கலின் யதார்த்தம் அயல்நாட்டைப் புறக்கணிக்கமுடியாது



(கொழும்பு)

உலக மயமாக்கலின் யதார்த்தத்தின் கீழ், இலங்கை தனது அயல்நாட்டைப் புறக்கணித்து விடமுடியாதெனவும், புதுடில்லியைவிட தமிழ்நாட்டுடனான ராஜதந்திர உறவுகளை ஊக்குவிக்க வேண்டுமெனவும், சிரேஷ்ட அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்த லலித் அத்துலத்முதலி நினைவு சொற்பொழிவின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ்நாட்டுடன் சிறந்த உறவை விருத்தி செய்வதன் முக்கியத்துவத்தை கடந்த கால அரசாங்கங்களோ தற்போதைய அரசாங்கமோ உணரவில்லை எனவும அதனால் தமிழக முதலமைச்சர் எவரும் சுதந்திரத்தின்பின் இலங்கைக்கு விஜயம் செய்யவில்லை எனவும் இலங்கை அமைச்சர்கள் எவரும் தமிழகத்திற்கு விஜயம் செய்ததில்லை எனவும் அமைச்சர் டி.யூ குணசேகர கூறினார்.

மொழி, கலாசாரம் உட்பட பல விடயங்களில் இலங்கையின் வட பகுதியிலுள்ள மக்களுக்கும் தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்கும் இடையில் பொதுவானவையாக உள்ளன என்பதை இலங்கை உணரத்தவறிவிட்டது என அவர் கூறினார். இலங்கைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே 20 மைல்கள் மாத்திரமே இடைவெளி உள்ளது என்பது உட்பட பூகோளவியல் விடயங்களையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழுவானது இவ்விஜயம் முழுவதும் இந்தியாவின் தேசிய நலன்களுக்காக செயற்பட்டமை இலங்கைக்கு ஓர் முன்னுதாரணம் எனவும் அமைச்சர் கூறினார். இந்திய பிரதமரின் பாத்திரத்தை இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் வகித்ததாக அவரிடம் தான் கூறியதாக அமைச்சர் டி.யூ குணசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வான் வழியாக இந்தியா உதவிப் பொருட்களை வழங்க தீர்மானித்தபோது லலித் அத்துலத்முதலி அதை எவ்வாறு ராஜதந்திர ரீதியாக கையாண்டார் என்பதையும் அமைச்சர் குணசேகர நினைவு கூர்ந்தார்.

வடக்கில் வான் வழியாக உணவுப்பொருட்களை விநியோகிக்க இந்தியா தீர்மானித்துள்ளதாக எச்சரித்து அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனாவுக்கு அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி எழுதிய கடிதத்திற்கான பதிலை லலித் அத்துலத் முதலியே வரைந்தார் என அமைச்சர் குணசேகர கூறினார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணத்திற்கு நிவாரணப் பொருட்களை விநியோகிக்கும் திட்டத்தை அத்துலத்முதலி ஆரம்பித்தார் எனவும் ஆனால், இங்குள்ள அரசியல்வாதிகள் சிலரின் எதிர்ப்பின் காரணமாக அத்திட்டதை அமுல்படுத்த முடியவில்லை என டி.யூ.குணசேகர தெரிவித்தார்.

இச்சவாலை எதிர்கொள்வது குறித்து எதிர்க்கட்சியுடன் அப்போதைய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் இணைந்து செயற்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

# போலிக் கடவுச்சீட்டில் பயணம்; யாழ். இளைஞருக்கு சிறை



(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டைப் பயனபடுத்தி இத்தாலிக்குச் செல்ல முற்பட்ட இளைஞர் ஒருவருக்கு நீர்கொழும்பு பிரதான நீதவான் ஏ.எம்.என்.பி.அமரசிங்க ஒரு இலட்சம் ரூபா அபராதமும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப் பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையையும் வழங்கித் தீர்ப்பளித்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம்.முரளிதரன் என்பவருக்கே இநதத் தண்டனை வழங்கபட்டது.

சந்தேகநபர் 2009 ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி இத்தாலி செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையம் வநத போது இவரின் கடவுச் சீட்டை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பரிசீலித்தனர்.

அப்போது இக்கடவுச்சீட்டு போலியானது என கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், குடிவரவு, குடியகல்வு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. கடந்த 18 ஆம் திகதி இவர் மீதான வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் இத் தண்டனை விதிக்கப்பட்டது.

# புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் புத்தாண்டு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 7 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பிரதி அமைச்சர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் உரை நிகழ்த்துவதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொகுதி அமைப்பாளராக மேர்வினை ஏற்பதற்கு மறுப்பு



(கொழும்பு)

மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களனி பிரதேச தொகுதி அமைப்பாளராக ஏற்றுக் கொள்ள முடியாது என களனி பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன ரணவீர உள்ளிட்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒழுககாற்று விசாரணைகள் துரித கதியில் மேற்கொள்ளப்படவேண்டுமென தெரிவித்துள்ளனர்.

எத்தனை கட்சிக் காரியாலயங்கள் அமைக்கப்பட்டாலும், அமைச்சர் மேர்வின் சில்வாவின் கீழ் வேலை செய்யமாட்டோம் என பிரதேச சபைத் தலைவர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

தொகுதி அமைப்பாளராக அவரை ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சுயாதீனமாக சேவையாற்றுவோம். அமைச்சருக்கு எதிரான விசாரணைகள் துரித கதியில் நடத்தப்பட வேண்டும்.

மாவட்டத் தலைவரான பசில் ராஜபக்ச, ஜனாதிபதி மற்றும் கட்சித் தலைமையுடன் எப்போதும் கைகோர்த்து செயற்படுவோம், ஆனால் மேர்வின் சில்வாவுடன் இணைந்து செயற்பட முடியாது.

அபிவிருத்தித் திட்டங்களின் போது மேர்வினுடன் இணைந்து செயற்பட வேண்டிய அவசியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புனிதப் போர் வெடிப்பதற்கு மக்கள் காரணமாகக் கூடாது

சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் புனிதப் போர் வெடிப்பதற்கு காரணமாக மக்களே அமைந்துவிடக்கூடாதென ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். தம்புள்ளை பள்ளிவாசல் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டில் மதங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

கொடிய இனவாத யுத்தத்தினால் மூன்று தசாப்தத்திற்கு மேலாக நாட்டு மக்கள் எதிர்நோக்கிய துன்ப துயரங்கள் போதும். இனியும் அவ்வாறான நிலை ஏற்படக்கூடாது. நாட்டு மக்கள் அனைவரும் சரியாக ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள ஒருசிலர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களது செயற்பாடுகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என்றார்.



சித்திரைப் புத்தாண்டையொட்டி ஹொரணவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யானை ஓட்டம், குதிரைச் சவாரி, சிலம்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுக்கள் நடைபெற்றன. இதில் யானை ஓட்டத்தினை காணலாம்.

# போதனா வைத்தியசாலை அமைக்க மாலபே மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி

(கொழும்பு)

தனக்கென ஒரு போதனா வைத்தியசாலையை அமைக்க சுகாதார அமைச்சின் அங்கீகார கடிதம் கிடைத்துவிட்டதாக மாலபே மருத்துவக் கல்லூரி கூறியுள்ளதால் தென்னாசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனத்திற்கும் சுகாதார அமைச்சுக்கும் இடையில் மாலபே மருத்துவ கல்லூரிக்கென புதிய போதனா வைத்தியசாலை அமைப்பது தொடர்பில் காணப்பட்ட முரண் நிலை இன்னும் மோசமாகியுள்ளது.

புதிய போதனா வைத்தியசாலை அமைப்பதற்கான அங்கீகாரம் கடந்த வருடம் ஓகஸ்ட் 16 இல் கடிதமூலம் கிடைத்ததாக தென்னாசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவன பணிப்பாளர் டாக்டர் சமீர சேனாரட்ன கூறினார்.

இக்கடிதம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் அனுப்பப்பட்டது. இதில் எவ்வித நிபந்தனையும் குறிப்பிடப் படவில்லையென சேனாரட்ன கூறினார். ஆயினும் இந்த மருத்துவக் கல்லூரியில் போதனா வைத்தியசாலை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லையென சுகாதார அமைச்சு கூறியுளளது.


மருத்துவப் பயிற்சியை வழங்கவென தென்னாசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனம், பொறியியல்பீட கட்டடத்தை போதனா வைத்தியசாலையாக மாற்றியமைத்தது. சுகாதார அமைச்சின் அங்கீகார கடிதம் முதலீட்டுச் சபைக்கும் அனுப்பபப்பட்டுள்ளதாக சேனாரட்ன கூறினார்.

இதேசமயம் நகர அபிவிருத்தி அதிகாரசபை தென்னாசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனத்திற்கு 30 மில்லியன் ரூபா அபராதம் விதித்துள்ளது. தென்னாசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனம் கட்டடம் அனுமதி பெறாது அமைக்கப்பட்டுள்ளதென நகர அபிவிருத்தி அதிகாரசபை கூறியது. ஆரம்பத் திட்ட முன்மொழிவு மட்டுமே உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டதெனவும் விதிக்கபபட்ட பல நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதெனவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை கூறியுள்ளது.


29) வித்தியாசமான சொல்,
1) எழுத்து 2) சொல் 3) வாக்கியம் 4) இலக்கம்

30) வரனிடம் ரூபா 16.00 உள்ளது. அதன் அரைப்பங்கை அவனது அக்கா சாயிக்கு கொடுத்தான் சாயி தனக்குக் கிடைத்ததன் காற்பங்கை வரனிடம் கொடுத்தாள். இப்போது வரனிடம் உள்ள பணம்?
1) ரூபா 10.00 2) ரூபா 8.00 3) ரூபா 2.00 4) ரூபா 14.00


**முதல் இரு உருவங்களிலும் உள்ள எண் கோலத்தை நன்கு அவதானித்து மூன்றாவதாகத் தரப்பட்ட உருவில் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணுக்குரிய விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.**

31)


1) 110
2) 80
3) 125

32)



1) 10
2) 15
3) 20

33)


1) 24
2) 14
3) 22

34)


1) 47
2) 77
3) 49

35)


1) 125
2) 625
3) 225

**முதலாவதாகத் தரப்பட்டுள்ள வாக்கியத்தை நன்கு விபரிக்கும் விடைக்குரிய இலக்கத்தை தரப்பட்ட கூட்டினுள் எழுதுக.**

36) "பாத அணிகளைக் காலிலே அணிகின்றோம்"
1) கையால் நடப்பதில்லை 2) காலில் அணிவது இலகு
3) சுவாச நோய்கள் வரலாம் 4) பாதம் தான் தேய்வடையும்

37) "தாய் சொல்லைத் தட்டாதே"
1) தாய் சொல் கேட்கவேண்டும் 2) தாய் வார்த்தையை மதிக்கக்கூடாது
3) தாயை நன்கு ஏச வேண்டும் 4) எல்லாமே தவறான விளக்கம்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
1 மணி

# கல்வி முரசு

வெளியீடு 58



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

ஒரு கலவன் பாடசாலையில் ஒருவார தினவரவுக் குறிப்பு வருமாறு,

| | மொத்த மாணவர் தொகை | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|---|
| பெண்கள் | 24 | 20 | 18 | 23 | 24 | 19 |
| ஆண்கள் | 26 | 24 | 26 | 25 | 26 | 23 |

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) இந்தத் தரவில் இருந்து அறியமுடியாத தகவல்
1. மாணவர் வரவு 2) மாணவர் ஒழுக்கம் 3) மாணவர் கல்வி நிலை

02) இந்தத் தரவில் இருந்து எடுக்கக் கூடிய முடிவு
1) ஆண் பிள்ளைகள் எப்போதும் பாடசாலைக்கு வருகின்றார்கள்.
2) பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகள் வரவு ஒழுங்கு நன்று.
3) இதன்படி எதுவுமே கூற முடியாது.

03) கலவன் பாடசாலை என்பது,
1) ஆண் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை
2) பெண் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை
3) ஆண், பெண் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை

04) இப்பாடசாலையில் மாணவர் யாவரையும் ஒன்றாக்கி வாராந்தக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்த நாள் எது?
1) திங்கள் 2) வியாழன் 3) வெள்ளி

05) இப்பாடசாலை மாணவி ஒருத்தி ஒருநாள் பாடசாலை வரும்போது ரூபா 100 காசைக் கண்டெடுத்தாள். அவளது சக மாணவிகள் அவளுக்கு கூறிய ஆலோசனைகளில் மிகவும் பொருத்தமானது
1) பணத்தைச் சமமாகப் பங்கிட்டு ஐஸ்கிறீம் வாங்குவோம்
2) பாடசாலைக்கு நன்கொடையாக வழங்குவோம்
3) அதிபர் மூலம் உரியவரிடம் ஒப்படைக்க முயற்சி செய்வோம்

06) இவ்வாரத்தில் வருகை தந்த ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் இடையிலான வித்தியாசம்
1) 124 - 104 2) 104 - 124 3) 150 - 128

**வீதியோரத்தில் விற்கப்படும் உணவுப் பொருட்களை நாம் வாங்கி உண்ணக்கூடாது என்பதற்கு உகந்த காரணங்கள் 4 இனைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது மீண்டும் எழுதுக.**

- உணவு சுவையற்று இருக்கும்
- உணவைச் சமைத்தவர் அழகற்றவாராக இருப்பார்
- உணவில் ஈ, கொசு என்பன மொய்க்கும் வாய்ப்பு உண்டு
- வீதியோர உணவை சமைப்பவர்கள் பொதுவாக ஏழைகள்
- உணவில் பூச்சிகளின் முட்டைகள் உட்புகுந்திருக்கலாம்

- உணவில் தூசு, வேறு அழுக்குகள் என்பன படிவடைய சந்தர்ப்பம் உண்டு
- உணவு திறந்த நிலையில் இருப்பதால் பாதுகாப்புக் குறைவானது

7) ............................................................
8) ............................................................
9) ............................................................
10) ............................................................

**சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

11) நான்கு மனிதர் நான்கு நாட்களில் ஒரு வேலையைச் செய்து முடிப்பர் எனின் ஒரு மனிதன் அவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பான்?

............................................................

12) மூன்று குதிரைகள் மூன்று மணித்தியாலத்தில் 30 கிலோமீற்றர் ஓடுமாயின் ஒரு குதிரை ஒரு மணித்தியாலத்தில் எத்தனை கிலோமீற்றர் ஓடும்?

............................................................

13) வியாபாரி ஒருவர் தான் ஒவ்வொரு பொருளையும் விற்பனை செய்த பின் விற்பனை செய்த அளவைப் பின் வருமாறு குறித்தார்.


| | |
|---|---|
| மாம்பழம் | ||||/ ||||/ ||| |

இங்கு மாம்பழங்கள் 13 விற்பனையாகி உள்ளதை இப்படவரைபு காட்டுகின்றது. இதைப் போலவே விற்பனையாகிய 31 தேசிப் பழங்களை மேலே காட்டப்பட்டுள்ளவாறு படவரைபில் குறித்துக் காட்டுக.

| | |
|---|---|
| | |


இரு வியாபாரிகள் தமது வருமானத்தில் சேமிப்புக்கு ஒதுக்கிய பணத்தின் அளவை இவ்வரிப்படங்கள் காட்டுகின்றன. இதன்பிரகாரம் அவர்களது மாத வருமானத்தை எழுதுக.

வியாபாரி - A



4000 /=

வியாபாரி - B



3000 /=

14) வியாபாரி A யின் மாத வருமானம் ............................................................

15) வியாபாரி B யின் மாத வருமானம் ............................................................

**கீழ்வரும் வசனங்களைச் சரியான ஒழுங்கில் அமைக்கும்போது பந்தியொன்றினை நிர்மாணிக்க முடியும். அச்சரியான ஒழுங்கமைப்பிற்கேற்ப இலக்கங்களை இட்ட விடையின் கீழ் கீறிடுக.**

16) 1) வௌவால் பறந்து செல்லும் விலங்காகும்.
2) எனவே அது முலையூட்டி விலங்காகும்.
3) ஆயினும் அது குட்டி ஈன்று பால் கொடுக்கும்.
4) அதனை இரவில் அவதானிக்கலாம்.
1) 1, 3, 2, 4    2) 3, 1, 2, 4    3) 1, 2, 3, 4

17) 1) பெருமளவு தொடர்ந்து பெய்தது.
2) மக்கள் குடியிருப்புக்கள் எல்லாம் அழிந்து போயின.




3) எங்கும் ஒரே வெள்ளக் காடாகக் காட்சி தந்தது.
4) வானம் கறுத்து இடி முழங்கியது.
1) 1, 3, 2, 4    2) 3, 1, 2 4    3) 1, 2, 3, 4

18) 1) ஆழமான கருத்துக்களைக் கொண்டது ஆகும்.
2) அவர் திருக்குறள் என்னும் நூலை இயற்றினார்.
3) திருவள்ளுவர் மிகச் சிறந்த புலவர்.
4) திருக்குறள் ஈரடிகளைக் கொண்டது.
1) 1, 3, 2, 4    2) 3, 1, 2 4    3) 1, 2, 3, 4

**கீழேயுள்ள படங்களின் சில பகுதி விடுபட்டுள்ளது. விடுபட்ட பகுதிக்குப் பொருத்தமான படத்தைத் தரப்பட்ட விடையில் இருந்து தெரிவு செய்து கோடிடுக.**

19)





(1)


(2)



(3)


(4)

20)




(1)


(2)


(3)


(4)

**மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

21) கீழ்வருவனவற்றில் வித்தியாசமாக உணவுண்ணும் பழக்கமுடையது,
1) யானை    2) பாம்பு    3) புலி    4) முயல்    ☐

22) 1. சித்தியடைதல்  2. விண்ணப்பித்தல்  3. பரீட்சை எழுதுதல்  4. கற்றல் என்பதன் சரியான ஒழுங்கமைப்பு.
1) 1, 2, 3, 4    2) 4, 3, 2, 1    3) 4, 2, 3, 1    4) 2, 3, 1, 4    ☐

23) வித்தியாசமான சேர்மானம்,
1) வெப்பமானி - சூடு    2) மழைமானி - மழை
3) அளவுநாடா - நீளம்    3) அடுப்பு - சூடு    ☐

24) பாதம் - உடல், அரும்பு : ............................
1) கிளை    2) மரம்    3) வளர்ச்சி    4) இலை    ☐

25) காலையில் எழுந்த குமார் முகம் கழுவி ............................அருந்தினார்.
1) தேநீர்    2) தேனீர்    3) தேன்நீர்    4) தேயிலை நீர்    ☐

26) நேரத்தை உணர்த்தும் மலர்,
1) செவ்வந்தி    2) ரோசா    3) சூரியகாந்தி    4) பருத்தி    ☐

27) எல்லா முகங்களும் எப்பொழுதும் ............................சமமான பரப்பளவுகளைக் கொண்ட உருவம்.
1) உருளை    2) கனவுரு    3) கோளம்    4) சதுரமுகி    ☐

28) தம்பியிலும் அண்ணா எப்பொழுதும் ............................கூடியவராக இருப்பார்.
1) அறிவு    2) பலம்    3) வயது    4) பணம்    ☐

# மதங்களை இணைக்கும் அறநெறிப்பாடசாலை

## அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் சமூக நிறுவனத்தலைவர்





யாழ்ப்பாணத்தில் இந்து, கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய நான்கு மதங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஒன்றாகக் கற்கும் விதத்தில் புதிய அறநெறிப் பாடசாலை ஒன்றை விரைவில் நிறுவ உள்ளதாக அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் சமூக நிறுவனத்தின் தலைவர் ஜெகத் சுமதிபால தெரிவித்தார்.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட 100 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு சுவிஸ் நாட்டிலுள்ள அகில இலங்கை இந்து பௌத்த சங்க- கிளையால் பாடசாலைக்கான காலணி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது சிறுவர்கள் தமது சமயத்திற்குரிய சமய அனுட்டானங்களை கடைப்பிடிக்கத் தவறுவதாக குறிப்பிட்ட ஜெகத் சுமதிபால, யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து மத மாணவர்களும் ஓர் இடத்தில் இணைந்து அவர்களது மதங்களுக்குரிய பழக்கவழக்கங்கள் மற்றும் சமய அனுட்டானங்கள் போன்றவற்றை கற்றுக்கொள்ளும் விதத்திலேயே இந்த அறநெறிப் பாடசாலை அமைக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

உயரதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து ஒரு அறநெறிப்பாடசாலையை நிறுவுவதற்கு தமது நிறுவனம் இதற்கான பணத்தினை தருவதாகவும்,

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள உயரதிகாரிகளுடன் . கலந்தாலோசித்துள்ளதாகவும், இதற்கான வேலைத்திட்டங்கள் வைகாசி மாதத்தில் நடைபெறும் வெசாக் பண்டிகைக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு, யூன் மாதத்தில் வரும் பொஷன் விழாவுக்கு முன் கட்டிமுடித்து பாவனைக்கு விடப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா, நாகவிகாரை விகாராதிபதி விமல தேரர், கண்டி விகாராதிபதி ஸ்ரீ விமல தேரர், 51ஆவது படைப்பிரிவின் தளபதி சேனாதிபதி, 512ஆவது தளபதி பிரிகேடியர் அயித் பல்லேவில, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சரிய சுவாமி உட்பட பலர் கலந்துகொண்டனர். (சி)

# பௌத்தம் என்பது வாழ்வின் ஒரு அங்கம்

## - யாழ்.பௌத்த- இந்து ஒருமைப்பாடு நிறுவனத் தலைவர்



(கிரு)

பௌத்தம் என்பது மதம் இல்லை, வாழ்க்கையின் ஒரு அங்கமே என யாழ். மாவட்ட பௌத்த-இந்து ஒருமைப்பாடு நிறுவனத்தின் தலைவர் ரவிக்குமார் தெரிவித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை யாழ்.நாக விகாரை மண்டபத்தில் நடைபெற்ற கீர்த்தி ஸ்ரீ சுமண சித்தார்த்த கல்யாண திஸ்ஷா பிட்ஹன தேரரின் வட மாகாண பிரதி பிரதான சங்கை நாயக்க தேரரின் பதவிக்கான பாராட்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பௌத்த-இந்து ஒருமைப்பாடு நிறுவனத்தில் 1959 ஆம் ஆண்டுகளில் 3000 அங்கத்தவர்கள் காணப்பட்டதாகவும், ஆனால் நாட்டில் காணப்பட்ட தீவிரவாதப் பிரச்சினைகளால் இந்த நிறுவனம் சில காலம் இயங்க முடியாது காணப் பட்டு தற்போது 1000இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுடனேயே இயங்குவதாகவும் அவர் கூறினார்.

இவரைத் தொடர்ந்து ஆசி உரை வழங்கிய கண்டி மல்வத்துவ பீடாதிபதி ஸ்ரீ விமலதேரர், அன்பு கருணை, பாசம் என்பன பற்றி ஔவையாரின் பாடல்கள் மற்றும் திருவள்ளுவரின் சில திருக்குறள்கள் எடுத்துக் கூறுகின்றன என்றும், மிருகங்கள், பறவைகள் போன்ற ஐந்தறிவு ஜீவன்கள் பிறந்ததிலிருந்து தாணகவே செயற்பட தொடங்குகின்றது. ஆனால் மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை மற்றொருவரில் தங்கியே வாழ்கின்றான். இந்த நிலை மாற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

# தொழில் பயிற்சி நிலையத்தால் பெண்களுக்கு பயிற்சி நெறிகள்




(அனு)

பெண்கள் சுயதொழில் ஒன்றை மேற்கொள்ளும் வகையில் தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கென பண்டத்தரிப்பு-பிரான் பற்றுக் கிராமத்தில் தொழில் பயிற்சி நிலையமொன்று தொழிற் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. இந்தத் தொழிற்பயிற்சி நிலையமானது சண்டிலிப்பாய் பிரதேசசபையின் உதவியுடனும், கிராம மக்களின் ஆதரவுடனும் 2010ஆம் ஆண்டு கட்டப்பட்டபோதும், 2012 ஆம் ஆண்டே பாவனைக்கு வந்தது.

இங்கு பெண்களுக்கான தையல் மற்றும் அழகுக்கலைப் பயிற்சிகள் என்பன இலவசமாக கற்பிக்கப்படுகின்றது. இவற்றைக் கற்பதற்கு பண்டத்தரிப்பு, இளவாலை, சில்லாலை போன்ற பிரதேசங்களில் இருந்தும் ஏராளமான பெண்கள் வருகை தருகின்றனர். இந்தத் தொழில் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்படும் பயிற்சி நெறியானது மிகவும் பயனுள்ளதாகவும், சுயதொழில் ஒன்றை மேற்கொள்வதற்கு உதவியாக இருப்பதாகவும் இங்கு பயிலும் மாணவி ஒருவர் கூறினார். (சி)

# மெய்தான் பாருங்கோ...

## பேர் - ஆசைகள்



மனிசனாப் பிறந்தவனுக்கு பல விதமான விருப்பு - வெறுப்புகள் கொள்கை நடைமுறையள் இருக்கத்தான் செய்யும் பாருங்கோ. அதிலையும் மண்ணாசை; பெண்ணாசை; பொன்னாசை... எண்ட உணர்வு மிகவும் பொல்லாதவை கண்டியளே!

மண்ணுக்கு ஆசைப்பட்டு நாட்டுக்கு நாடுகள் அடிபடுகிறதும், தன்ர முறைப்பெண்ணை இன்னொருவன் கொண்டு போயிட்டானெண்டு மற்றொருவன் வெட்டிக்கொத்திச் சாய்க்கிறதும், பொன்னுக்காக வீடுபுகுந்து களவெடுக்கிற சங்கதிகளும் இப்பத்தே நாளேல நல்லா மலிஞ்சு போய்க்கிடக்குது எண்டது நான் உங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லைத்தானே!

ஆனாலும், பாருங்கோ! நான் மேல சொன்ன இந்த மண்ணாசை ; பெண்ணாசை; பொன்னாசை... எண்ட மூவாசைகளை விட மனிசனுக்கு இன்னுமொரு ஆசை இருக்குது கண்டியளே! அது என்னெண்டு கேட்கிறியளே?

அதுதான் பாருங்கோ பேராசை! நான் பேராசை எண்டு சொல்ல வரேக்கை, நீங்கள் அதை என்ன கோணத்தில பாக்கிறியளோ எனக்குத்தெரியாது. பேராசை எண்டு சொல்லுறது சகலதும் தனக்கே உரித்தானதாக வேணும்... எண்டு நினைக்கிறது பேராசை. நான் சொல்லவாற பேராசை வந்து தங்களுடைய பெயருக்கு முன்னாலையும், பின்னாலையும் கௌரவப்பட்டங்கள் இருக்கவேணுமெண்டு நினைக்கிறது கூட பேராசைதான்.

ஆசைவெட்கமறியாது எண்டும் சொல்லுறவை. மனிசனாப்பிறந்தவன், தான் சாகிறதுக்கிடையில பெருமையோடு வாழ்ந்து சாகவேணுமெண்டு நினைச்சு, தன்ர சில செய்கை காரியங்களால சமூகத்துக்கு முன்னால சிறுமைப்பட்டுப் போறான் பாருங்கோ!

பேரெடுக் வேணுமெண்டு ஆசைப்படுகிறது குற்றமில்லைக் கண்டியளே! ஆனா அதை அடையிறதுக்கு அதற்கான வழியில நிதானத்தோட நடக்கவேணும்.

எடுத்த எடுப்பில பேரடுக்க முடியாது. அதுக்கு கால ஓட்டத்தோட ஓடிப்போகவேணும். கஷ்டப்பட்ட மனிசருக்கு உதவி ஒத்தாசையள் செய்து, தன்னைத்தானே தியாகம் செய்யிற மனப்பான்மையோட நாலு பேருக்கு முன்னால நடந்து கொள்ளவேணும்.

பாக்கிறதுக்கு எங்களுக்கு ரண்டு கண்ணுகள்தான் இருக்குது. ஆனா எங்களைச்சுற்றி எத்தனையோ கண்ணுகள் பாத்துக்கொண்டிருக்கெண்டதை புரிஞ்சு கொள்ள வேணும்.

இதை ஏன் நான் இப்ப இதில சொல்லவாறன் எண்டால், பேர் எடுக்க ஆசைப்பட்டு, அதோட மேலும் மேலும் ஆசையளை வளர்த்துக் கொள்ளக்கூடாது.

நான் இதில முதல் சொன்ன மண்ணாசை; பெண்ணாசை ; பொன்னாசை.... எல்லாத்தையும் அனுபவிக்க ஆசைப்படேக்கை சமூகத்தின்ர கண்ணுகள் எங்களை மேயத்தான் செய்யும். அந்த மேய்ச்சல் பார்வையிலிருந்து எவரும் தப்பித்துக்கொள்ளமுடியாது கண்டியளே!

இப்பிடிச் சமூகத்தின்ர கண்ணுகள் எங்களைக் கண்காணிச்சுக் கொண்டிருக்கேக்கை நல்லகாரியங்களைச் செய்யவேணும்... நல்லபடிச்ச, பண்பான மனிசரோடை பழகவேணும்... நல்ல பேச்சு வார்த்தையளைப் பேச வேணும்... பிறர்மனிசரைப் பார்த்து பிரிவு காட்டவேணும்...

இப்பிடி உபயோகமான பல காரியங்களைச் செய்யேக்கைதான் பேரின்ர மதிப்பு உயர்வடையும். அந்தப் பேரைப்பற்றி ஊர்ச்சனம் பறையேக்கை பேருக்காக ஆசைப்பட்ட எண்ணங்கள் எல்லாம் நிறைவடையும்.

இந்தநிலை நினைச்சாப்போல கிடைக்காது பாருங்கோ. படிப்படியாக அதற்குரிய செயற்பாடுகளைக் கடைப்பிடிச்சுக்கொண்டு வளரவும் வேணும்; வாழவும் வேணும். அப்பதான் பேரில ஒரு கணிப்பீடு விழுந்து பேருக்காக ஆசைப்பட்ட அனைத்தும் கிடைக்கக் கூடியதாக இருக்கும் பாருங்கோ.

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# 80 வருடங்களுக்குப் பின் சாதிவாரிக் கணக்கெடுப்பு



(சென்னை)

தமிழ்நாட்டில் சாதி வாரிக் கணக்கெடுப்பு நேற்றுமுன்தினம் தொடங்கியது. இந்த கணக் கெடுப்பு 40 நாட்கள் நடைபெற உள்ளது. கிட்டத்தட்ட 80 வருடங்களுக்குப் பின் நாட்டில் இந்த சாதிவாரிக் கணக்கெடுப்பு நடக்கிறது.

சமூக, பொருளாதார மற்றும் சாதி வாரிக் கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. அனைத்துத் தரப்பு மக்களின் பொருளாதார நிலை, அவர்கள் வசிக்கும் வீடுகள், வேலை, வருமானம், வெளிமாநிலத்தவர்கள் குறித்த விவரம், மாற்றுத் திறனாளிகள், வீடு இல்லாத நபர்கள் குறித்த தகவல்களை சேகரிக்க இந்தக கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

கடந்த 2010ஆம் ஆண்டில் வீடுகள் குறித்த கணக்கெடுப்பு நடந்தது. 2011ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்தது. 2012ஆம் ஆண்டில் சமூக, பொருளாதார மற்றும் சாதி வாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

இது குறித்து தமிழக மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் கோபாலகிருஷ்ணன் கூறுகையில்,

சென்னை நீங்கலாக தமிழ் நாடு முழுவதும் சாதி மற்றும் சமூக, பொருளாதார அடிப்படையிலான மக்கள் தொகை கணக் கெடுப்புப் பணி நேற்றுமுன்தினம தொடங்கியுள்ளது. சுமார் 3,000 பணியாளர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு குடும்பத்தினரின் படிப்பு, பொருளாதார நிலை, வீட்டு வசதி மற்றும் சாதி உட்பட 32 கேள்விகள் கேட்டு விண்ணப் பங்களைபூர்த்தி செய்வார்கள். ஜூன் மாத இறுதிக்குள் கணக் கெடுப்பு பணியை முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

நாட்டில் கடைசியாக சுதந்திரத துக்கு முன் 1931ஆம் ஆண்டில் தான் நாட்டில் சாதி வாரிக் கணக கெடுப்பு நடந்தது. அதன் பின்னர் இப்போது தான் நடக்கிறது

# போராளிகளை விடுவிக்க மா ஓ வாதிகள் கோரிக்கை

இந்தியாவின் மத்திய மாநிலமான சட்டிஸ்காரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது போராளிகளை விடுதலை செய்யுமாறு மா ஓ வாதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது போராளிகளை விடுவித்தால் மாத்திரமே தம்மால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அரசியல்வாதிகளை விடுவிக்க முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமது பிராந்தியங்களிலுள்ள அரச படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எனினும் இது குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவரை வெளியிடப்படவில்லை என செய்திகள் குறிப்பிடுகின்றன.

இந்தியச் செய்திகள்

# கூடங்குளம் அணுமின் நிலையம் 40 நாளில் செயற்படத் தொடங்கும்



(புதுடில்லி)

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் உலை இன்னும் 40 நாட்களில் செயற்படத் தொடங்கும் என்று மத்திய இணையமைச்சர் வி.நாராயணசாமி தெரிவித்தார்.

தற்போது அணு சக்தி கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரிகள் கூடங்குளம் அணு நிலையத்தில் ஆய்வு நடத்தி வருகிறார்கள். அவர்கள் அணு உலை தொடர்பாக இன்னும் ஒரு வாரத்தில் சான்றிதழ் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு சான்றிதழ் அளிக்கப்பட்ட பிறகு அணு உலையில் யுரேனியம் எரிபொருள் நிரப்பப்படும். பரிசோதனை அடிப்படையில் 20 நாள்களுக்கு அணு உலை இயக்கப்படும்.

அதன் பிறகு இன்றிலிருந்து சரியாக 40ஆவது நாளில் 1000 மெகாவாட் திறன் கொண்ட முதல் அணு உலை மின் உற்பத்தியைத் தொடங்கும் என்று அவர் தெரிவித்தார்.

முதல் அணு உலை மின் உற்பத்தியைத் தொடங்கிய 2 மாதங்களுக்குள்ளாக, 1000 மெகாவாட் திறனுள்ள இரண்டாவது அணு உலை செயற்பாட்டுக்கு வரும்.

அணு மின்நிலையத்தில் இந்தியா, ரஷியாவைச் சேர்ந்த இரண்டாயிரம் பொறியாளர்கள் இரவு பகலாக உழைத்து வருகிறார்கள். கூடங்குளம் அணு திட்டத்தை நிறைவேற்றும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அணு மின்நிலைய திட்டம் தொடர்பாக தமிழக அரசு மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறது என்றும் நாராயணசாமி தெரிவித்தார்.

## புதிய இராணுவத்தளபதி நியமனம்; எதிர்த்த மனு தள்ளுபடியானது

(புதுடில்லி)

அடுத்த இராணுவ தலைமைத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் விக்ரம் சிங் நியமிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தற்போதைய தளபதி விகே.சிங்கின் பதவிக்காலம் மே இறுதியுடன் முடிவடைகிறது. அவருக்கு அடுத்ததாக கிழக்குப்பகுதி இராணுவ கொமாண்டராக உள்ள விக்ரம்சிங் நியமிக்கப்பட்டார்.

ஜம்மு-காஷ்மீரில் போலி என்கவுன்டர் வழக்கில் விக்ரம் சிங்கின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதால் அவரை இராணுவத் தளபதியாக நியமிக்கக்கூடாது எனஅட்மிரல் லட்சுமிநாராயணன் ராம்தாஸ் தலைமையிலான ஓய்வுபெற்ற அதிகாரிகள் குழுவினர் சார்பில் பொதுநலன் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எனினும் இந்த விவகாரத்தில் தலையிட முடியாது என்று கூறி பொதுநலன் மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

# சொத்துக் குவிப்பு வழக்கு மே மாதம் ஒத்திவைப்பு



(பெங்களூர்)

பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் நடந்து வரும் ஜெயலலிதா மற்றும் சசிகலா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு வருகின்ற மே மாதம் 2ஆம் திகதி ஒத்திவைப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பாளர் ஹரீஷ் விடுப்பில் சென்றிருப்பதால் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.மொழிபெயர்ப்பாளர் உதவியுடன்

இதுவரை சசிகலாவிடம் 591 கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

முன்னதாக, இந்தவழக்கில் சசியிடம் நேற்று முன்தினம் 87 கேள்விகள் கேட்கப்பட்டன. பெருபாலான கேள்விகள் ஜெயலலிதாவின் வங்கிக் கணக்குபற்றியே சசியிடம் கேட்கப்பட்டன. 1991 -96 ஆம் ஆண்டு ஜெயலலிதாவின் வங்கிக் கணக்குத் தொகை உயர்ந்தது பற்றி சசியிடம் நீதிபதி கேள்விஎழுப்பினார். மேலும், சசி கணக்கிலிருந்து ஜெ.வின் கணக்குக்கு 30 இலட்சம் ரூபாய் மாற்றப்பட்டது ஏன் எனவும் கேள்வி எழுப்பினார்.அதற்கு இருவரும் பங்குதாரர்கள் என்பதால் தம் கணக்கிலிருந்து பணம் மாற்றப்பட்டதாக சசி பதிலளித்தார்.

# ஒரு குடம் தண்ணீருக்காக வெயிலில் அலைந்த பெண் பலி



(தானே)

தானேவில் ஒரு குடம் தண்ணீருக்காக சுட்டெரிக்கும் வெயிலில் பல மைல் தூரம் அலைந்து திரிந்த பெண் சுருண்டு விழுந்து உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் தானே மாவட்டத்தில் உள்ளது டோலாரா என்ற பழங்குடியினக் கிராமம். இங்கு கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இந்த கிராமத்துக்கு நான்கு நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் லொறி வரும். இந்த தண்ணீர் கிராம மக்களுக்கு போதுமானதாக இல்லை. பல மைல் தூரம் உள்ள கிணற்றிலிருந்து மக்கள் தண்ணீர் கொண்டு வருகின்றனர்.

இந்த கிராமத்தை சேர்ந்த பார்வதி ராமு ஜாதவ் (37) என்ற பெண் கடந்த வாரம் வந்த தண்ணீர் லொறியில் தண்ணீர் பிடிக்கச் சென்றார். நீண்ட வரிசையில் வெகு நேரம் காத்திருந்து, தண்ணீர் பிடிக்கும் நேரத்தில், லொறியில் தண்ணீர் தீர்ந்து விட்டது. வீட்டில் தண்ணீர் அவசியம் என்பதால், ஊருக்கு வெளியேயுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர சென்றார். அங்கும் ஏராளமான கூட்டம். தண்ணீர் இறைக்க மக்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். இதனால் வெறுங் குடத்துடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தார் பார்வதி. வெயில் கடுமையாக இருந்ததால் வீதியிலே யே மயங்கி விழுந்து இறந்தார்.

# நிரபராதி எனத் தெரிவித்து சிறையிலிருந்து வெளிவருவேன்

## ஆ. ராசா சபதம்



வழக்கு நீதிமன்றவிசாரணையில் இருப்பதால் இது குறித்து அதிகமாக விவ ரிக்க விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

2 ஜி வழக்கில் வெளியே வருவதை விட நிரபராதி என நிரூபித்து சிறையில் இருந்து வெளியே வருவதையே விரும்புவதாக முன்னாள் தெலைத்தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா தெரிவித்துள்ளார்.

பாட்டியாலா நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் ஆஜராகி வரும் ராசா நீதிமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது 2 ஜி வழக்கில் குற்றமற்றவன் என நிரூபித்து கறை படியாத கரங்களுடன் வெளியே வரவே விரும்புகிறேன் மாறாக பிணையில் வரமாட்டேன்.

பாட்டியாலா நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் குறுக்கு விசாரணையை முழுக்கவனத்தோடு உற்று நோக்கி வருவதாகவும்

## பான்-கீ-மூன் இந்தியாவிற்கு



ஐ.நா பொதுச்செயலாளர் பான்-கீ-மூன், மூன்று நாள் பயணமாக இவ்வாரம் இந்தியா வருகிறார். இந்தியா வரும் பான்-கீ-மூன் மண்டல மற்றும் உலக

பிரச்சினைகள் குறித்து மூத்த அரசியல் தலைவர்களுடன் முக்கிய ஆலோசனை நடத்தவுள்ளதாக ஐ.நா. தலைமை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# தந்தையை சுட்டுக்கொன்ற நான்கு வயது மகன்

(றியாத்)

சவுதி அரேபியாவில் தனது தந்தையை 4 வயது மகன் சுட்டுக் கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சவுதி அரேபியாவின் தெற்கு ஜிசான் பகுதியில் இந்தச்சம்பவம் நடந்துள்ளதாக அந்நாட்டு அஸ்ராக் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தந்தையிடம் பல நாட்களாக வீடியோ கேம் வாங்கித் தருமாறு நச்சரித்துக் கொண்டிருந்த அச்சிறுவன் அலுவலகம் சென்ற தந்தை வெறும் கையுடன் வந்ததைப் பார்த்து கோபமடைந்துள்ளான்.

தந்தை உடை மாற்றும் போது கீழே வைத்த அவரது துப்பாக்கியை எடுத்து அவரைச் சுட்டுள்ளான். இதில் தலையில் குண்டு பாய்ந்ததை அடுத்து சிறுவனின் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

# இந்தியாவுடன் பிரச்சினை பேசித்தீர்க்கப்படும்



(இஸ்லாமாபாத்)

இந்தியாவுடனான அனைத்துப் பிரச்சினைகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி தெரிவித்தார். 2008இல் தான் பிரதமராக பதவி ஏற்றபோது இந்தியா, ஆப்கன் மற்றும் ஈரான் நாடுகளுடனான பாகிஸ்தானின் உறவு மிகவும் மோசமான நிலையில் இருந்ததாகவும், பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேச்சு வார்த்தைக்கு வலியுறுத்தியதாகவும் கிலானி குறிப்பிட்டார். காஷ்மீர், சர்கிரீக், சியாச்சின், பயங்கரவாதம் உள்ளிட்டவற்றை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள மன்மோகன் சிங்குடனான சந்திப்பின்போது ஒப்புக் கொள்ளப்பட்டது என கிலானி தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

# படைகள் வெளியேறிய பின்னரும் விமானம் மூலம் குண்டுத்தாக்குதல்

## சூடானின் நடவடிக்கையால் பதற்றம்



தெற்கு சூடான் தனது படைகளை வாபஸ் பெற்ற பின்னரும், சூடான் இரண்டு விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதனால் சூடான் நாடுகளிடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

சூடர்ன் நாட்டில் கடந்த 20 ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டு சண்டையில் 15 இலட்சம் பேர் பலியாயினர். ஐ.நா தலையீட்டின் பேரில் கடந்தாண்டு தெற்கு சூடான்,தனி நாடாக உருவானது.

இரு நாட்டு எல்லையில் உள்ள ஹெக்லிக் என்ற இடத்தில் எண்ணெய் வளம் அதிகமாக உள்ளது. இதை தங்களிடம் ஒப்படைக்கும்படி, சூடான் அரசு தெற்கு சூடானை எச்சரித்து வந்தது.

இதற்கு, தெற்கு சூடான் மறுப்புத் தெரிவித்ததால், இருநாடுகளுக்கிடையே சமீபத்தில் சண்டை நடந்தது. இந்தச் சண்டையில் இருதரப்பிலும் 22 வீரர்கள் பலியாயினர்.

ஹெக்லிக் பகுதியிலிருந்து தெற்கு சூடான் தனது படையை வாபஸ் பெறவில்லை யென்றால், அந்நாட்டுடன் போர் நடக்கும் என சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பஷீர் தெரிவித்திருந்தார்.

நிலைமை விபரீதமாக போவதை கண்ட ஐ.நா பொதுச் செயலர் பான் கி மூன் சர்ச்சைக்குரிய ஹெக்லிக் பகுதியிலிருந்து தெற்கு சூடான் தனது படைகளை வாபஸ் பெற வேண்டும் என கூறியிருந்தார்.

சர்வதேச வரைபடத்தின் படி ஹெக்லிக் சூடான் வசம் தான் உள்ளது. இருப்பினும் இந்தப் பகுதி தங்களுக்குத் தான் சொந்தம் என தெற்கு சூடான் உரிமை கொண்டாடி வருகிறது.

இந்தப் பகுதி இன்னும் சரியாக வரையறுக்கப்படாத காரணத்தால் சர்ச்சை நீடிக்கிறது. சூடான் நாட்டுடன் நடந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து மூன்று நாட்களுக்குள் தன்னுடைய படைகளை வாபஸ் பெறுவதாக தெற்கு சூடான் ஜனாதிபதி சால்வா கிர் உறுதியளித்தார்.

ஜனாதிபதி சல்வா கிரின் உத்தரவுப்படி, படைகளை முற்றிலும் வாபஸ் பெற்று விட்டதாகவும், இருப்பினும் சூடான் படையினர் தொடர்ந்து குண்டு வீசி வருவதாகவும் தெற்கு சூடான் இராணுவ தளபதி புகார் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தெற்கு சூடான் எல்லைப் பகுதியில், நேற்று முன்தினம் சூடான் நாட்டின் இரண்டு விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இதில் ஒரு சிறுவன் பலியானதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே சர்ச்சைக் குரிய ஹெக்லிக் எண்ணெய் பகுதியை சூடான் ஜனாதிபதி அல் பஷீர் நேற்று முன்தினம் பார்வையிட்டார். தெற்கு சூடானுக்கு எதிரானசண்டையில் வெற்றி பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தென்சூடானின் எல்லைப் பகுதியில் வட சூடான் மேற்கொண்ட வான் வழித் தாக்குதல்களை ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் பான் கீ மூன்கண்டித்துள்ளார்.

# ஜப்பான் சுனாமியில் சுருட்டிய பந்து அமெரிக்காவில் கண்டுபிடிப்பு

(டோக்கியோ)

ஜப்பான் நாட்டில் கடந்த ஆண்டு ஏற்பட்ட பெரும் சுனாமியில் சுருட்டிச்செல்லப்பட்ட காற்பந்து ஒன்று அமெரிக்காவில் மீட்கப்பட்டு அதன் உரிமையாளரும் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பான் சுனாமி வாரிச் சென்ற பொருட்கள் அனைத்தும் பசிபிக் கடலின் மறுமுனையான அலாஸ்கா, கனடா, வொஷிங்டன் உள்ளிட்ட பகுதிகளைச் சென்றடையும் என்று கூறப்பட்டு வந்தது. இவை அனேகமாக 2013 அல்லது 2014ஆம் ஆண்டு கரைசேரும் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில் அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தின் கடலோரத்தில் வந்து குவிந்த சுனாமிக்குப்பைகளில் காற்பந்து ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

அதில் உரிமையாளரின் பெயர் விவரம் இருந்தது. பந்தை மார்ச் மாதம் கண்டுபிடித்த டேவிட் பக்ஸ்டெர் ஜப்பான் நிருபர் ஒருவர் உதவியுடன்

உரிமையாளரைத் தேடும் பணியில் ஈடுபட்டார்.

கடைசியாக அந்தப் பந்து ஜப்பான் நாட்டின் ரிகுஜென்டா



காடா என்ற நகரத்தைச் சேர்ந்த முராகமி என்பவருக்குச் சொந்தமானது என்று தெரியவந்தது. இந்தத் தகவலை முராகமிக்குத் தெரிவித்த போது அவரால் இதை நம்ப முடியவில்லை!

வீட்டோடு தொலைந்து போன காற்பந்து 5 ஆயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் மீட்கப்பட்டது மிகப் பெரிய ஆச்சரியமாக இருக்கிறது என்று அவர் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். நம்பவே முடியவில்லைத்தான் ஆனாலும் கண்டெடுததவருக்கு மிக்க நன்றி என்று அவர் கூறியிருக்கிறார்.

சுனாமி காற்பந்தை கண்டெடுத்த தம்பதியினர் ஜப்பான் செல்லவும் திட்டமிட்டுள்ளனர்.

# 14 ஆவது தடவையாகவும் சிரியா மீது பொருளாதாரத் தடை

உள்நாட்டு சண்டைகள் நடந்து வரும் மத்திய கிழக்கு நாடான சிரியா மீது புதிய பொருளாதாரத் தடைகளை ஐரோப்பிய கூட்டமைப்பு விதித்தது.

இந்தக் கூட்டமைப்பு சிரியா மீது விதிக்கும் 14ஆவது சுற்றுப் பொருளாதாரத் தடை இதுவாகும்.

ஜனாதிபதி பஷர் அல் அசாத் குடும்பத்தினரின் சொகுசு வாழ்க்கையைத் தடுக்கும் வகையில், ஆடம்பரப் பொருட்களை அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு

தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ள 27 நாடுகள் ஒப்புக் கொண்டிருக்கின்றன.

ஆனால் சிரியாவில் சண்டை நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு ஐ.நா பார்வையாளர்களை அங்கு அனுப்புவதற்கு சம்மதித்திருக்கும் ரஷ்யா, இந்தப் புதிய தடைகளுக்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

சர்வதேசச் சட்டங்களின் அடிப்படையில் இந்தத் தடைகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்று ரஷ்யாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் அலெக்ஸாண்டர் லுகாஷெவிச் தெரிவித்துள்ளார்.

எனினும் சிரியாவில் அரசின் அடக்குமுறைகளுக்குப் பதிலடி தருவதற்கு இதுபோன்ற உறுதியான நடவடிக்கைகள் அவசியம் என்று ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.




சிரியா மீது அழுத்தத்தை அதிகரிப்பதற்கு இது மிகவும் முக்கியம் என்று பிரிட்டிஷ் வெளிவிவகாரத்துற்ற அமைச்சர் வில்லியம் ஹேக் கூறினார்.

மேலும் ஐ.நா முன்னாள் பொதுச் செயலாளர் கொபி அனானின் சண்டை நிறுத்தத் திட்டப்படி சிரியா அரசு நடந்து கொள்ளவில்லை என்று ஹேக் குற்றம்சாட்டினார்.

அனானின் சண்டை நிறுத்த ஏற்பாட்டுக்குப் பிறகும் பல இடங்களில் வன்முறை நடந்து வருவதாகவும், கடந்த வார இறுதியில் பல்வேறு இடங்களில் நடந்த மோதல்களில் 33 பேர் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்தாண்டு மார்ச் மாதத்தில் அசாத் அரசுக்கு எதிரான கிளர்ச்சி தொடங்கியதிலிருந்து இதுவரை 9 ஆயிரத்துக்கு அதிகமானோர் பலியானதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

# யானையின் மூதாதைப் படிமம் ஆர்ஜன்ரீனாவில் கண்டுபிடிப்பு



ஆர்ஜன்ரீனாவின் தலைநகரான பியூனஸ் அயர்ஸ் மார்க் கோஸ் பாஸ் என்ற பகுதியில் உள்ள சுரங்கத்தில் அகழ்வாராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட

ஆய்வில் சுமார் 300இற்கும் அதிகமான விலங்குகளின் படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இவை அனைத்துமே கற்காலத்தவையாக இருக்கலாம் என்பது முதற்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இச்சுரங்கத்தில் 1000 சதுர மீற்றர் பரப்பளவில் இந்த படிமங்கள் அனைத்தும் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். லா பல்டா

பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஆய்வாளர் டேவிட் பியாசா தலைமையில் மேற்கொண்ட ஆய்வில் இவை கண்டறியப்பட்டுள்ளது. தொடர்ந்து

நடைபெறும் ஆய்வில் இவை குறித்த விரிவான தகவல்கள் தெரியவரும் என்றும் தலைமை ஆராய்ச்சியாளர் டேவிட் பியாசா தெரிவித்துள்ளார்.

எறும்புத் தின்னிகள் உருவ அமைப்பில் இருக்கும் கிளிப்டோடான், யானைகளின் மூதாதை விலங்காக கருதப்படும் மாஸ்டோடான் ஆகியவற்றின்

படிமங்களும் தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக மேலும் ஆராய்ச்சி நடந்து வருகிறது என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# அறிவு ரீதியாக அஹிம்சை ரீதியாக எதிர்த்து நிற்கத் திராணி வேண்டும்!

முஸ்லிம்களுடைய பூர்வீகம் சகிப்புத் தன்மையோடும், எங்களுடைய இஸ்லாமிய வரலாறு காட்டுவது போல் வன்முறைக்கு நாங்கள் செல்லக் கூடாது வலிந்து வன்முறையை வரவழைக்கின்ற சமூகமாக நாங்கள் இருக்க மாட்டோம் என்றவொரு நிலைப்பாட்டிலே நாங்கள் இருக்க வேண்டும்; இருக்கிறோம்.

இஸ்லாமிய வரலாறு எமக்கு சில பாடங்களைக் கற்றுத் தந்துள்ளது. ஏனைய சமூகங்களுடன் எவ்வாறான அடிப்படையில் நடந்து கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு கூறுவதாக இருந்தால் இஸ்லாத்தில் இரண்டாவது கலீபாவாகிய (ஆட்சியாளராகிய) உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் ஜெரூசலம் கைப்பற்றப்பட்டு அந்த இடத்திற்கு கலீபா விஜயம் செய்த போது அங்கு இருந்த ஒரு கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவ்வேளையில் பாங்கு(அதான்) ஒலிக்கிறது. அப்போது குறித்த தேவாலயத்திலிருந்த கிறிஸ்தவ பாதிரியார் உங்களுடைய தொழுகைக்கான நேரம் வந்து விட்டது. இந்த இடத்தில் எங்காவது தொழுது கொள்ளுங்கள் எனக் கூறிய போது உமர்(ரழி), நான் இந்த தேவாலயத்தில் தொழுவதற்கு விரும்பவில்லை. நான் இதில் தொழுதால் இதைக் காரணமாக வைத்து எனக்குப் பின்னால் வரக் கூடிய சமூகம் இதை வணங்கப்படும் மஸ்ஜிதாக ஆக்கிவிடுவார்கள் என்ற அச்சமிருக்கிறது எனக் குறிப்பிட்டார்கள்.

அப்படிப்பட்ட பூர்வீகத்தைக் கொண்ட மார்க்கமாகத் திகழ்கிற இஸ்லாத்தில் பிறந்த நாங்கள் அரபு நாடுகளுக்குச் சென்ற போது அந்த நாட்டுத் தூதுவர்களிடத்திலும் தலைமைகளிடத்திலும் தற்போது இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் முன்மொழிதலுடன் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு நீங்கள் ஆதரவு தெரிவிக்கக் கூடாது எனக் கூறினோம். அதற்கான நியாயத்தையும் முன்வைத்தோம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசாங்கத்தில் காணப்படுகின்ற இன நல்லிணக்கத்தை எடுத்துக் கூறியதோடு, இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் நாட்டில் உருவாகியிருக்கின்ற நெருக்கம் இல்லாமல் போவதோடு தீய சக்திகளின் ஆதிக்கம் ஓங்கும் அபாயகரமான நிலை உருவாகும் எனக் கூறினோம். குறிப்பாக நான் எனது உரையில் அதைக் குறிப்பிட்டிருந்தேன்.

நேற்று நான் கட்டாரிலிருந்து வந்து இறங்கியவுடன் எனது கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மாநகரசபை உறுப்பினர் றம்ழான் ஓர் அறிக்கையை விடடிருந்தார். ஜெனிவாவில் இலங்கைக்கு சார்பாக சர்வதேசம் தமது வாக்குகளைப் பிரயோகிக்க வேண்டுமென வேண்டிக்கொண்ட அமைச்சர்களுக்கு கைம்மாறாக தம்புள்ளைப் பள்ளிவாசலில் தொழுவதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அங்கு பள்ளிவாசல் இருப்பதற்கு தடை ஏற்பட்டுள்ளது என அறிக்கையொன்றை விட்டிருந்தார். அது உண்மையாகவே இன்று நாடு பூராகவுமுள்ள முஸ்லிம்களின் உணர்வு என்பதை நாங்கள் சொல்லியாக வேண்டும்.

இந்த விடயம் சம்பந்தமாக நான் தம்புள்ளை சென்றிருந்தேன். நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டேன். அவற்றை மேடைகளில் தொடர்ந்து பேசுவதனால் பிரச்சினைதான் உருவாகும் என்பதற்காக அதனை இங்கு பேசவில்லை.

எனக்கு மிக ஆறுதல் தருகின்ற விடயம் என்னவெனில்,

காத்தான்குடியில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் பேச்சிலிருந்து



தம்புள்ளையில் முஸ்லிம் சகோதரர்கள் மாத்திரம் என்னைச் சந்திக்கவில்லை. தம்புள்ளையில் பூர்வீகக் குடிமக்களாக இருக்கின்ற சிங்கள சகோதரர்கள், தம்புள்ளை மாநகர சபைப் உறுப்பினர்கள் என்னை சந்தித்த போது, "எங்களுடைய பெற்றோருடைய காலத்திலிருந்து இயங்கி வருகின்ற பள்ளிவாசல் இது. சுமார் 60வருடங்கள் பழமை வாய்ந்த இப்பள்ளிவாசலை அகற்றுவது நியாயமற்றது" என தமது கவலைகளை வெளியிட்டனர்.

அந்தப் பகுதி அரசியல்வாதியும் காணி அமைச்சருமான ஜனக பண்டார தென்னக்கோனை தம்புள்ளையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தபோது "இது அப்பட்டமான அநியாயம். ஒரு சமூகத்தின் உரிமைகளைப் பறிக்கின்ற விடயத்தை நான் உளப்பூர்வமாக எதிர்க்கிறேன். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களில் 5சதவீதமானோர் கூட தம்புள்ளை மக்கள் அல்லர். வெளி மாவட்டங்களிலிருந்து அழைத்து வரப்பட்ட கும்பல். இவற்றையெல்லாம் ஜனாதிபதியிடம் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளேன்" எனத் தெரிவித்தார்.

எனக்கு ஏலவே கேள்விப்பட்ட ஒரு விடயம், ரங்கிரி எப்.எம். வானொலி வன்முறையிலே ஈடுபட்ட கும்பலுடன் திட்டமிட்டு ஒரு சமூகத்துக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டும் துவேசப் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றது. இதனடிப்படையிலே நான் வரும் போது குருநாகலிலிருந்து சுமார் 2 மணித்தியாலங்கள் எனது வாகனத்தில் வைத்து அந்த அலைவரிசையைக் கேட்டேன்.

வழிநெடுகக் கேட்டுக்கொண்டு வந்த எனக்கு இந்த நாட்டிலே ஒரு சமூகத்துக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டும் துவேசப் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகிற இனவாதத்திற்கு தூபமிடுகிற ஒரு வானொலியாக அவர்களுடைய நிகழ்ச்சிகளும் வார்த்தைப் பிரயோகங்களும் காணப்படுகின்றன.

அதில் பேசும் ஒவ்வொருவரும் எவ்வித தங்கு தடையுமின்றி மிக ஆவேசமாக ஆத்திரமாக, தம்புள்ளையில் முஸ்லிம்கள் எமது புனித பூமியை ஆக்கிரமித்து விட்டார்கள். இது போன்று பல இடங்களில் இடம்பெற்றுள்ளது என சொல்லுகின்றார்கள். எவ்வித தங்கு தடையுமின்றி மிக வேகமாகப் பேசுவதைப் பார்த்தால் எழுதி வாசிப்பதும் திட்டமிட்டு செய்யப்படுகின்றது என்பதும் தெளிவாகின்றது.

இந்த எப்.எம். அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட வேண்டுமென்று நான் நினைக்கிறேன். எமது அரசியல் சட்டத்தின் 14ஆவது ஷரத்தின் படி அனைவருக்கும் பேச்சுரிமை உண்டு. அரசாங்கம் கூட பேச்சுரிமையைப் பறிக்க முடியாது. ஆனால் ஒரு சில காரணங்களுக்காக பேச்சுரிமையைத் தடுக்க முடியும்.

நாட்டிலே ஒற்றுமையை இல்லாமல் செய்வதற்கும் சமயங்களுக்கு மத்தியில் விரிசலை ஏற்படுத்துவதற்கும் அது பாவிக்கப்படுமாக இருந்தால் அந்த நேரத்தில் அதைப் பறிப்பதற்கான உரிமை அனுமதி அரசாங்கத்திற்கு உள்ளது.

அரசுக்கு விசுவாசமாக இருப்போம் என சத்தியப்பிரமாணம் செய்த ஒவ்வொரு அரசியல்வாதியும் நான் உட்பட இந்த அலைவரிசையைத் தடை செய்யுமாறு அரசாங்கத்திடம் கேட்பதற்கான முழு அருகதையும் எமக்கு உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்திலே ஈடுபட்டவர்கள் 5 சதவீதமானோர் கூட தம்புள்ளை மக்கள் அல்லர். வெளி மாவட்டங்களிலிருந்து அழைத்து வரப்பட்ட கும்பல் என அங்கு வந்திருந்த பெரும்பான்மை சிங்களவர்கள் திட்டவமாகத் தெரிவித்தனர்.

நிர்வாக ரீதியாக எந்தப் பலவந்தம் வந்தாலும் கூட இன்றிருக்கின்ற நெருக்கடி நிலைமையில் தம்புள்ளை மாநகர சபை எல்லைக்குள் வாழ்கிற மக்களுக்கு மத்தியில் இது தொடர்பாக வாக்கெடுப்பொன்றை நடத்தினால், இந்தப் பள்ளியை அகற்றக் கூடாது என்பதற்கு முழு ஆதரவு கிடைக்கும் என நான் நினைக்கின்றேன். ஏனென்றால் அவர்கள் எமக்கோ அங்கு பள்ளியிருப்பதற்கோ எதிர்ப்பில்லை.

இந்த விடயம் நிர்வாக ரீதியாக எந்தப் பலவந்தத்திற்கும் உட்படுத்தப்படக் கூடாது. அறிவு ரீதியாக அஹிம்சை ரீதியாக இதை எதிர்த்து நிற்பதற்கு திராணியுள்ளவர்களாக நாங்கள் இருக்க வேண்டும். வன்முறையால் அல்ல.

நிரந்தர சமாதானம் வேண்டுமாக இருந்தால் இந்த நாட்டிலே சகல இனத்தவர்களுக்கும் சம உரிமை வழங்கப்படல் வேண்டும். இல்லையேல் நிரந்தர சமாதானமொன்று ஏற்பட முடியாது.

ஆகவே, இந்த அநீதியை எதிர்த்து அஹிம்சை வழியிலும் அறிவு பூர்வமாகவும் எங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு போராட உள்ளோம்.

# சூரியனின் காந்த சக்தி குறைகிறது வானிலை ஆராய்ச்சி மையம் தகவல்



சூரியன் தனது காந்த சக்தியை இழந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக, பூமிக்கு அருகில் உள்ள விண்வெளி மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊட்டியில் உள்ள வானிலை ஆராய்ச்சி மையத்தில் ரேடியோ தொலைநோக்கியைப் பயன்படுத்தி சூரியனுக்கும், பூமிக்கும் இடைப்பட்ட மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அந்த ஆய்விலேயே இது கண்டறியப்பட்டுள்ளது.

பூமியின் அனைத்து உயிர்களின் ஆதாரம் சூரியன். சூரியனின் செயற்பாடு ஒவ்வொரு 11 ஆண்டுகளிலும் குறைந்தபட்ச நிலையிலிருந்து, அதிகபட்ச நிலையை அடைகிறது. இது 11 ஆண்டு சூரியனின் சுழற்சியாகும்.

சாதாரணமாக சூரியனின் குறைந்த செயற்பாட்டு நிலை ஓர் ஆண்டுக்கு நீடிக்கும். ஆனால், தற்போது சூரியனின் குறைந்த செயல் திறன் 4 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்தது. இந்த மாற்றம் குறிப்பாக 100 ஆண்டுகளில் நிகழ்ந்த மிகக் குறைந்த, சூரியனின் காந்த சக்தியை குறிக்கிறது.

இந்த சரிவு 2006ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை காணப்பட்டது. மேற்கூறிய காலகட்டத்தில் 800 நாட்களுக்கு மேலாக சூரியப் புள்ளிகள் இல்லாமல் சூரியன் காட்சியளித்தது.

சாதாரணமாக 11 ஆண்டு சுழற்சியில் கிட்டத்தட்ட 300 நாட்கள் மட்டும் சூரியப்புள்ளிகள் இல்லாத நிலை ஏற்படும். நெடு நாட்கள் சூரியப் புள்ளிகள் இல்லாத நிலையானது, சூரியனில் ஏற்படும் காந்தப்புலன் சக்தி குறைவினைச் சுட்டிக்காட்டுகிறது.

சூரியனிலிருந்து வெளிப்படும் சூரியக்காற்று, ஆற்றல் மிகுந்த மின்னணுத் துகள்களால் ஆனது. சூரியக் காற்றின் வேகமானது அதிகபட்சமாக மணிக்கு 30 இலட்சம் கி.மீ. வரை இருக்கும். அதனுடைய வெப்பநிலை 10 இலட்சம் டிகிரிக்கும் மேல் இருக்கும்.

கடந்த 1985ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள், சூரியனிலும் அது வெளியிடும் காற்றிலும், சீரான ஆற்றல் குறைந்து வருவதை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு படிப்படியாக குறைந்து வரும் ஆற்றலானது சூரியக்காற்றில் குறைந்து வரும் மின்னணுத் துகள்களின் அடர்த்தியிலும் காணப்படுகிறது.

சூரியனைச் சூழ்ந்துள்ள குறைந்த காந்த அழுத்தமானது, சூரிய மண்டலத்துக்கு வெளியிலிருந்து வரும் 'கொஸ்மிக்' துகள்களை இலகுவாக ஊடுருவ அனுமதிக்கிறது.

ஆகையால் பூமிக்கு அருகில் உள்ள விண்வெளி மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. இந்த நிலை இன்னும் 11 ஆண்டு சுழற்சிக்கும் நீடிக்கும் என்றால், அது நிச்சயமாக பூமிக்கும் சூரியனுக்கும் இடையேயுள்ள மண்டலத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்களைக் கொண்டு வர வாய்ப்புள்ளது.

உதாரணமாக, 17ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட, 'மாண்டர் சிறுமம்' அல்லது உறைகாலத்தைப் போன்ற நிலையை நோக்கி செல்கிறது. மாண்டர் சிறுமம், பூமியின் வடபகுதியில் 2 முதல் 3 டிகிரி வெப்ப தணிவுக்கு காரணமானது. இவ்வாறு ஊட்டி வானிலை ஆராய்ச்சி மையக் குறிப்பு தெரிவிக்கிறது.

# அடிப்படைத் தேவைகள் பற்றி ஆராய்வு கொக்கிளாயில் ஆளுநர் நடவடிக்கை



(கிளிநொச்சி)

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கொக்கிளாய் பிரதேசத்திற்கு விசேட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மேற்படி பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் மற்றும் உயரதிகாரிகள் அப்பிரதேச மக்களுக்குத் தேவையான வீடமைப்பு, பாடசாலை, விளையாட்டு மைதானம், சுகாதாரம் மற்றும் உட்கட்டுமானம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தனர்.

அத்துடன் வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இதன்போது வவுனியா மாவட்ட பிராந்திய ஆணையாளர் ஐ.எம்.எஸ்.மொகைதீன் உள்ளிட்ட அதிகாரிகள் ஆளுநருடன் கலந்துகொண்டனர்.

# டில்லி அபார வெற்றி



(புனே)

கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டெவில்ஸ் அணி எட்டு விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் 31 ஆவது போட்டி நேற்று புனேயில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய புனே அணி 20 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எம்.கே.பாண்டே 80, உத்தப்பா 60 ஓட்டங்களை ஆட்டமிழக் காது பெற்றனர்.

பதிலுக்கு 147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டில்லி அணி 16 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஆட்டமிழக்காது 87 ஓட்டங்களைப் பெற்ற சேவாக் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# ஆசிரிய ஆளணி விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்குமான ஆசிரிய ஆளணி தகவல் தொடர்பான செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களின் விபரம், மாணவர்களின் விபரம், பாடசாலைகளின் அடிப்படைத் தரவுகளை இற்றைப் படுத்துவதற்கான செயலமர்வு நாளைமறுதினம் காலை 8.30 மணி முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி நண்பகல் வரை மன்னார் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்ட முகாமைத்துவ உதவியாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்விற்கு வருகை தரும் பொழுது மாகாணக் கல்வித் திணைக்களம் வலய திட்டமிடல் பிரிவின் ஊடாக கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட படிவங்கள் அனைத்தும் பூரணப்படுத்தப்பட்டு கொண்டு வருதல் அவசியமானதாகும்.

அத்துடன் ஒவ்வொரு பாடசாலையிலும் அதிபர் உட்பட சம்பளம் பெறும் ஆசிரியர்களது எண்ணிக்கை (பங்குனி மாதம்) வலயக் கணக்காளரால் உறுதிப் படுத்தப்பட்ட பிரதியைக் கொண்டு வருதல் வேண்டும். மடிக்கணினி உள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் தமது மடிக்கணினிகளையும் அவற்றுக்கான மின்னிணைப்பு வயர்களையும் எடுத்து வருமாறு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

# சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப் புறக்கணிப்பு

நாடு முழுவதும் இன்று தொடக்கம் தொடர்ச்சியாக பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை பொது மக்கள் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதான மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீருடை கொடுப்பனவு 15000 வழங்குதல், எரி பொருள் கொடுப்பனவு 7500 ரூபா வழங்குதல் மற்றும் அலுவலக கொடுப்பனவாக நகர அடிப்படையில் 2500 ரூபாவும் கிராம அடிப்படையில் 2000 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என்பதே இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் மூன்று கோரிக்கைகளாகும்.

## கைதிகள்...

முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த கைதிகள் சிறைச்சாலையில் மோதிக்கொண்டமை குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (பா)

## அரசுடனான...

மத்தியஸ்தராக ஏற்றுக் கொளளுமாறு இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் கோரியிருந்தார் என்றும், இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இது தொடர்பில் அரசாங்கம் எவ்வித கருத்தையும் இதுவரையில் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அக்ஷய...

செல்லும் என்பதே அனைவரினதும் நம்பிக்கையாகவும் காணப்படுகிறது இந்த அக்ஷய திருதியை முன்னிட்டு யாழ்.நகர்ப் பகுதியிலுள்ள தங்க நகைக் கடைகளில் நகைகளைக் கொள்வனவு செய்யும், வாடிக்கையாளர்களுக்கு, வீதசாரக் கழிவுடன் பரிசுப்பொதிகளும் வழங்கப்பட்டன.

வாடிக்கையாளர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னரே தங்க ஆபரணங்களைக் கொள்வனவு செய்ய முற்பதிவு செய்ததாக நகைக்கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர். அக்ஷய திருதியை நகைக்கடைகள் மட்டுமன்றி ஏனைய வர்த்தக நிலையங்களிலும் கொண்டாடப்பட்டது.

## இந்தியப்...

கடந்த வாரம் இலங்கை வந்து சென்றது. தமிழர்களின் மறுவாழ்வு, மீள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு செய்த அந்தக் குழு, பொதுமக்களிடமும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளிடமும் ஆலோசனை நடத்தியது. இறுதியில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேசியது.

இந்நிலையில், அந்தப் பயணம் தொடர்பாக, நேற்று முன்தினம் மாலை இந்தியப் பிரதமரைச் சந்தித்து சுஷ்மா சுவராஜ் ஆலோசனை நடத்தினார். அப்போது, வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மதாய மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் ஆகியோரும் உடனிருந்தார்கள். இதுதொடர்பாக நேற்று பிடிஐ செய்தி நிறுவனத்திடம் பேசிய சுஷ்மா சுவராஜ், தங்களது இலங்கைப் பயணத்தின்போது, வடக்கில் இராணுவப் பிரசன்னத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பது குறித்து இலங்கை ஜனாதிபதியிடம் பேசியதாகத் தெரிவித்தார். மேலும், 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தம் குறித்துப் பேசியதாகவும் சுஷ்மா தெரிவித்தார்.

## இளைஞன் வெட்டிக்கொலை...

நபர்கள் பழைய நீதிமன்றத்திற்குச் செல்லும் பாதையிலுள்ள முருகன் கோவிலுக்கு அண்மையில் வைத்து அந்த இளைஞனை வாளால் வெட்டியுள்ளனர்.

இதனையடுத்து நிலைகுலைந்து கீழே விழுந்த அந்த இளைஞன் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். பிள்ளையார் கோவிலடி வீதி தொண்டைமானாறைச் சேர்ந்த சிவஞானம் சிவரூபன் (வயது - 28) என்ற நபரே இவ்வாறு இறந்துள்ளார்.

குறித்த நபர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் உள்ள உறவினர்களுக்கு சாப்பாடு கொடுத்துவிட்டு சைக்கிளில் வந்து கொண்டிருந்த போதே வதிரிச் சந்தியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவரை வெட்டி விட்டு சென்றுள்ளதாகவும் அந்நபர் ஸ்தலத்திலேயே பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நபர் திருமாகாதவர் எனவும் டுபாயிலிருந்து வந்து 6 மாதங்களாக இங்கு இருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன. சடலம் மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன. (116,எஸ்)

## சீரற்ற...

போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

மேலும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் கனமழை பெய்ததுடன் யாழ். நகர் உள்ளிட்ட சில பகுதிகளில் நேற்று மாலை இடிமின்னலுடன் கூடிய இலேசான மழைத்தூறலும் காணப்பட்டது. மேலும் யாழ். குடா கரையோரப்பகுதிகளில் பலத்த காற்று வீசியதுடன் கடலும் சற்று கொந்தளிப்பாக காணப்பட்டது. இதனால் மீனவர்கள் பலர் தமது வழமையான கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொண்டனர். இதேவேளை தற்போது நிலவும் சீரற்ற காலநிலை தொடரும் சாத்தியம் உள்ளதாக திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (26)

## எயிட்ஸ் நோய்...

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த வருடம் இலங்கையில் 150 எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன் 50 குழந்தைகள் எச்.ஐ.வி. வைரஸுடன் பிறந்துள்ளன. இனங்காணப்பட்ட எச்.ஐ.வி. நோயாளிகளில் 61 சதவீதமானோர் மேல் மாகாணத்திலேயே இனங்காணப்பட்டுள்ளதாக இவ் அறிக்கை தெரிவித்திருக்கிறது. தவறான உடலுறவு மற்றும் தவறான குருதிப் பரிமாற்றம் எச்.ஐ.வி. நோயினை பரவச் செய்கிறது.

கருத்தரித்த தாய்மார்களுக்கு இந் நோய் ஏற்படுமாயின் அது குழந்தைக்கும் பரவும் என அவர் தெரிவித்தார்.

இது குறித்து ராகம வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் ஜயதாதரி ரணதுங்க கருத்து தெரிவிக்கையில்

கடந்த வருடத்தில் ராகம வைத்தியசாலையில் எச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்பட்ட 8 பேர் இனங்காணப்பட்டதுடன், இவ் வருடத்தின் இரு மாதங்களுக்குள் 5 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் 79 சிபிலிசு நோயாளிகளும் 156 ஹேர்ப்ஸ் நோயாளிகளும் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

## தொடர்ந்தும்....

மாலை 131.35 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்றுக் காலை 132.20 ரூபாவாக வீழ்ச்சியடைந்தது.

அமெரிக்க டொலருக்கு எதிராகப் பதிவாகியுள்ள இலங்கை நாணயத்தின் ஆகக் குறைந்த மதிப்பு இதுவேயாகும். ஏற்கனவே, கடந்த மார்ச் 19 ஆம் திகதி அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிரான இலங்கை நாணய மதிப்பு 131.60 ரூபாவாக வீழ்ச்சியைச் சந்தித்தது. அதன் பின்னர், சற்று நாணய மதிப்பு வீழ்ச்சி தடுக்கப்பட்ட போதும், கடந்த இருவாரங்களாக மீண்டும் வீழ்ச்சி கண்டுவருகிறது.

## தென்கொரியாவுடன்....

சம்பந்தமான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கும், தென்கொரிய குடியரசின் திட்டமிடல் மற்றும் நிதி அமைச்சுக்கும் இடையில் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கையில் இருநாட்டு அரச தலைவர்களும் நேற்று கைச்சாத்திட்டுள்ளனர். இது தவிர நாட்டின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும், தென்கொரிய அறிவு விருத்தி மற்றும் பொருளாதார விவகார அமைச்சுக்கும் இடையில் மின்சக்தி ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை வலுவான முதலீட்டுக்கான ஒரு தளமாக திகழ்கின்றது என இதன்போது மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். கொரியாவின் முன்னணி வர்த்தகர்கள் சிலரை சந்தித்து நேற்று முற்பகல் கலந்துரையாடியபோதே ஜனாதிபதி இந்தக் கருத்தினைக் குறிப்பிட்டுள்ளார். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பானதும், ஸ்திரமானதுமான முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குவதற்கும் இலங்கை தயாராக இருக்கின்றது என்று, பெரும்பாலான முதலீட்டாளர்கள் புரிந்து கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

முதலீட்டுக்கான தீர்மானங்களின் போது இலங்கை முதலீட்டு சபை திட்டங்களை தெரிவுசெய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்குவதுடன், அந்த சந்தர்ப்பங்களின் ஊடாக பயனைப் பெற்றுக்கொள்ளுமாறு தென்கொரிய வர்த்தகர்களிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டுள்ளார்.

# நிர்க்கதியான மக்களின் வாழ்வை மேம்படுத்த சமுர்த்தி உதவித் திட்டம் நல்ல வாய்ப்பு



(காரைநகர்)

யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சமுர்த்தி உதவித் திட்டம் சிறந்ததொரு வாய்ப்பாகவுள்ளது என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புத்தாண்டு விளையாட்டு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் காரைநகர் சமுர்த்தி சங்கத்தின் முகாமையாளர் தி.சசிகுமார் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் உதயன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் முப்பது வருடகாலமாக நீடித்த யுதத்தத்தினால் எம் மக்கள் அனைத்தையும் இழந்து ஓர் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமது உழைப்பை நம்பி சொந்தக் காலில் நின்றுழைத்த எம் தமிழ் மக்கள் இன்று உதவிகளைப் பெற்று வாழும் ஓர் நிலைக்கு உள்ளாகி உள்ளனர்.

இவ்வாறு நிர்க்கதியான நிலையிலுள்ள மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரு முயற்சியால் யாழ். குடாநாட்டில் சமுர்த்திச் செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் சிறந்ததொரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

இன்று சமுர்த்தியினூடாக மக்களது வாழ்வாதாரம் மேம்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு நற்சூழலை ஏற்படுத்திய பெருமை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியையே சேரும் என்பது மிகையில்லை எனத் தெரிவித்தார்.

இங்கு கருத்துரையினை யாழ் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ச.சிவசிறி நிகழ்த்தினார். முன்பதாக கிறிஸ்மரம் ஏறுதல், கிடுகு பின்னுதல், தடைதாண்டல், மெதுவான சைக்கிளோட்டம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றது.

தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டியவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் உட்பட நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் காரைநகர் பிரதேச செயலாளர் திருமதி பாபு ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச இணைப்பாளரும் காரைநகர் பிரதேச சபை எதிர்கட்சித் தலைவருமான வீ.கண்ணன் (ரஜனி) சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பொழுதுபட்டால் விலை உயரும்

## பயணிகளுக்கு எச்சரிக்கை!

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கியும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பேருந்துகள் பயணிகளின் நலன்கருதி இடையிடையே சில உணவகங்களில் தரித்து விட்டுச் செல்கின்றன. அந்நேரத்தில் பயணிகள் உணவுகள், குளிர் பானங்கள் வாங்கும் போது சாதாரண விலையைவிட உயர்வாக விற்பனை செய்கின்றனர். குறிப்பாக 35 ரூபா பெறுமதியான குளிர் பானம் 50 ரூபாவாகவும், 20 ரூபா பெறுமதியான உணவுப் பண்டம் 40 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. குறிப்பாகப் பயணிகளுக்கே இவ்வாறு விலை உயர்த்தி விற்பனை செய்கின்றனர். பேருந்து ஒருசில இடங்களில் மட்டுமே தரித்துச் செல்வதனால் பயணிகள் விலை உயர்வான பண்டத்தையும் வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். (m.r.t.c)

# எருமைகள் விபத்தில் பலி

பங்கதெனிய, தெமட்டபிட்டிய சந்தியில் நேற்றுக் காலை வேகமாகச் சென்ற கொள்கலன் ட்ரக்கொன்று மோதியதன் காரணமாக 11 எருமை மாடுகள் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இரு எருமை மாடுகளின் கால்கள் முறிவடைந்து படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர். சிலாபத்திலுள்ள ராஜகடலுவ பலுகஸ்வெவ தோட்டத்திலுள்ள எருமை மாடுகள் நெரிபட்டு வீதிக்கு வந்த போது இச்சம்பவம் இடம்பெற்றது. எருமை மாடுகளின் இறந்த உடல்கள் அகற்றப்பட்டு உள்ளதாகத் தோட்ட முகாமையாளர் கூறினார்.

# ஆயுதங்களுடன் இருவர் இருவேறு சம்பவத்தில் கைது

நாவலபிட்டி - மேல் ரம்புக்கெட்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது துப்பாக்கிப் பாகங்களை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நாவலபிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார். இதேவேளை, காலி யக்கலமுல்ல - மினுவன்தெனிய பகுதியில் உள்நாட்டு தயாரிப்பு துப்பாக்கி மற்றும் ரி-56 ரக ரவைகள், கட்டுத்துவக்கு என்பவற்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக யக்கலமுல்ல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# இலங்கையில் முதல்முறையாக பாரிய சரக்கு கப்பல் நிர்மாணம்

இலங்கை கப்பல் கட்டும் வரலாற்றில் பாரிய சரக்கு மற்றும் பயணிகள் கப்பல் ஒன்றை நிர்மாணித்து வருகிறது.இதில் 400 பயணிகளும், 250 டொன் கொள்கலன்களையும் ஏற்றிச் செல்லும் வல்லமையுடன் இந்த பாரிய கப்பல் இந்தியாவில் இயங்கும் ஐகிய லக்ஷ்திவீப் வலய நிர்வாகத்தால் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. குறித்த கப்பல் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததும் கொச்சின் மற்றும் லக்ஷ்திவீப் தீவுகளுக்கு இடையிலான கடல்வழி போக்குவரத்து சேவைகள் மேம்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட இரண்டு யான்மார் இயந்திரங்களால் வலுவூட்டப்படவுள்ளது. இதுதவிர, சுவீடன் தயாரிப்பான கட்டுப்பாட்டு அமைப்புகளும் அதில் பொருத்தப்படவுள்ளன. அவற்றுக்கு மேலாக பயணிகளுக்கு தேவையான அலுவலக அறை, தனியான ஓய்வறைகள், உள்ளிட்ட வசதிகளுடன் 10 உயர்தர சொகுசு வகுப்புகளும், 450 சொகுசு வகுப்புகளும், 350 சாதாரண சொகுசு அறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# போதைப் பொருள் தபால் விவகாரம் தூதுவர் பதவியைத் துறந்தார் நடிகை

முன்னாள் அழகியும், நடிகையுமான அஞ்சலா செனவிரட்ன தாம் போதைப்பொருள் சஞ்சிகை சம்பவத்தில் அபகீர்த்திக்கு உட்பட்டுள்ளதாக சவுதி அரேபிய தூதுவராலய பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இங்கிலாந்தில் இருந்து அஞ்சலாவின் பெயருக்கு அனுப்பப்பட்ட மூன்று பொதிகளில் ஹசீஸ் போதைப்பொருள் அடங்கிய சஞ்சிகைகள் அண்மையில் மத்திய அஞ்சல் பரிமாற்றகத்தில் சிக்கின. இந்த நிலையில், அவர் இதுவரை வகித்து வந்த சவுதி அரேபிய தூதுவராலய தொழிலையும் நேற்று முன்தினம் ராஜினாமா செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த அஞ்சல் மூல போதைப் பொருள் கடத்தல் சம்பவத்திற்கும் தமக்கும் தொடரபில்லை எனவும். சில ஊடகங்கள் தம்மீது குற்றம் இருப்பதாக தெரிவித்து செய்திகளை பரப்பி வருவ





தாகவும் அஞ்சலா கவலை வெளியிட்டுள்ளார். போதைப் பொருள் அனுப்பட்ட வீட்டு முகவரியில் தாம் 10 வருடங்களுக்கு முன்னரே வசித்ததாக அவர் கூறியுள்ளார். இதேவேளை போதைப் பொருள் அடங்கியிருந்ததாக கூறப்படும் தபால் பொதியை பெறுவதற்கு மத்திய தபால் பரிவர்தனை நிலையத்திற்குச் சென்ற பிரித்தானிய பிரஜையை மே 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

# முஸ்லிம் மக்களை துணைக்கு அழைக்கும் ஜனநாக மக்கள் முன்னணி தலைவர் மனோ



நாட்டில் தற்போது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாத அராஜகத்திற்கு எதிரான போராட்டத்தில், முஸ்லிம் மக்களும் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும் என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இன்றைய அரசாங்கம், இணைந்து செயற்பட்டால் நல்ல சிந்தனை கொண்ட பெரும்பான்மை சிங்கள மக்களை தட்டி எழுப்பமுடியும். அவர்களையும் நியாயத்தின் பக்கம் திசை திருப்பமுடியும். இத்தகைய சிந்தனை மாற்றம் முஸ்லிம் மக்கள் மத்தியில் உருவாக வேண்டும். பிரிபடாத ஐக்கிய இலங்கைக் குள்ளே, தமிழ்பேசும் மக்கள் தாம் செறிவாக வாழும் பகுதிகளில் தம்மைத் தாமே ஆள நினைக்கிறார்கள்.

தமிழ் மக்களின் சார்பாக நடந்த போராட்டம் பல்வேறு தவறுகளையும், காட்டிகொடுப்புகளையும், சகோதர படுகொலைகளையும் கண்டுள்ளது. தவறுகள் இல்லாத போராட்டம் உலகில் எங்குமே நடைபெறவில்லை. ஆனால் தவறுகளை பட்டியல் போடுவதன் மூலம் நிகழ்காலத்தில் இனவாதத்திற்கு துணை போக முடியாது. இதை முஸ்லிம தலைமைகள் புரிந்துகொள்ள வேண்டும்.

இனவாதத்திற்கு எதிரான தமிழர்களின் போராட்டத்தின் மூலம் இந்நாட்டில் உருவாகக் கூடிய அதிகார பரவலாக்கல் உள்ளிட்ட அனைத்து புது மாற்றங்களினால் வரக்கூடிய நன்மைகள், இந்நாட்டில் வாழும் அனைத்து சிறுபான்மை இனத்தவருக்கும் கிடைக்கும். அதை யாரும் தடை செய்யமுடியாது. ஆனால் தமது உரிமைகளுக்காக முஸ்லிம் மக்களும் போராடவேண்டும். அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும். அதேபோல் போராடாமல் நியாயம் கிடைக்காது என்பதை முஸ்லிம் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நீதி வேண்டி பிரார்த்தனை

ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமசந்திர தனக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தவர்களுக்கு கடவுள் உரிய தண்டனையினை வழங்க வேண்டும் என்ற பிரார்த்தனையை முன்வைத்து வேண்டுதல் தேங்காய் உடைத்து கடவுளை வேண்டிக்கொண்டார். இப்பிரார்த்தனையில் அவரது ஆதரவாளர்களும் இணைந்து தேங்காய் உடைத்தனர். இது நேற்று முன்தினம் பிற்பகல், கொழும்பு நீதிமன்றத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

# புதிய பஸ் தரிப்பு நிலையம் காரைநகரில் திறப்பு

காரைநகரின் நுழைவாயிலில் அமைந்துள்ள வலந்தலைச் சந்தியில் புதிய பஸ் தரிப்பு நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் தில்லையம்பலவாணர் ஞாபகார்த்தமாக காரை அபிவிருத்திச் சபையினால் 16 இலட்சம் ரூபா செலவில் வடமாகாணத்திலேயே சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு காரை அபிவிருத்திச் சபைத் தலைவர் க.சோமசேகரம் தலைமையில் வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர் எஸ்.சிவனேஸவரராசாவினால் திறந்துவைக்கப்பட்டது. (50)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.